திங்கள்

கார்த்திகை : : அணு 8



பேசும் படம்

தமிழ் நாட்டின் தலை சிறந்த
சினிமாப் பத்திரிகை

சென்ற பதினைந்து ஆண்டுகளாக இடைவிடாமல் சினிமாத்தொழில் அபிவிருத்திக்காகவும் ரஸிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்வதற்காகவும் உழைத்து வரும் தமிழ் மாதப் பத்திரிகை.

இந்தியப் பிராந்திய மொழிகளில் வெளியிடப்படும் மாதாந்திர சஞ்சிகைகளில் அதிக விநியோகம் கொண்டது இதுவே.

ஸ்டுடியோ செய்திகள், படக்காட்சிகள், இயற்கை வர்ணப்படங்கள் முதலான பல்வேறு விசேஷ அம்சங்கள் கொண்டது.

தனிப் பிரதி 12 அணா
வருஷ சந்தா ரூ. 9.

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்
சென்னை – 2.

போன் : 63 தந்தி : SIMCO



தினம் குடிசைத் தொழிலாகத் தயாராகும் ஐந்து லக்ஷம் தீப்பெட்டிகளில் டஜன்களில் ரூ. 0-1-0 முதல் ரூ. 10–0–0 வரை கூபன்கள் வைத்திருக்கிறோம்.

எங்கள் 40 குச்சி கோபுரம் மார்க்; சிம்கோ ஸேலட் மார்க்; சிம்கோ சைக்கிள் மார்க்; மைனர் சைஸ் சீனு லேடி மார்க்; சிம்கோ 60 குச்சி வேட்டை சிங்கம் மார்க் தீக்குச்சிகள்-

★ நீண்ட நேரம் நின்று எரியக்கூடியவை.

★ பேய்க் காற்றுக்கும் அணையாமல் பொருத்தக் கூடியவை.

★ அடை மழைக்கும் குச்சி கழிவு இல்லாமல் பொருத்தக் கூடியவை.

சிம்கோ, சிவகாசி.

திங்கள் ★★★★★

மாதப் பத்திரிகை

சந்தா விவரம்

உள் நாடு ஒரு வருஷம்	ரூ. 6
,, அரை வருஷம்	ரூ. 3
வெளிநாடு ஒரு வருஷம்	ரூ. 8
தனிப்பிரதி விலை	அணா 8

விளம்பர விகிதம்

சாதாரண முழுப்பக்கம்	ரூ. 100
,, அரைப்பக்கம்	ரூ. 50
,, கால்பக்கம்	ரூ. 30
கடைசி அட்டை (மூவர்ணம்)	ரூ. 300
உள் அட்டை	ரூ. 150
முகப்புப் பக்கம்	ரூ. 150

கட்டுரையாளர்களுக்கு

'திங்கள்' பத்திரிகையில் பிரசுரம் செய்ய கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. நவீன முறையில் எழுதப்படும் கட்டுரைகளுக்கு முக்யத்துவம் அளிக்கப்படும். பழைய விஷயங்களானாலும் புதிய முறையில் எழுதப்பட வேண்டும். எல்லாவித ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கும் நமது பத்திரிகையில் இடம் உண்டு. சொந்த அனுபவங்களைப்பற்றி எழுதலாம். அதிசய சம்பவங்களைப்பற்றியும் கூறலாம். பிரசுரிக்கப்பட்ட எல்லாக் கட்டுரைகளுக்கும் சன்மானம் உண்டு. பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பிப்பெற விரும்புவோர் போதிய தபால் தலைகள் அனுப்பி வைக்கவேண்டும்.

போட்டோ நிபுணர்களுக்கு

நீங்கள் எடுக்கும் போட்டோக்களை எங்கள் பார்வைக்கு அனுப்புங்கள். தனிப்பட்ட போட்டோக்கள் பத்திரிகையில் இடம்பெறாது. படக்கட்டுரைகளுக்கு ஏற்றதான தொடர் போட்டோக்கள் மட்டுமே எங்களுக்குத் தேவை. போட்டோக்களை அனுப்பும்போது அவற்றின் விளக்க உரைகளையும் அனுப்பி வைக்கவேண்டும்.

கடிதங்கள்

வியாபார சம்பந்தப்பட்ட கடிதங்கள், 'ராமநாத் பப்ளிகேஷன்ஸ் சென்னை-2' என்று விலாசமிட்டு எழுதப்பட வேண்டும்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கட்டுரைகள், போட்டோக்கள் முதலியவற்றை ஆசிரியர், 'திங்கள்', சென்னை-2 என்று விலாசமிடவும். காரியாலய சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு காரியாலய உத்தியோகஸ்தர்களின் சொந்தப் பெயர்களில் கடிதப் போக்குவரத்து கூடாது.

'ஹாஸ்ய சம்பவம்', 'மறக்கமுடியாத சம்பவம்' குறித்து அனுப்பப்படும் விஷயதானங்கள் பற்றிய கடிதங்களுக்கு பதில் எழுத இயலாது.

காரியாலயம்:

17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

கோட்டாகுடி பெரியநாயக்கர்
வெ. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

திங்கள்

நவம்பர் 1956

ஆண்டு 1 ★ துன்முகி—கார்த்திகை ★ மாதம்-11

இம்மாதம்

நான் பெற்ற பாக்கியம் ... 8
மூவகை சித்திரங்கள் ... 13
அபிஸீனியா ... 17
ஸ்ரீ பிரகாசாவுடன் ஒரு நாள் ... 27
அழகே உருவான ஆடும் பெருமான் ... 34
வாசனை சாந்து உற்பத்தி ... 36
கர்ண மகாராஜன் சண்டை ... 37
படிக்காசுப் புலவர் ... 42
தாவர வளர்ச்சிக்கான உணவுகள் ... 44
கார்த்திகைத் திருநாள் ... 59
விந்தை உள்ளம் ... 63
இதோ, உலகம்! ... 66
ஈழத்துத் துறைமுகங்கள் ... 70
பரோடா ... 73
மீன் வளர்த்தல் ... 77
பொருள் நூல் ... 82
ஆடல் கலையில் அரிய மூன்று ... 85
ஜப்பானில் திருமணம் ... 87
தேகாப்பியாசம் ... 89
மரணமும் மனிதனும் ... 92
கப்பல் செப்பனிடும் சாலை ... 95
விக்டர் யூகோவின் காதல் ... 97
அற்புத மூலிகைகள் ... 99
பூச்சியைத்தின்று வளரும் பூண்டுகள் ... 102
மணம் கமழ் கஸ்தூரி ... 104
குமரி தரிசனம் ... 105
நமது நிருபர் ... 115

படக்கட்டுரை : கன்னியா குமரி

THINGAL, Tamil Monthly Magazine. Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 17, General Patters Road, Madras-2. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath.

திங்கள்

வணக்கம்

சென்ற திங்களில் பல முக்கியமான நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. அவைகள் சம்பந்தமான விஷயங்களை எல்லாம் சேகரித்து, இவ்விதழில் வெளியிட்டிருக்கிறோம்.

நாடுகள் வரிசையில் 'அபிஸீனியா' இடம் பெற்றிருக்கிறது. 'குமரி தரிசனம்' என்ற கட்டுரை, தமிழ்நாட்டுக்கு வந்த குமரியை வரவேற்று எழுதப்பட்டுள்ளதாகும். குமரி ஜில்லா படங்கள் படக் கட்டுரையாக இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.

கவர்னர் ஸ்ரீ பிரகாசா நம்மிடம் விடைபெற்றுக்கொள்கிறார். அவரைப் பேட்டி கண்ட விவரம் இந்த இதழின் விசேஷ அம்சமாகும்.

'மூவகைச் சித்திரங்கள்', 'தேசப்படங்கள் தயாரிப்பு,' முதலியவைகள் மிகப்பொருள் பொதிந்த கட்டுரைகளாகும்.

புனித க்ஷேத்திர வரிசையில் 'திருவண்ணாமலை' இந்த இதழில் இடம் பெற்றுள்ளது. அடுத்த இதழ் பன்னிரண்டாவது இதழாகும். இதுவரை வெளியான 'திங்கள்' இதழ்களில் என்ன விஷயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்ற ஜாபிதாவை மார்கழி இதழில் வெளியிட உத்தேசித்திருக்கிறோம். சில நேயர்கள் ஏற்கனவே வெளிவந்த விஷயங்களைப் பற்றியே எழுதுகிறார்கள். அவர்கள் அந்த ஜாபிதாவைப் பார்த்து, புது விஷயங்களைப் பொறுக்கிக் கொள்ள முயற்சித்தல் நலம்.

வாசக அன்பர்கள் 'திங்களி'ன் வளர்ச்சி குறித்து பல அரிய யோசனைகளைத் தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர். அவர்கள் யோசனைகளுக்கு எமது மனங்கனிந்த நன்றிகள். அத்தகைய யோசனைகளில் சிலவற்றை விரைவில் செயலுருவில் காட்டி, அவர்களது நீடித்த அன்பைப்பெற முயலுகிறோம்.

திங்களுக்குத் திங்கள்

பதினான்கு ராஜ்யங்களாகவும், ஆறு சிறிய மத்திய ஆட்சிப் பகுதிகளாகவும் நம் நாடு நவம்பர் 1உ திருத்தி யமைக்கப்பட்டுள்ளது. சர்தார் படேல் உருவாக்கிய இந்திய ஐக்கியத்தை அஸ்திவாரமாக கொண்டுதான் இப்போதைய சீரமைப்பு செய்யப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவில் தக்ஷிணப் பிரதேசம் ஏற்படுமா என்பது இனி பொறுத்திருந்து பார்த்துதான் தெரிய வேண்டும். தனித்தமிழ் நாடு வேண்டும் என்று கேட்டவர்களுக்கு தமிழ்நாடு தானாகவே கிடைத்து விட்டது.

* * *

சில நாட்களுக்கு முன் ராஜாஜி, காங்கிரஸ் நல்லபடி வேலை செய்ய ஒரு நல்ல எதிர் கட்சி வேண்டும் என்று விரும்புவதாகக் கூறினார். எதிர்கட்சி அமைப்பவர்கள் பழைய காங்கிரஸ்காரர்களைப் போல் தாங்களும் தன்னலமற்றவர்கள், தேச நலனில் அக்கரை கொண்டவர்கள் என்று நிரூபித்தால், நாட்டில் அவர்களுக்கு ஆதரவு பெருகும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். ஜனநாயகம் திறமையாக அமுல்பட பலமான எதிர்கட்சி மிக அவசியம். எதிர்ப்பில்லாத ஒரே கட்சியின் ஆட்சி ஏகபோக ஆட்சியாக மாறி விடுவது ஒரு பெரும் ஆபத்தாகும்.

* * *

எது ஏற்படக் கூடாதென்று பண்டித நேரு இவ்வளவு காலம் பாடுபட்டு வந்தாரோ அது ஏற்பட்டே விட்டது! எகிப்து மீது இஸ்ரேல் பாய்ந்து ஒரு பெரும் போரையே ஏற்படுத்த விதை ஊன்றி விட்டது. தங்களுடைய ஆதிக்கத்திற்குட்பட்ட பல நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கி, பாராட்டுதல்களைப் பெற்ற பிரிட்டனும் பிரான்ஸும் இந்தப் போரில் ஈடுபட்டதினால், நன்மதிப்பைப் போக்கிக் கொண்டிருக்கின்றன. இந்தப் போர் இப்படியே அமுங்குமா என்பது பற்றி இப்போது எதுவும் சொல்வதற்கில்லை.

* * *

இஸ்ரேல் எகிப்தை திடீரென தாக்கவேண்டிய நோக்கம் என்ன என்பது தெளிவாக்கப் படவில்லை. இஸ்ரேலின் கடல், தரை மார்க்கங்களை எகிப்து மறித்ததாகவும் அதற்குப் பதிலாகவே இந்த "பதில்" தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் இஸ்ரேல் சமாதானம் சொல்கிறது. எகிப்து எப்போது இம்மாதிரி மறித்தது என்பது தெரியவில்லை. இஸ்ரேல் மீது தாக்குதலை நடத்த வசதியுள்ள பல இடங்கள் ஸினயில் உள்ளதாகவும் அவைகளை அழித்து விடுவதற்கே இஸ்ரேல் முற்பட்டிருக்கலாம் என்று கருத இடமிருக்கிறது.

சூயஸ் கால்வாய் வழியாக நிர்பந்த மற்ற போக்கு வரத்து உரிமை இஸ்ரேலிய கப்பல்களுக்கு கிடைக்கச் செய்வது தான் இஸ்ரேலிய நடவடிக்கையின் நோக்கம் என்றால் அதற்காக ஐ.நா.வை அணுகியிருக்கலாம். தாக்குதலில் இறங்கியிருக்க வேண்டியதில்லை.

எகிப்தை ஆக்ரமித்திருப்பது இஸ்ரேல். அதை எதிர்த்து போராடுகிறது எகிப்து. இந்தச் சமயத்தில் கிடைத்தது ஆதாயம் என்ற போக்கில் பிரிட்டனும் பிரான்ஸும் நடந்து கொண்டிருக்கின்றன.

போரை இரு சாராரும் நிறுத்த வேண்டும் என்றும் இஸ்ரேலுக்கு யாரும் உதவி அளிக்கக் கூடாதென்றும். எந்நாடும்ஐ.நா.கட்டளைப்படி தவிர, தானாக நடவடிக்கையில் இறங்கலாகாதென்றும், ஐ.நா. கௌன்ஸிலில் அமெரிக்கா ஒரு பிரேரணையைக் கொண்டு வந்தது. அதை பிரிட்டனும் பிரான்ஸும் எதிர்த்து, (வீடோ) ரத்து அதிகாரப் பிரயோகம் செய்து தோற்கடித்து விட்டன.

இதெல்லாம் கவனித்தால், இஸ்ரேலைத் தாக்கச் சொல்லி அதை ஒரு சாக்காகக் கொண்டு எகிப்தின் பகுதியான சூயெஸ் பிரதேசத்தை பிரிட்டன் கைக் பற்ற சதி செய்திருக்கிறது என்றுதான் உலகம் நினைக்கும். அமெரிக்காவை மதிக்காமல் பிரிட்டனும் பிரான்ஸும் இம் மாதிரி நடந்து கொள்வது ஐ.நா.வை சமாப்தி செய்யக் கூடிய அளவுக்கு அபாயமுள்ளது.

போரை உடனே நிறுத்த வேண்டும்; இஸ்ரேல் படைகள் தமது பழைய ஸ்தானங்களுக்கு வாபஸாக வேண்டும் என்பது ஐ.நா.வின் கோரிக்கை. எகிப்து இதற்கு இசைந்தது. ஆனால் பிறரும் போரை நிறுத்த வேண்டும் என்று கோரியது. இது நியாயமான கோரிக்கையே யாகும். பிரிட்டன் பிரான்ஸ், இஸ்ரேல் மூன்றும் ஐ.நா. கோரிக்கையை நிராகரித்து விட்டன.

போர் நிறுத்தம் ஏற்படும் என்ற செய்தி எல்லோருக்கும் ஓரளவு நிம்மதியைக் கொடுத்தது. ஆனால் போர் நிறுத்தம் பற்றி முரணான செய்திகள் கிடைத்துள்ளன.

ரஷ்யா எகிப்துக்கு சாதகமாக குறுக்கிடுவதென முடிவு செய்து விட்டதாக பிரிட்டனையும் பிரான்ஸையும் இது எச்சரித்திருக்கிறது. இது அலட்சியம் செய்யக்கூடியதல்ல.

* • *

விடாமல் கிளர்ச்சி செய்து வந்த என். ஜி. ஓ.க்களுக்கு சென்னை சர்க்கார் கருணை காட்டி ரூ. 5 கிராக்கிப் படியில் உயர்வு காட்டியிருக்கின்றனர். மிகக் குறைவாக சம்பளம் வாங்கும் சிப்பந்திகளுக்கு குறைந்த பட்சம் ரூ. 25 பஞ்சப்படி கிடைக்கும். இந்த உயர்வினால் அரசாங்கத்திற்கு அதிகப்படியாக ஒரு கோடி தொண்ணூறு லட்சம் ரூபாய் செலவாகிறதாம்.

* * *

அமெரிக்காவில் ஐஸன் ஹோவர் மீண்டும் நான்கு வருஷங்களுக்கு ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவர்தான் வெற்றிபெற்றாரே யொழிய, இவருடைய கட்சியான குடியரசுக் கட்சி செனட்டிலும், பிரதிநிதித்துவ சபையிலும் ஏராளமான ஸ்தானங்களைப் பெறமுடியவில்லை.

அணுகுண்டு, ஜலவாயு குண்டுகளின் சிருஷ்டியில் முக்கிய கவனம் செலுத்தும் அமெரிக்காவின் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்ட அட்லாய்

ஸ்டீவன்ஸன் இந்தப் பரிசோதனைகளை நிறுத்திவிட வேண்டும் என்பதைதன் தேர்தல் அம்சத்தின் முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தார். அவர் தோல்வி இந்த அணுகுண்டு சோதனையை மேலும் நடத்தவே தூண்டும்.

* * *

77 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்திருக்கிறார் ஸ்ரீ சங்கரலிங்கநாடார். அவர் எதற்காக உண்ணாவிரதமிருந்தாரோ அக்கோரிக்கைகள் எல்லாம் நியாயமானவையே. ஆனால் நாடு சுதந்திரமடைந்த பின்பு உண்ணாவிரதம் இருந்து மனமாற்றத்தை ஏற்படுத்தும் முறையை ஆதரிப்பதற்கில்லை. இவருடைய உயிரை சர்க்கார் மனதுவைத்தால் காப்பாற்றியிருக்கலாம். சிறந்த தேசத் தியாகி ஒருவரை இழக்கும்படியாகிவிட்டது. அவரது ஆத்மா சாந்தியடைவதாக. இத்தகைய உண்ணாவிரதங்கள் இனி மேலும் நீடிக்க வேண்டாம்,

* * *

கவர்னர் பதவி வெறும் அலங்காரப் பதவி அல்ல. மிகவும் பொறுப்புள்ள பதவி. புதிய ராஜ்யங்கள் ஏற்பட்டிருப்பதின் விளைவாக கவர்னர்களின் பொருப்பு இன்னும் அதிகமாயிருக்கிறது. ராஜ்யங்கள் எல்லை சம்பந்தமான பிரச்னை இன்னும் தீர்ந்தபாடில்லை. ஒரு குறிப்பிட்ட மொழிவாரி ராஜ்யத்தில் வேறு மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள், இவர்களுக்கு நியாயம் வழங்கப்பட்டு, நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும். இவைகளுக்கான விசேஷ அதிகாரங்கள் கவர்னருக்கு இருக்கவேண்டும் என்று ராஜ்யப் புனரமைப்பு கமிஷன் வற்புறுத்தியிருக்கிறது.

சென்னையில் சென்ற நான்கு வருஷங்கள் கவர்னராக இருந்து மக்களின் நன்மதிப்பை பெற்ற ஸ்ரீபிரகாசா பம்பாய்க்கு கவர்னராகப் போகிறார். சென்னையின் கவர்னராக யார் நியமிக்கப்படவிருக்கிறார்கள் என்பது இன்னும் நிச்சயமாகவில்லை.

• • *

உலக சமாதானத்திற்குப் பாடுபட்டு வருவதாக சொல்லிக் கொண்டு வரும் ரஷ்யா சென்ற இரண்டு மூன்று வாரங்களாக அண்டையிலுள்ள நாடுகளிடம் நடந்து கொள்ளும் முறை அதன் நோக்கங்களை சந்தேகிக்க வேண்டியதாக இருக்கின்றது. போலந்திலும் ஹங்கேரியிலும் ரஷ்யாவின் பிடி தளரும்படியான ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. போலந்து சற்று பணிந்து போய் விட்டது போலத் தோன்றுகிறது. ஆனால் ஹங்கேரி எப்படியும் விடுதலை பெறுவதென்று உறுதி கொண்டிருப்பதாகத் தெரிகிறது. டிட்டோ காட்டிய பாதையில் ஹங்கேரியும் போலந்தும் செல்ல விரும்புகின்றன. காலம் மாறி வருவதை ரஷ்யா கவனித்தேயாக வேண்டும்.

ஹங்கேரிக்கு ஐ.நா. தன் மேற்பார்வையாளர்களை அனுப்பவிருக்கிறது. சீக்கிரமே நிலைமை சீர்படலாம்.

இவ்விதழில் வெளியாகியுள்ள 'கார்த்திகைத் திருநாள்' கட்டுரைக்குப் படங்கள் உதவியவர்: புஷ்பத்துறை சுப்பிரமண்யம்.

நான் பெற்ற பாக்கியம்

கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார்

ஸ்வாமி விவேகானந்தரை தன் பால்ய வயதில் சந்திக்கப் பெற்ற பாக்கியத்தை நினைவுபடுத்தி இக்கட்டுரையை எழுதியிருக்கிறார் ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள்.

இந்தச் சம்பவம் நான் இளைஞனாக திருவனந்தபுரம் கல்லூரியில் மாணவனாகப் படித்துக் கொண்டிருந்த பொழுது நடந்தது. இது *1843*-ம் ஆண்டில் ஏற்பட்டது. அறுபது ஆண்டுகள் கடந்திருந்தாலும் நேற்று நடந்ததுபோல் என் மனத் திரையில் இந்த அற்புத சம்பவம் காட்சி அளிக்கின்றது. நள்ளிரவில் திங்களின் ஒளி எப்படி இன்பத்தையும் உற்சாகத்தையும் அளிக்குமோ அப்படி இது எனக்கு இன்பத்தையும் உற்சாகத்தையும் அளிக்கின்றது.

அச்சமயம் என் தந்தை பேராசிரியர் கே. சுந்தரராம அய்யர் அனந்தசயன சமஸ்தான இளவரசருக்கு பி. ஏ. பரீட்சைக்குப் படிப்பிக்கும் ஆசிரியராக இருந்தார். நாங்கள் குடியிருந்தவீடு அனந்த சயனம் கோட்டைக்குள் பத்மநாப சுவாமி கோயிலுக்கும் பத்ம தீர்த்தம் என்ற அந்தக் கோயில் புஷ்கரிணிக்கும் அருகில் இருந்தது. அனந்த சயன சமஸ்தான அரசருடைய அரண்மனையும் அருகில் இருந்தது. அரசர் இப்பொழுது இருக்குமிடம் கோட்டைக்கு வெளியிலுள்ள கௌடியார் அரண்மனை.

1886-ம் ஆண்டில் ராம கிருஷ்ண பரமஹம்சர் உயிர் நீத்து சமாதியடைந்தார். அதற்குப்பின் அவருடைய சீடர்களில் சிறந்த மேதாவியான விவேகானந்த சுவாமிகள் இமயத்தில் தவஞ்செய்யச் சென்றார். உலகத்திலேயே ஒப்பற்ற உயரமுள்ள அந்த தெய்வீகம் பொருந்திய மலைத் தொடரில் அவர் தவஞ் செய்து மனச்சாந்தியையும் ஆன்மீக ஞான ஒளியையும் பெற்றார். இப்படி அங்கே சில ஆண்டுகள் இருந்து, பிறகு பாரத நாட்டை நேர்முகமாகக் கண்டு களிக்க கால்நடையாகப் பிரயாணம் செய்தார். அரபிக் கடற்கரை ஓரமாக நடந்து வந்து பம்பாய், பூனா, மைசூர், கொச்சி முதலிய நகரங்களைக் கடந்து அனந்தசயனம்வந்தார். கொச்சியிலிருந்த ஒரு பிரமுகரிடம் என் தந்தைக்குக் கடிதம் வாங்கிக்கொண்டு என் தந்தையைக் காணவந்தார். இந்த சம்பவம் அவர் *1893* ஆண்டு அமெரிக்காவில் சிகாகோ நகரத்தில் நடந்த சர்வ சமய மகாநாட்டுக்கு விஜயம் செய்வதற்கு முன் ஏற்பட்ட சம்பவம்.

ஒரு நாள் மாலைப் பொழுதில் கதிரவனுடைய பல வர்ணங்கள் நிறைந்த ஒளி வானத்தில் விளங்க, ஊரெங்கும் அமைதி நிலவும் காலத்தில் என் வீட்டு வாயிற்படியில் ஆஜானுபாகுவான ஒருவரைக்கண்டேன். அவர் தன் உடலில் கழுத்து

முதல் திருவடி வரையில் காஷாய மேலங்கியை நெடுஞ் சட்டையாக அணிந்திருந் தார். அவர் தன் தலையில் ஒரு நீண்ட காஷாய வஸ்திரத் தைத் தலைப்பாகையாகக் கட்டி யிருந்தார். அவருடைய தோற் றம் மிக கம்பீரமாகவும் கவர்ச்சிகரமாகவும் இருந்தது. கண்களை இமைக்க மறந்து நான் அவரையே நோக்கினேன். ''அடே! பையா! சுந்தரராமய் யர் உள்ளே இருக்கின்றாரா? நீ அவர் மகனா?'' என்று கேட் டார். நான் ''ஆம்'' என்றேன். ''இந்தக் கடிதத்தை அவரிடம் கொடு'' என்று கூறினார். என் தந்தை எங்கள்வீட்டுமெத்தைக் கட்டிடத்தில் ஓர் அறையில் ஏதோ படித்துக் கொண்டிருந் தார். நான் கடிதத்துடன் வேகமாக படிக்கட்டுகள் ஏறி, ''அப்பா! அப்பா! ஒரு மகா ராஜா நம்முடைய வீட்டு வாயி லில் உங்களைக் காண வந்திருக் கின்றார்'' என்று கூறினேன். அவர் நகைத்து,'நீ என்ன பைத் தியக்காரனாக இருக்கின்றாய்! மகாராஜாக்கள் நம்மைப் போன்ற கீழ்த்தர மக்கள் வீட் டுக்கு வருவார்களா?'' என்றார். அதற்கு நான், ''அதெல்லாம் எனக்குத் தெரியாது. வந்திருப் பவர் மகாராஜா'' என்றேன். அவர் நான் கொண்டு வந்த கடி தத்தை வாங்கிப் படித்து விட்டுக் கீழே இறங்கி வந்து அன்று வந்த பெரியாரை மேல்மாடிக்கு அழைத்துச் சென்று, வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார். பிறகு என் தந்தை கீழே இறங்கி வந்து என்னிடத்திலும் என் தாயிடத் திலும், ''வந்திருப்பவர் அரசர் தான். ஆனால் அவருடைய சாம்ராஜ்யம் உலக சாம்ராஜ்ய மல்ல; ஆன்மீக சாம்ராஜ்யம். அவர் மிகப் பெரிய யோகி; மிக உயர்ந்த ஞானி'' என்றார்.

அதற்குப்பின் அப்பெரியார் ஒன்பது நாட்கள் எங்களுடன் தங்கினார். அந்த நாட்கள் ஒரு ஆன்மிக நவராத்திரி என்று கூறலாம்; அவரும் என் தந்தை யும் மிகுந்த அன்புடன் அள வளாவிப் பேசிக்கொண்டிருந் தார்கள். சிறுவனான எனக்கு அவர்கள் பேசுவது விளங்க வில்லை.

ஒரு நாள் நான் காளிதாச ருடைய 'குமார சம்பவத்'தைப் படித்துக் கொண்டிருந்தேன். முதல் சர்க்கத்தில் இமயத்தை வர்ணிக்கும் செய்யுட்களை சங்கீத முறையைத் தழுவிக் கூறிக்கொண்டிருந்தேன். சுவாமிகள், ''அந்த சர்க்கத்தை முழுவதையும் ஒப்பிக்க முடியுமா?'' என்றார். உடனே முழுவதையும் ஒப்பித்தேன். அது எனக்கு மனப்பாடமாக

ஸ்வாமி விவேகானந்தா

இருந்தது. அவர் எனக்கு ஆசி கூறி முதல் செய்யுளுக்கு என்னைப் பொருள் கூறச் சொன்னார்.

(வட திசையில் தெய்வீகம் பொருந்திய மலை ஹிமாலயம் இருக்கின்றது. அது கிழக்குக் கடலையும் மேற்குக் கடலையும் தொட்டுக் கொண்டிருக்கின்றது. அது உலகத்திற்கே ஒரு அளவுகோல்) என ஆசிரியர் எனக்குரைத்தபடி நான் சுவாமிகளிடத்தில் அச்செய்யுளின் பொருளைக் கூறினேன். அவர், "நீ சொன்னது தவறல்ல. ஆனால் காளிதாசர் மகா கவியானதால் அவருடைய ஆழ்ந்த கருத்தைத் துருவிப் பார்க்க வேண்டும். நுட்பமான உட்கருத்தைக் கூறுகிறேன். நினைவில் வைத்துக்கொள்" என்றார். நானும் என் மனம் லயித்துக் கேட்டேன்.

"கவி இதயத்தை அகக்கண்ணால் காண வேண்டும். இமயம் ஒரு கற்கோட்டையின் கொத்தளச் சுவர் போல அல்ல. அது தெய்வீகம் பொருந்திய சிருஷ்டி. அது 2000 மைல், நீளம்,200 மைல் அகலம், ஐந்து மைல் உயரமான படைப்பு. உலகத்திலேயே அத்தகைய மலை கிடையாது. அது வட ஆசியா–திபெத்திலிருந்து வீசும் பனிக்காற்றுகளிலிருந்து பாரத நாட்டைக் காத்து அந்த நாட்டை சம சீதோஷ்ணமாக வைத்து, அதற்குப்பல சிறந்த ஆறுகளை அளித்து அதை மிக உயர்ந்தச் செழிப்பான நாடாக அமைத்திருக்கின்றது. அதன் நிழலில் வளர்ந்த பண்பாடு ஒப்பற்ற நாகரீகம். உலகத்திற்கே இந்த நாடு உதாரணமாக, வழிகாட்டியாக அமைந்துள்ளது. இந்திய நாகரீகம் ஒப்புயர்வற்றது. ஏனைய நாகரீகங்களுடைய சிறப்பை இந்த நாகரீகத்தை அளவு கோலாக வைத்துக் கொண்டு அளக்க வேண்டும். இந்த நாகரீகத்தை ஒத்திருந்தால்தான் அவைகளுக்குச் சிறப்பு. ஆகையால்தான் இமயத்தை உலக அளவு கோலாக மகாகவி கூறினார்" என்றார்.

இதைக் கேட்டவுடன் என் மனதில் உண்டான இன்பத்திற்கும் ஆச்சர்யத்திற்கும் எல்லையே இல்லை. எனக்கு அமுதம் உண்டவனைப் போல உணர்ச்சி ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தையும் உபதேசத்தையும் நான் உயிரிருக்கும் வரையில் மறக்கமாட்டேன். என் பின் பிறப்புகளிலும் இந்த உணர்ச்சி என்னை விட்டு நீங்காது.

பிறகு சுவாமிகள் கன்யாகுமரிக்குச் சென்றார். குமரி முனை அருகில் உள்ள பாறைக்குச் சென்று பாரததேவியின் அழகையும் பெருமையையும் பற்றி தியானம் செய்ய விரும்பினார். அவ்விடத்திலிருந்த தோணிக்காரன் அவரைப் படகில் அந்தப் பாறைக்குக் கொண்டு போக ஒரு அணா கேட்டான். அவர் "அப்பா! நான் துறவி. என்னிடம் பணமில்லை" என்றார். அவன் அவரைத் தோணியில் ஏற்ற மறுத்துவிட்டான். அவர் நீந்திச் சென்று அன்றிரவு முழுவதும் தன் இஷ்ட தெய்வமான பாரததேவியை பாரத நாட்டுத் தென் முனைப் பக்கத்திலிருந்து இடைவிடாது தியானித்து இன்புற்றார்.

விவேகானந்தர் சிகாகோவில் நிகழ்த்திய பிரசங்கத்தினால் ஹிந்து சமயத்தின் சிறப்பை உலகம் உணர முடிந்தது. ★

புதிய ராஜ்யங்கள்

ராஜ்ய சீரமைப்பை யொட்டி ஏற்பட்டுள்ள ராஜ்யங்களில் சில முக்கிய அம்சங்களும் மாறுதல்களும் ஏற்பட்டுள்ளன.

வங்காளக் குடாக்கடல், அரபிக்கடல், இந்துமகா சமுத்திரம் இம்மூன்றும் கலக்கும் கன்னியா குமரிமுனை சென்னை (தமிழ்நாடு) ராஜ்யத்துடன் சேர்ந்திருக்கிறது. இது ஒரு புது ஜில்லாவாக்கப்பட்டு தலைமை ஸ்தலம் நாகர்கோயிலாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

25 வருஷ காலமாக பத்மநாப தாஸராக இருந்து அரசுபுரிந்த திருவாங்கூர் மன்னரும், ஹைதராபாத் நிஜாமும் சாதாரணப் பிரஜைகளாகச் செய்யப்பட்டுள்ளனர். உலகப் பிரசித்தி பெற்ற அஜந்தா, எல்லோராக் குகைகள் இப்போது ஹைதராபாத்தில் இல்லை. பம்பாய் ராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டு விட்டன. ஆப்பிரிக்காவுக்கு வெளியே சிங்கங்கள் வசிக்கும் காடுகள் இதுவரை சௌராஷ்டிராவுக்குச் சொந்தமாக இருந்தன. இவை பம்பாய் ராஜ்யத்துடன் சேர்ந்து விட்டன. அபூமலை தற்போது ராஜஸ்தானுடன் இணைந்து விட்டது.

நிர்வாகத் தஸ்தாவேஜுகளிலிருந்து 'ராஜ்யங்கள்' என்ற முறையில் பின் கண்ட பெயர்கள் மறைந்து விட்டன: திருவாங்கூர்—கொச்சி, ஹைதராபாத், குடகு, போபால், சௌராஷ்டிரா, கட்ச், மத்ய பாரத், ஆஜ்மீர், விந்தியப் பிரதேசம், பெப்ஸு ஆகியவை.

இப்போதுள்ள அமைப்பில் மிகப் பெரிய ராஜ்யம் பம்பாய். மிகச் சிறிது கேரள ராஜ்யம். பம்பாய் ராஜ்யத்தில் 12-ல் ஒரு பங்கு உள்ளது கேரளம்.

மிகுந்த ஜனத்தொகை கொண்டது உத்தரப்பிரதேசம்—6 கோடி 30 லட்சம் பேர். நாட்டின் மொத்த ஜனத்தொகையில் ஆறில் ஒன்ருகும். ராஜ்யங்கள் எல்லாவற்றிலும் குறைந்த ஜனத்தொகை உள்ளது ஜம்மு – காஷ்மீர். இதன் ஜனத்தொகை 45 லட்சம். இது வரை தலைநகராக இருந்து சாதாரண நகரமாக மாறியவைகள்: கர்நூல் (ஆந்திரா), மெர்க்காரா (குடகு), ராஜ்கோட்டை (சௌராஷ்டிரா), பூஜ் (கட்ச்) இந்தூர் (குவாலியர் – மத்யபாரத்) ரீவா (விந்தியப்பிரதேசம்) ஆஜ்மீர் (ஆஜ்மீர்) பாடியாலா (பெப்ஸு).



கேரளத்தில் புது ரயில் பாதை

அராபிக் கடலை யொட்டிய கடற்கரைப் பிரதேசத்தில் ஏராளமான ஆறுகளும் மலைகளும் இருப்பதால், அந்தப் பிரதேசத்தில் இதுவரையில் ரயில் போடப்பட வில்லை. எர்ணுகுளம், கொச்சிக்குத் தெற்கில் ரயில் கிடையாது. கொல்லத்திற்கும் திருவனந்தபுரத்திற்கும் மட்டும் ரயில் போக்குவரத்து உண்டு. எர்ணுகுளத்திலிருந்து கொல்லம் வரையில் இப்போது ரயில் பாதை அமைக்கப்பட்டு வருகிறது. இதில்இப்போது மூன்றில் ஒரு பங்கு வேலை முடிந்திருக்கிறது. அதாவது எர்ணுகுளத்திலிருந்து கோட்டயம் வரை ரயில் பாதை போடப்பட்டு,ரயில் வெள்ளோட்டமும் பெரும் திருவிழாவைப் போல நடைபெற்றது.

அந்தப் பக்கத்திலுள்ள கிராம மக்களில் அநேகர் ரயிலையே பார்த்ததில்லையாம். அவர்கள் ரயில்வே பாதையோரங்களில் மணிக்கணக்காக நின்று மிக அமைதியாகவும் ஒழுங்காகவும் நடந்து கொண்டது மிகவும் நன்றாக இருந்தது. அவ்வளவு கட்டுப்பாடும் ஒழுங்கும் நம் பக்கங்களில் நாம் கண்டிருக்கவே முடியாது.

கோட்டயத்தில் ரயில்வந்து சேர்ந்ததும் விடப்பட்ட வாண வேடிக்கைகள் இருக்கிறதே, அதை வருணிக்கவே முடியாது. அவ்வளவுஜோராக இருந்தது.



இந்தப் பகுதியில் ஏராளமான ஏரிகளும் ஓடைகளும் இருப்பதால், மோட்டார் வண்டிகள், லாரிகள், பஸ்கள் எல்லாம் படகில் ஏறிச் செல்ல வேண்டியிருக்கின்றது. எர்ணுகுளம் – கொல்லம் ரயில்பாதை போட்டு முடிப்பதற்குள் சுமார் 50 பெரிய பாலங்களும் சுமார் 400 சிறு பாலங்களும் அமைக்கப்பட்டு விட்டன.

இந்த ரயில் பாதை அமைப்பு வேலை 1952 டிஸம்பர் 24உ பிரதம மந்திரி பண்டிட் ஜவாஹர்லால் நேருவால் ஆரம்பித்துவைக்கப்பட்டது அநேகமாக அடுத்த வருஷ முடிவிற்குள் இந்த ரயில் பாதை அமைப்பு பூர்த்தியாகி விடலாம். இதே மாதிரி சேலத்திலிருந்து பங்களூருக்கும், சின்ன சேலத்திலிருந்து செங்கற்பட்டுக்கும் ரயில் போடுவதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இத்தகைய புது ரயில் மார்க்கங்கள் வாணிப வளர்ச்சிக்கும் இதுவரை தொடர்பு கொள்ள இயலாதபிராந்திய மக்களுடன் தொடர்பு கொள்ளவும் பேருதவியாக இருக்கும். ★

மூவகைச் சித்திரங்கள்

'சீமா'

அழகுணர்ச்சியைப் பிரதிபலிக்கும் 'ஓரியண்டல் ஆர்ட்'

சித்திரமும் கைப்பழக்கம் என்பது பழமொழி. ஆனல் வெறும் கைப்பழக்கத்தால் மட்டும் சித்திரம் வந்து விடாது. போதிய மனேதர்மம் இருந்தால்தான் அதை சரியாக உருவகப்படுத்த இயலும்..

ஆனல், தற்போது புதியபாணியில் 'Surrealism', 'Cubism' என்ற பெயர்களில் சித்திரங்கள் வெளிவருகின்றன. அதே மாதிரியில் மனேதர்மத்திற்கே இடமின்றி எதையும் மனத்தால் எண்ணுமல் கை போகும் வாக்கில் கிறுக்குவதால் உண்டாகும் ஒருவகைச் சித்திரத்தையும் கலை என்கிறுர்கள் ஒரு சாரார்.

எதையும் மனத்தால் திட்டமிடாமல் தன்னிச்சையாக கை வெளிப்படுத்தும் சித்திரம்தான் உயர்ந்தது என்பது அவர்கள் வாதம்.

மேற்படி பாணிகளை புது மாதிரி என்ற ஒரு காரணத்திற்காக ஒத்துக்கொள்ள முடியுமே தவிர, பலமான அஸ்திவாரத்துடன் எழுந்த கலை என்று சொல்ல முடியாது.

நான் விளக்க விரும்புவது Oriental Art என்ற புராதன ஓவியம், Caricature என்ற ஹாஸ்யச் சித்திரம், Western Art என்ற மேற்கத்திய வகை சித்திரம் இவை மூன்றைப் பற்றித்தான்.

புராதன ஓவியம் என்று சொல்லும்போது நான் குறிப்பிடுவது 'அஜந்தா' முறையிலுள்ள சித்திரங்களைத்தான். அதற்கெல்லாம் முந்தியதான கண்ணுடியின் ஒரு புறம் எழுதப்பட்டுள்ள கிருஷ்ணன், ராமன் போன்ற படங்களை அல்ல. அவைகளும் புராதன ஓவியம்தான் என்ருலும் அதற்குப் பிறகு ஓவியத் துறையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதால், அதைப் பற்றிக் குறிப்பிட அவசியமில்லை.

Oriental Art என்ற சித்திர வகை தனக்கென ஒரு அலாதியான பாணியை வகுத்துக் கொண்டுள்ளது, வாழ்க்கையிலுள்ளதை உள்ளது உள்ளபடி இந்த முறையில் சித்தரிக்கப் பட்டிருக்காது. கண், வாய்,

உடலமைப்பு எல்லாம் இயற்கைக்கு மாருகவும் தனி நெளிவுடனும் காட்டப்பட்டிருக்கும். ஒவ்வொரு பாத்திரத்திலும் அழகும், குழைவும்தான் இதன் ஜீவன். இதற்கு அங்க அளவு, வர்ணம், (Light & Shade) ஒளி, நிழல் இதெல்லாம் இயற்கையை ஒட்டித்தான் இருக்க வேண்டுமென்ற நியதி இல்லை. ஒவ்வொன்றிலும் அழகுணர்ச்சியைப் பிரதிபலிப்பதுதான் இதன் நோக்கம். இதன் காரணமாக இயற்கையை மீறி இருந்தாலும் அது குறையல்ல.

உண்மையில் 'வாழ்க்கையிலுள்ளதைப் போல இருப்பது உசிதமில்லை. மனோதர்மத்துடன்தான் சித்திரங்கள் இருக்க வேண்டும்' என்பது இந்த வகையை ஆதரிப்பவர்களின் சித்தாந்தம். அதை 'சிருஷ்டித் தத்துவம்' என்கிருர்கள் இவர்கள். இந்தக் கலையில் ஒரு கவர்ச்சி இருக்கத்தான் இருக்கிறது.

தெய்வ ரூபங்களைப் பொருத்தவரையில் இந்தப் பாணி தெய்வீகத்தை நன்கு பிரதிபலிக்கச் செய்கிறது. அத் திருவுருவங்களை சாதாரண மனிதர்களைப் போலன்றி. கற்பனையும் அழகும் மிளிர உருவகப்படுத்தும் போது அதற்கு ஒரு சோபை இருக்கத்தான் செய்கிறது.

அடுத்ததாக 'காரிகேச்சர்' என்ற ஹாஸ்யச் சித்திரம் தற்காலத்தில் ஒரு முக்கியமான ஸ்தானத்தை வகிக்கிறது. வாழ்க்கையில் நாம் அழகை எவ்வளவு ரஸிக்கிறோமோ அவ்வளவுக்கு ஹாஸ்யத்தையும் ரஸிக்கிறோம். அந்த வகையில் இந்தக் கலை பெரிதும் உதவுகிறது. தவிர, இந்த முறைச் சித்திரங்கள் பல பக்கங்கள் எழுதி வளர்க்க வேண்டிய விஷயங்களை ஒரு நொடியில் விளக்கி விடும் தன்மையுள்ளவை.

இதிலும் ஒரு 'சிருஷ்டித் தத்துவம்' உண்டு. அதுதான் 'Exaggeration' என்ற மிகைப்படுத்திக் காட்டும் முறை. அதாவது ஒரு பொருளிலோ பாத்திரத்திலோ உள்ள முக்கியமான அம்சத்தை இயற்கையை விட அதிகரித்துக் காட்டுவது. உதாரணமாக ஒரு மனிதனுக்கு மூக்கோ அல்லது வேறு அவயவமோ நீண்டோ குறைந்தோ இருந்தால், அதை இன்னும் அதிகப்படுத்தினுல் சீக்கிரமாக அவனை அடையாளம் கண்டு கொள்ளுகிறோம். தவிர, அதனுல் ஒரு ஹாஸ்ய ரஸத்தையும் உண்டு பண்ண முடிகிறது.

ஓரியண்டல் சித்திரக் கலையிலும் 'காரிகேச்சர்' ஒரு விதத்தில் மேம்பட்டது எனலாம். முன்னது அழகை அதிகரித்துக் காட்டுகிறது. அதோடு மட்டுமல்லாமல் உள்ளுணர்வையும் பிரதிபலிக்க வல்லது 'காரிகேச்சர்.'

உதாரணமாக ஒரு மனிதன் இரைந்து கத்துகிருன் என்றோ சோமக்கல மணி அடிக்கிறது என்றோ வைத்துக் கொள்வோம். இதரவகைச் சித்திரங்களில் இதை ஓரளவுதான் காட்டமுடியும், ஆனுல் காரிகேச்சரில் மனிதனின் வாய் அளவை மீறி பெரிதாகக் காட்டப்பட்டு, வாயின் அருகில் சில ஒலிக்கோடுகள் வரைவதன் மூலம் சத்தத்தையும் சித்திரத்தில் வெளிப்படுத்த இயலுகிறது. அதே மாதிரி சோமக்கலத்தைச் சுற்றி சில கோடுகள் வரைவதன் மூலம் மணி

யின் நாதத்தையும் வெளிப் படுத்த இயலுகிறது. ஒரு மனிதன் வேகமாகப் போகி ருன் என்பதை அவன் கால் களுக்குப் பின்பு சில கோடுகள் வரைவதன் மூலம் தெளிவாகக் காட்டி விடலாம்.

அதனுல் இந்த வகைச் சித்தி ரங்களில் சிருஷ்டித் தத்துவத் துடன் உள்ளுணர்வு, இயக்கும் சக்தி இதெல்லாம் தெளிவாகப் பிரதிபலிக்கிறது.

மிகைப்படுத்திக் காட்டுவது என்பது நமக்குப் புதிதல்ல. ஒரு மனிதன் உயரமாக இருக் கிருன் என்ருல், அவன் உய ரத்தை மனதில் பதியவைக்க 'ஆகாயத்திற்கும் பூமிக்கும் வளர்ந்திருக்கிருன்' என்கிருேம்.

அதேமாதிரி நம் உணர்ச்சி களையும் மிகை படுத்திக் காட்டு கிருேம். ஒரு குழந்தையின் பேரில் தாயாருக்குக் கோபம் வருவதாக வைத்துக் கொள் வோம். அப்பொழுது அவள் குழந்தையைப் பார்த்து, "இப் படி விஷமம் செய்தால், உன் தோலை உரித்து விடுவேன்" என்றெல்லாம் சொல்கிருள். ஆனுல், தாயார் உண்மையில் அப்படிச் செய்கிருளா? இல்லை. தன் கோபத்தைக் குழந்தையின் மனத்தில் பதியவைக்க அப் படிச் சொல்லுகிருள். அதே மாதிரிதான் 'காரிகேச்சர்' ஒவ் வொரு விஷயத்தையும் பதிய வைக்கும் கருவியாக விளங்கு கிறது.

மூன்ருவதாக Western Art என்ற மேல்நாட்டுக் கலையை ஆராயலாம். 'இது போட்டோ முறையிலுள்ளது. அதனுல் இதில் கற்பனைக்கே இடமில்லை' என்பதுசிலருடைய தீர்மானம்.

ஆனுல் உண்மையில் போட்டோ முறையிலிருக்கக் கூடாது என்பதுதான் இதன் தத்துவம். சாதாரண போட் டோவைவிட கையால் எழுதப் படும் மேற்கத்திய முறைச் சித்திரத்தில் தனி ஜீவன் உண்டு. போட்டோவில் காணப்படும் யந்திர உணர்வு (Mechanical Reproduction) இதில் இருக்காது. (Composition, Touches, Strokes,) வர்ண ஞானம் இவைகளுடன் திறமையைக் காட்டவும் அலுப் பின்றி அனுபவிக்கவும் முடியும்.



ஹாஸ்யத்தை மிகைப்படுத்தும் 'காரிகேச்சர்'

வாழ்க்கையில் உள்ளதை உள்ளபடி சித்திரத்தில் பார்க் கும்போது அதற்கு ஒரு தனிக் கவர்ச்சி உண்டு. உள்ளதை உள்ளபடி செய்வதும் எளி தான வேலையில்லை. மனோதர் மத்தில் சில சந்தர்ப்பங்களில் நம் இஷ்டப்படி செய்ய இயலும். உள்ளதை உள்ளபடி செய்யும் கலையில் அதில் ஈடுபடுபவர் களுக்குத்தான் கஷ்டம் புரியும்.

கழைக் கூத்தாடி ஆடுவது போல் நம்மால் கம்பத்தின் மேல் நின்று வித்தைகள் காட்ட முடியாது. அதனுல்தான் நாம் அதை ரஸிக்கிறோம். அதே மாதிரி மேல்நாட்டுக் கலையில் எளிதில் செய்ய முடியாத பல அம்சங்கள் இருக்கின்றன. போட்டோ சில யந்திரக் கட்டுப்பாட்டுக்கு அடங்கித் தான் உண்மையை விளக்க இயலும். ஆனுல் மேற்கத்தியப் பாணி சித்திரங்கள் அதைத் தெளிவாகவும் கலை உணர்ச்சியுடனும் பிரதி பலிக்கிறது. உயிருள்ள ஜீவனைப் போலவும், யந்திரப் பிரதி பலிப்பு இன்றியும் கலைஞானத்துடன் இருப்பதால்தான் டிஷியன் டிவின்ஸி, ராப்ஹேல் முதலியோருடைய வேலைத்திறமை அன்று முதல் இன்றுவரை அழியாப் புகழ் பெற்றிருக்கிறது.

ரவி வர்மாவின் மேற்கத்திய பாணி படத்தில் சிருஷ்டித் தத்துவம் குறைந்திருக்கலாம். ஆனுல், அதில் வரும் பாத்திரங்கள் நம் வாழ்க்கையிலுள்ளவர்களைப் போன்று நம்முடன் உறவாடும் தன்மையுள்ளவை. அதன் காரணமாகத்தான் இதர வகைப் படங்களை விட ரவி வர்மாவின் லக்ஷ்மி, ஸரஸ்வதி போன்ற படங்கள் இன்று வரை நம் வீட்டை அலங்கரிக்கின்றன.

நான் இதுவரையில் மூன்று வகைச் சித்திரங்களைப்பற்றிக் கூறியுள்ளேன். இந்த மூன்று வகையையும் தனித்தனியே பின்பற்றுபவர்கள் மூன்று கோஷ்டிகளாகப் பிரிந்துள்ளனர். ஒவ்வொரு கோஷ்டியினரும் தங்கள் பாணிதான் உயர்ந்தது என்கிறார்கள். 'ஓரியண்டல்' பாணியை ஆதரிப்பவர்கள் சிருஷ்டித்தத்துவம் தான் உயர்ந்தது என்கிறார்கள். 'காரிகேச்சரை' வரைபவர்கள் 'உயிர்ப்பு சக்தி' (Animation) தான் பெரிது என்கிறார்கள். மேற்கத்திய சித்திரம் வரைபவர்கள் (Natural Reproduction) 'ஜீவப்பிரதி பலிப்பு'தான் முக்கியம் என்கிறார்கள்.

இம்மூவகையினர் கூற்றிலும் உண்மை இருக்கிறதென்பதை நாம் மறுக்க இயலாது. ★

தட்பவெட்ப நிலையை அடக்கி ஆளும் சாதனம்

தட்பவெட்ப நிலை 30 டிகிரி சென்டிகிரேடுக்கு அதிகமாகவுள்ளபோது, பஸ்களில் பிரயாணம் செய்பவர்கள் உஷ்ணத்தின் கொடுமையில் பெரிதும் கஷ்டப்படுகின்றனர் அல்லவா? இனிமேல் இந்தத் தொல்லையே இருக்காது. அடாது மழை பெய்தாலும், கடும் வெயில் காய்ந்தாலும், எல்லா நிலைமைகளிலும் 17 டிகிரி சென்டிகிரேடுக்குமேல், பஸ்களிலும் கார்களில் தட்பவெட்ப நிலை அதிகரிக்காமல் இருப்பதற்கு இப்பொழுது தக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

பஸ்ஸிலோ, காரிலோ அல்லது லாரி டிரைவர் உட்காரும் இடத்திலோ, நாம் விரும்பும் தட்பவெட்ப நிலையை உண்டாக்கிக்கொள்வதற்கான வகையில் அரைவாசி - மின்கடத்தி சாதனம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஒரு பொத்தானை அழுத்தினுல் போதும், பிறகு நாம் விரும்பும் அளவுக்கு தட்பவெட்ப நிலையை அடக்கி ஆளமுடியும்!...



அபிஸீனியா

எப்பேர்பட்ட தடைகளேயும் மீறி சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொண்டு முன்னேற முடியும் என்பதை எடுத்துக்காட்டும் நாடு எதியோபியா (அபிஸீனியா). பிற்பட்ட நிலேயிலுள்ள தம் நாட்டை எல்லாவகைகளிலும் முன்னுக்குக் கொண்டுவரும் அரும்பணியில் அதன் மன்னர் ஹெயிலி ஸெலாஸி ஈடுபட்டிருக்கிருர். அடிப்படை விஷயங்களில் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளுடன் ஒத்துப்போவதையே அவர் விரும்புகிருர். பஞ்சசீலக் கொள்கையில் தனக்குள்ள நம்பிக்கையை அவர் தெரிவித்திருக்கிருர். ஆப்பிரிக்க நாடுகளின் விடுதலே பிரச்னே வருங்காலத்தில் முக்கியத்துவம் பெறவிருக்கிறது. எதியோபியா இந்தியாவுடன் தனக்குள்ள பந்தங்களேக் கட்டுபடுத்திக் கொள்ளப் பார்ப்பது நல்லதே!

மன்னர் ஹெய்லி ஸெலாஸி

அபிஸீனியாவுக்கு எதியோபியா என்பது மற்றொரு பெயர். ஆப்பிரிக்காவில் எகிப்து, எதியோபியா, லைபீரியா ஆகிய மூன்றும்தான் முழுச் சுதந்திரத்துடன் வாழ்ந்து வரும் நாடுகள். கோல்ட் கோஸ்ட், லிபியா, டுனீஷியா, மொராக்கோ முதலிய நாடுகளின் விடுதலை இன்னும் பூர்த்தியாகமல் இருந்து வருகிறது. ஆல்ஜீரியா, கென்யா, தென்னப்பிரிக்கா ஆகிய நாடுகளில் மனித உரிமைப் போர் நடைபெற்று வருகிறது.

அபிஸீனிய மன்னர் ஹெயிலி ஸெலாஸி இந்தியாவில் சமீபத்தில் மூன்று வாரங்கள் சுற்றுப் பிரயாணம் செய்தார். இந்திய மக்களுக்கு அவர் புதிதல்ல. அபிஸீனியாவின் விடுதலைப் போரில் இந்திய சோல்ஜர்கள் முக்கிய பங்கு கொண்டிருந்தனர்.

வல்லரசுகளின் சதி

சுமார் 20 வருஷங்களுக்கு முன்பு அபிஸீனியாவை பங்கு போட்டுக்கொள்ள இதாலி, பிரிட்டன், பிரான்ஸ் இம்மூன்றும் முயன்றன. ஸோமாலிலந்தை இம்மூன்றும் பங்கு போட்டுக் கொண்டதைப் போல அபிஸீனியாவையும் பங்கு போட திட்டம் உருவாயிற்று.

அப்போது சர்வதேச சங்கத்தில் பிரிட்டனும் பிரான்ஸும் செல்வாக்குப் பெற்றிருந்தது. இவை தொடை நடுங்கிகளாக இருந்ததால், இதாலி, ஜெர்மன் சர்வாதிகாரிகள் தாங்கள் நினைத்தபடி எல்லாம் செய்யத் தலைப்பட்டனர். நாட்டை பங்கு போட்டுக் கொள்வதுபற்றி

சிறுவர்களுக்கு கையெழுத்துப் போட்டுத் தருகிறார்



சென்னை நகரசபை அளித்த வரவேற்பு

ஹோர், லவால், முஸோலினி இவர்களிடையே திட்டம் உருவாகியது. ஆனால் பிரிட்டிஷ் மக்கள் இதை தீவிரமாக எதிர்த்தார்கள். பிரிட்டிஷ் பிரதம மந்திரி பால்ட்வின் சாம்யூவல், ஹோரை அயல் நாட்டு மந்திரி பதவியிலிருந்து ராஜிநாமா செய்ய வற்புறுத்தினர். ஆனால் முஸோலினியை அபிஸீனியா மீது பாயாமல் தடுக்க எதுவும் செய்யப்படவில்லை. அபிஸீனியா தாக்கப்பட்டபோது எந்த நேச நாடுகளும் அதன் உதவிக்கு வரவில்லை. பாது காப்பற்ற அபிஸீனியாமீது இதாலிய பாஸிஸ்ட் படைகள் குண்டுகளை வீசின. விஷக் காற்றை உபயோகித்தன. 1936 மே 10-ந் தேதி மார்ஷல் படாக்ளியோ அபிஸீனியாவில் வைஸ்ராயாக இதாலிய சர்க்காரால் நியமனம் செய்யப்பட்டார்.

தீர மன்னர்

நவீன படை பலம் இல்லை என்ற நிலையில் பயந்து போய் பலாத்காரத்துக்கு மன்னர் ஹெயிலி ஸெலாஸி பணிந்து விடவில்லை. கடைசி வரை உறுதியுடன் நின்று போராடினர். வல்லரசுகளின் சதி அவரைத் தற்காலிகமாக வென்று விட்டது. உலக அபிப்பிராயத்தை தம் நாட்டிற்கு சாதகமாக்கிக் கொண்டு பொறுமையுடன் பாடுபட்டு இறுதியில் தம் நாட்டிற்கு சுதந்திர மன்ன

அடிஸ் அபாபாமீது குண்டுகள் வீசப்பட்ட காட்சி





அபிஸினிய விடுதலைப் போரில் இந்தியத் துருப்புகள் முக்கிய பங்கெடுத்துக் கொண்டன.

ராகத் திரும்பினர். இவர் சர்வ தேச சங்கத்தில் நேராகவே ஆஜராகி நாட்டிற்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்று வாதித்தார். இத்தாலியிட மிருந்த எரீட்ரியா என்ற பகுதி வாழ் மக்கள், அவரது ஆட்சியை ஜனநாயக முறையில் ஏற்றுக் கொண்டனர்.

5 வருஷ காலம் எதியோபிய மன்னர் பிரிட்டனில் தங்கி இருந்தார். பிரிட்டிஷ் படைகளும் எதியோபியர்களும் இதாலியிடமிருந்து நாட்டை விடுவித்தனர். பாஸிஸ்டுகளைத் தோல்வியடையச் செய்வதில் இந்திய துருப்புகள் முக்கிய பங்கெடுத்துக் கொண்டன.

ஹெயிலி ஸெலாஸி மன்னரை எதிரோபியா மக்கள் தெய்வமாகவே கருதுகிறார்கள். மன்னரைக் கண்டால் கீழே விழுந்து கும்பிடுகிறார்கள். ஆனால் மன்னர் தன்னைக் கடவுளின் பிரதிநிதியாகக் கொள்ளவில்லை. முன்பெல்லாம் மன்னரைக் காண்பதென்றால் தரையில் உடல் படிந்து நகர்ந்து செல்ல வேண்டுமாம்.

ஒட்டகங்களும் படைகளில் இடம் பெற்றுள்ளன

எதியோபிய மக்களில் சிலர்

இப்போதெல்லாம் அந்த வழக்கம் இல்லை. மூன்று ஸலாம் வைக்கவேண்டும். விடை பெற்றுக்கொள்ளும்போதும் மூன்று ஸலாம் வைக்க வேண்டும்.

பிடிக்காத பெயர்

எதியோபியா என்ற பெயர் கிரேக்க மொழியிலிருந்து வந்ததாகும். 'கருகிய முகம்' என்பது எதியோபியா என்பதின் அர்த்தமாம். அபிஸீனியா என்றால் கலப்பு என்று அர்த்தமாம். இந்த 'அபிஸீனியா' என்ற வார்த்தை எதியோபியர்களுக்கு பிடிப்பதில்லை. இவர்கள் பேசுவது அம்ஹாரா பாஷை.



எரிட்ரியாவின் தலைநகர் அஸ்மாரா

நாட்டைச்சுற்றி உயர்ந்த மலைகள் இருப்பதால் அக்கம் பக்கத்திலுள்ள நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு இல்லாமல் போய் விட்டது. மிகவும் பிற்போக்குள்ள இந்தநாடு மிகவும் குறுகிய காலத்தில் நவீன வசதிகளைப் பெற்று வருகிறது. இவருடைய சிம்மாசனம் மிகமிகப்பழமையானது. ஷீபா ராணி ஆண்டகால முதல், அதாவது சுமார் 3000 வருஷங்களுக்கு முந்தியதாகும்.

நாட்டைப்பற்றிய விவரங்கள்

எதியோபியா இங்கிலாந்தைப் போல ஆறுமடங்கு பெரியது. நாகரிகம் இப்போதுதான் சமீப காலமாக அங்கு தலை காட்ட ஆரம்பித்திருக்கிறது. அதன் ஜனத்தொகை சுமார் இரண்டு கோடி பேராகும். ஜன சங்கியை கணக்கு எதுவும் இதுவரை அங்கு எடுக்கப்படவில்லை. எதியோபியர்களில் அநேகருக்கு அவர்களுக்கு எவ்வளவு வயதாகிறது என்பதுகூடத் தெரியாது. மக்களின் எண்ணிக்கையை விட கால்நடைகளின் எண்ணிக்கைதான் அங்கு அதிகம். இயற்கை வனப்புகள் மலிந்த பிரதேசம் எதியோபியா.

ஸாலமன் என்ற மகாமேதையின் நாடு என்று கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. சிம்மாசனத்திற்கு இன்றும் ஸாலமன் சிம்மாசனம் என்றுதான் பெயர் இருந்துவருகிறது. எதியோபியாவில் புதைபொருள் நிபுணர்களுக்கு ஆராய்ச்சிக்கான அரிய விஷயங்கள் பல கிடைக்கலாம்.

அம்ராக்கியர்கள்தான் ஆளும் சந்ததியினர். இவர்கள் நிறம் என்னவாக இருந்தாலும் தங்கள் மனதிற்குள் தாங்கள் வெள்ளையர்கள் என்ற நினைப்பு. சூடானிலிருந்து வந்த அடிமைகளும் இதர நீக்ரோவர்களும் 'கருப்பர்கள்' என்ற பிரிவில் சேர்க்கப்படுவர்.

பூமிக்குள் புதைந்து கிடக்கும் செல்வம் எதியோபியாவில் ஏராளமாக இருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

காபியின் ஜன்ம பூமி

காபி இங்கு ஏராளமாகப் பயிராகிறது. தலைநகரான அடிஸ்



நாடெங்குமே இம்மாதிரி மலைகள்தான்

அபிஸீனியாவுக்கு மீண்டும் சுதந்திரம்

அபாபாவிற்கருகிலுள்ள பிர தேசம் மிகச் செழுமையானது. கபா என்னுமிடத்தில் காபிச் செடி நிறைய விளைவது காரண மாகவே இதற்கு காபி என்று பெயர் வந்ததாகத் தெரிகிறது. அபிஸீனியாவின் மண் பெரும் பாலும் கரிசல் மண்தான். எந்த நிலம் யாருக்கு சொந்தம் என் பது எவருக்கும் தெரியாது, நில பட்டாக்கள் என்பதே கிடையாது.

விமான மார்க்கமாக போய் சேருவதை தவிர வேறு உருப் படியான பாதைகள் இதுவரை இல்லை. இரண்டொரு 'டிரங்க்' ரோடுகள் மட்டும் உண்டு. ஆனால் அவை மிகப் பழங்கால ரஸ்தாக்கள் போன்றவை. நாட் டில் பல பாகங்களுக்கு செல்ல வேண்டுமென்றால் அதற்கு ஏற்ற சாதனம் 'ஜீப்'தான். சுமார் அரை டஜன் நகரங் களுக்கு தான் தந்தி இணைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

எதியோபியர்களுக்கு கடும் தண்டனை அளிப்பது என்றால் உடலில் ஒரு பாகத்தை துண் டித்து விடுவதென்றே அர்த்தம், பண்டைக்கால எதியோபியர் கள் சண்டையில் தோற்ற எதிரிகளின் கைகளையாவது கால்களையாவது வெட்டிக் கொண்டு வராவிட்டால் அவர் கள் பூரணமாக வெற்றி பெற்ற தாக அர்த்தமில்லையாம்,

பத்திரிகைகள்-சில கட்டுப்பாடுகள்

எதியோபியாவில் பத்திரிகைகளும் உண்டு. அவைகள் தணிக்கைக்கும் உட்படுவதுண்டு. மன்னரின் பெயர் குறிக்கப்படுவதாக இருந்தால் அது கொட்டை எழுத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும். மன்னர் பெயருக்கு முன் வேறு எந்தப் பெயரும் பிரசுரிக்கப்படக் கூடாது. மன்னரைக் குறிக்கும் எந்தப் பெயரும் கொட்டை எழுத்தில் தான் இருக்கவேண்டும், பத்திரிகையின் ஒரே பக்கத்தில் இறந்தவர் படமும், உயிருடன் இருப்பவர் படமும் பிரசுரிக்கப் படலாகாது. அப்படி பிரசுரித்தால் உயிருடன் இருப்பவரும் இறந்து விடுவாராம், 'க்ரூப் போட்டோ'வில் யாராவது ஒரு இறந்தவரின் உருவம் இருந்தாலும் அந்த போட்டோவை பிரசுரிக்கக்கூடாது.

நிர்வாகம்

தேர்தல் என்பது கிடையாது ஆனல் ஜனநாயகம் நடைபெறுவதாகவே பெயர். அங்கு அரசியல் கட்சிகள் எதுவுமில்லை 'பார்லிமெண்ட்' என்று பெயரளவுக்கு ஒன்று இருக்கிறது. மேல் சபைக்கு மன்னரே மெம்பர்களை நியமிக்கிறர். மன்னர் கிருஸ்துவ மதத்தை தழுவியவர். ஆனல் ஜனத்தொகையில் பாதிபேர்களுக்கு மேல் 'பேகன்'களும் முஸ்லிம்களும். ஆனல் எதியோபியாவில் பாதிரிகள் அதிகம்.

தலைநகர் அடிஸ் அபாபா

அடிஸ் அபாபா என்றல் ஒரு ''புது புஷ்பம்'' என்று பெயர். திட்டு திட்டாக உள்ள இந்த இடம் 7800 அடி உயரத்தில் அமைந்திருக்கிறது. கட்டிடங்களும் குடிசைகளும் இங்கு சேர்ந்ததே காணலாமாம். யூகலிப்டஸ் மரங்கள் இங்கு அதிகம். விபசார விடுதிகள் பிரதான தெருக்களிலே இருக்குமாம்.

எதியோபியா நீண்ட காலமாக சுதந்திரத்துடன் இருந்து வந்த நாடாகும். 1936 முதல் 1941 வரை இந்நாடு இதாலியின் ஆதிக்கத்தில் இருந்ததைத் தவிர வேறு எந்த நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் எப்போதும் இருந்ததில்லை. 3000 வருஷங்களாக சுதந்திரமாக இருந்த இந்த நாடு இதாலியர்களின் படையெடுப்புக்கு விட்டுக்கொடுக்கவேண்டி வந்தது. இவ்வளவு காலம் நாடு சுதந்திரமாக இருந்ததற்கு காரணம் இந்நாட்டின் அமைப்புதான்.

இந்த மாதிரி ஒரு நாடு இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்தவர்கள் போர்த்துகீஸியர். 14வது நூற்றண்டில் துருக்கியர்கள் இந்நாட்டுக்கு வந்தனர்.

1886-ல் இங்கு சிறைபட்ட சில பிரிட்டிஷார்களை மீட்பதற்காக நேபியர் தலைமையில் ஒரு தூதுகோஷ்டி அனுப்பப்பட்டது. இதற்கு 90 லக்ஷம் பவுன்கள் செலவாயினவாம்.

1896-ல் இதாலியர்கள் இந்த நாட்டைக் கைப்பற்ற முயன்றனர். அடோவா என்ற இடத்தில் இதாலியர்கள் படுதோல்வியடைந்தனர்.

எதியோபியர்கள் போதிய நிர்வாகப் பயிற்சி பெருததால் அயல் நாட்டினரின் சேவையை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. பிரிட்டிஷாரிடமும் ஸ்விடிஷிடமும் எதியோபிய ராணுவம் பயிற்சி பெற்று வருகிறது.



நாடு விடுதலை பெற்றதை மக்கள் கொண்டாடுகிறார்கள்

தற்காக நாளுக்கு இவர் 15 மணி நேரம் வேலை செய்கிறார்.

பிரிட்டனுடன் எதியோபியா ஏராள உடன்படிக்கைகளைச் செய்துக் கொண்டுள்ளது. வேறு எந்த நாட்டுடனும் அவ்வளவு உடன்படிக்கைகளை அது செய்துக் கொள்ளவில்லை. ஆங்கிலம் எதியோபியாவில் இரண்டாவது மொழியாக விளங்குகிறது.

இந்தநாட்டிலுள்ள ஒரே ரயில் பாதை அடிஸ் அபாபாவுக்கும் ஜிபூதிக்குமிடையே யுள்ளது. இதன் நீளம் 486 மைல்கள்.

முஸோலினியின் பேச்சை எடுத்தாலே எதியோபியர்களுக்கு இன்னும்கூட பிடிப்பதில்லை. இதாலியர்கள் எதியோபியாவை நவநாகரீகமாக்க எவ்வளவோ பிரயத்தனப்பட்டிருக்கின்றனர் என்பதை மறுக்க முடியாது. விமான சர்வீஸை அமெரிக்கர்கள் நடத்துகிறார்கள்.

கல்வியில் சிரத்தை

ஹெயிலி ஸெலாஸிக்கு நாட்டில் கல்வி பரப்புவதில் மிகவும் சிரத்தை. கல்வி மந்திரி இலாகாவை அவரே நேரில் கவனிக்கிறார். பட்ஜெட்டில் மூன்றில் ஒரு பங்கு கல்விக்காகவே செலவிடப்படுகிறது. தன் சொந்தப் பணத்தையும் அவர் கல்வியைப் பரப்ப உபயோகிப்பதில் தயங்குவதில்லை. யுத்தத்திற்கு பின்பு 1945 முதல்தான் நாட்டில் ஏராளமான செகண்டரி பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டன. தன் நாட்டை முன்னேறச் செய்வ

தன் நாட்டில் அடிமைத்தனத்தை ஹெயிலி ஸெலாஸி ஒழித்து விட்டார். இதாலியுடன் வெறுப்பு இருந்த போதிலும் எதியோபியாவில் தங்க விரும்பிய இதாலிய டெக்னீஷியன்களை அவர் வெகுவாக ஆதரித்தார். இப்போது எதியோப்பியர்கள் ஒவ்வொரு துறையிலும் பயிற்சி பெற்று வருகின்றனர், எதியோப்பியர்களை தங்கள் நாட்டில் நிர்வாக துறை எல்லாவற்றையும் ஏற்று நடத்தும் பொறுப்பு வெகுதூரத்தில் இல்லை.

இந்தியர்கள் எதியோபியாவில் வியாபாரிகளாகவும் தொழில் நிபுணர்களாகவும் பணியாற்றி வருகிறார்கள். ஹெய்லி ஸெலாஸியின் இந்திய விஜயத்தின் விளைவாக இரு நாடுகளுக்கு மிடையே பெற்றுள்ள ஒத்துழைப்பு இனி பெருகும் என்று எதிர்பார்க்கலாம். ★

பாரதியாரும் சிவாவும்

சுப்பிரமணிய பாரதியாரும் சுப்பிரமணிய சிவாவும் ஒரே மாதிரி வாழ்ந்து வந்தவர்கள். இளமையிலே சாவை வரவேற்றவர்கள். வறுமையுடன் போராடி வெற்றி பெற்று வாழ்ந்தவர்கள். இருவரும் தேசபக்தி ஆவேசம் கொண்டவர்கள்.

பாரதி தன் உள்ளத்தில் தோன்றியதை கவிதையாக்கினர். அதை படித்தவர்கள் மட்டும் ரசித்துப் பயன்பட முடியும். ஆனால் சிவா தன் உள்ளத்தில் தோன்றுவதை பிரசங்கங்கள் மூலம் வெளிப்படுத்தி மக்களை எழுச்சிக்கு தயாராக்கினர். இருவரும் கவிகள்.

சிவா அரசியலில் புகுந்தது *1908*-ல். அதற்கு முன் அவர் வேதாந்த விசாரத்தில் ஈடுபட்டார். அந்தச் சமயம் பாரதியார் சென்னையில் இந்தியா பத்திரிகை நடத்தி வந்தார். சிவா தீவிரமாக அரசியலில் இறங்கியதும் சர்க்காரின் தண்டனைக்கு ஆளாகி பத்து வருடம் கடுங்காவல் பெற்றார். பின்பு அந்த தீர்ப்பு ஹைக்கோர்ட்டாரால் 6 வருடங்களுக்கு குறைக்கப்பட்டது. சிறையிலிருந்து வெளிவந்ததும் அவர் சில காலம் சென்னையில் தங்கி ராமகிருஷ்ணர், விவேகானந்தர் இவர்களின் உபதேச மொழிகளை தமிழாக்கிப் பிரசுரித்தார்.

பாரதியாரின் பாடல்களில் சிவாவுக்கு மிகவும் விருப்பம். முதன் முதலில் அவற்றை தேசீயக் கூட்டங்களில் பாடி பரவச் செய்த பெருமை சிவாவைத்தான் சேரும். சிவா பாரதியாரைப் பற்றி தெரிந்து கொண்டதே ஒரு ருசிகரமான விஷயம்.

சிவாஜி தன் வீரர்களுக்கு உபதேசம் செய்யும் பாவனையில் ஒரு கவிதையை தமது இந்தியா பத்திரிகையில் பாரதியார் வெளியிட்டிருந்தார். சிவா அரசியிலில் குதித்த புதிது. அவரை இந்தப் பாட்டு மிகவும் வசீகரித்து விட்டது. சிவாஜியை தன் அரசியில் குருவாக மதிப்பவர் சிவா.

சிவாவின் மீது தொடரப்பட்ட ராஜத்துவேஷ வழக்கு விசாரணை தூத்துக்குடியில் நடைபெற்றது. சென்னையிலிருந்து பாரதியாரும் வந்திருந்தார். இந்த சமயத்தில் தான் சிவா பாரதியாரை சந்தித்தார். பாரதியாரை சிவாவுக்கு அறிமுகப்படுத்திய போது 'இவரா எனது சிவாஜி' என்று கட்டிக் கொண்டாராம்.

பாரதியாரின் உத்வேகத்தை புதுவை வாசமும் வறுமையும் அடைத்து விட்டது. சிவாவின் வலிமையை அவருடைய நோய் ஒருவாறு குறைத்தது என்றாலும் அவ்விரண்டு வீரர்களும் காலனும் அஞ்ச பாரததேவிக்குத் தொண்டு செய்து மறைந்தார்கள், அவர்களின் அன்றைய இடைவிடாத சேவை, இவைகளின் பலனே இன்று நாட்டுக்கு கிடைத்துள்ள சுதந்திரம். ★

ஸ்ரீபிரகாசாவுடன் ஒரு நாள்

"நந்தலால்"

தலைவர் சத்தியமூர்த்திக்கு எதைப் பற்றி பேசவேண்டுமென்றாலும் கவலையில்லை. ஆணித்தரமாக பேச ஆரம்பித்துவிடுவார். தக்காளி ரசம் தயாரிப்பது முதல் பிரிட்டிஷ் 'சிங்க'த்தின் வாலை முறுக்குவதுவரை எல்லாம் அவருக்கு அடிமுதல் நுனிவரை தெரியும். அதேபோலதான் நமது கவர்னர் ஸ்ரீபிரகாசாவும். அவருக்குத் தெரியாத விஷயம் எதுவுமே இல்லை. எதைப்பற்றி பேச ஆரம்பித்தாலும் குறைந்தது ஒரு மணிக்கு குறைந்து அவருக்குப் பேசத் தெரியாது.

ஆள் நல்ல ஆஜானுபாகு. பேசும்போது அன்பு ததும்புகிறது. ''என்ன மாதிரி எல்லாம் உங்களுக்குபடம் எடுத்துக் கொள்ள வேண்டுமோ அம்மாதிரி எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று மலர்ந்த முகத்துடன் கூறினார். அவர் பாகிஸ்தானில் முதல் இந்திய ஹைகமிஷனராக வேலைப் பார்த்திருக்கிறார். அப்போது அகதிகள் பிரச்னை தலைதூக்கி நின்ற சமயம். எவ்வளவோ மனோதிடத்துடன் இந்தியாவுக்குத் திரும்ப விரும்பிய ஹிந்துக்களுக்கு சகலவித உதவியையும் செய்து தந்தார். ஆனால் ஹிந்துக்கள் எப்படியோ கஷ்டத்தை சகித்துக்கொண்டு பாகிஸ்தானிலேயே தங்கி தங்கள் உரிமைகளைப் போராடிப் பெற்றிருக்கவேண்டும் என்பது தான் அவர் கருத்து.

மகாத்மாகாந்தி 1948 ஜனவரி 30 தேதி விண்ணுலகடைந்தார் அல்லவா? அந்த வருஷம் அதே



முதல் காரியம் பத்திரிகை படிப்பது



மாதம் 3-தேதி ஸ்ரீபிரகாசா மகாத்மாவை சந்தித்தார். மகாத்மா அவரிடம் கூறுகையில் "பாகிஸ்தானிலுள்ள பணம்படைத்த ஹிந்துக்கள் எப்படியாவது வெளியேறி விடுவார்கள். ஆனால் அங்குள்ள இரண்டு லக்ஷம் ஹரிஜனங்களின் நலன்களை முக்கியமாகக் கவனித்துக் கொள்ளுங்கள்" என்பதே.

"பிறர் என்ன செய்தாலும் அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. நாம் செய்ய வேண்டியதை நேர்மையுடன் செய்து விடுவோம்" என்பது தான் ஸ்ரீபிரகாசாவினுடைய குறிக்கோள்.

இவர் அஸ்ஸாமில் கவர்னராக இருந்த போது பாகிஸ்தான் ராணுவ அதிகாரி ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். இது ஸ்ரீபிரகாசாவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதும் சந்தேகம் ஏற்பட்டபோது எதிரிக்கு சாதகமாகவே நடந்து கொள்ள வேண்டும் என்ற நேர்மையை அனுசரித்து அவரை உடனே விடுதலை செய்யும்படி உத்திரவிட்டார். இதன் பலனாக டாக்காவில் சிறையிலிருந்த சில இந்திய ராணுவ அதிகாரிகள் உடனே விடுவிக்கப்பட்டனர்.

காசியில் வசித்து வந்த மிகப் பிரபலமான குடும்பத்தைச் சேர்ந்தவர் ஸ்ரீபிரகாசா. இவர் தகப்பனார் பகவன்தாஸ் மகா மேதாவி, சிறந்த எழுத்தாளர். இவர் சமீபத்தில் பாரதரத்ன பட்டம் அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டிருக்கிறார்.

ஆரம்பத்தில் பிரும்மஞான சங்கத்தில் ஸ்ரீ பிரகாசா தீவிர பற்றுக் கொண்டிருந்தார். பின்னர் அன்னி பெஸண்ட் அம்மை



புஸ்தகம் படிப்பதில் ஸ்ரீ பிரகாசாவுக்கு மிகவும் ஆசை

யார் ஆரம்பித்த ஹோம் ரூல் இயக்கத்தில் மிகுந்த சிரத்தை காட்டினார். 1911ல் இவர் கேம்பிரிட்ஜில் போய்ச் சேர்ந்த போது பண்டித நேரு இவருக்கு ஒரு வருஷம் ஸீனியராக இருந்தார். பிரிட்டனில் சிலகாலம் வழக்கறிஞர் வேலையை பார்த்துவிட்டு இந்தியா திரும்பியதும் இவர் அரசியலில் ஈடுபட்டார். இவர் உத்திரபிரதேச காங்கிரஸில் பெரும் சேவை செய்திருக்கிறார். நான்கு முறை சிறை சென்றிருக்கிறார். 1935 முதல் பத்து வருஷங்களுக்கு இவர் மத்திய சட்ட சபையில் மெம்பராக இருந்திருக்கிறார். 'ஆஜ்' 'ஸன்

பார்ப்பது கிரிக்கெட் ஆட்டமா?





தன் காரியாலயத்தில் எழுதுகிருர்.

காணவந்தவர்களுடன் பேட்டி.



ஸார்' 'ஆகிய பத்திரிகைக ளில் அவர் ஹிந்தியில் எழுதி யுள்ள கட்டுரைகள் மிகவும் பொருட்செறிவு உள்ளவை இவருக்கு புஸ்தகங் களை படிப்பதில் பெரும் ஆசை. வேலை தொந்திரவு காரணமாக சில சமயம் புஸ்தகங்கள் படிக்கமுடியா மல் போய்விடுவதாக அவர் கூறுகிருர்.

இவரிடம் 'திங்கள்' பத்திரி கையின் இதழ்கள் தொகு தியை கொடுத்தபோது, ''திங்களில் நல்ல கட்டுரை கள் வெளியிடப்படுவதாகக் கேள்விப்பட்டேன். ஆனல் நானே அவைகளை படித்து ரசிக்கும் படியான அவ் வளவு பாண்டித்யத்தை தமி ழில் பெறவில்லையே. இருந் தாலும் கொடுங்கள்'' என்று வாங்கிக் கொண் டார். திங்கள் என்பதை எழுத்துக்கூட்டிப் படித்து விட் டார். தமிழில் கையெழுத்துப் போடக் கற்றுக் கொண்டிருக் கிருர்.

ஆடம்பரமற்றவர் அவர். பேட்டி கோரியவர்கள் யாருக் கும் சாதாரணமாக மறுப்பு அளிக்கப்படுவதில்லை. உடை விஷயத்திலும் மிக எளிமை



இம்மாதிரி கூட்டங்கள் எவ்வளவோ?

அவரிடம் காணப்படுகிறது. மக்களிடையே மிக தாராள மாகப் பழகக்கூடியவர்.

ஒருகூட்டத்தில் இவர் பேசும் போது நீங்கள் பேசக் கூப்பிடா விட்டால் எனக்கு எப்படி பொழுது போகும் என்று கேட் டார். எப்போதும் புன்சிரிப் புடன் கூடிய முகம்.

கோட்டைக் காரியாலயத்தில்...

'திங்களை' ப் பற்றி விசாரித் தார். ஒன்பது மாதம் தான் ஆகிறது. அது தனக்கென்று தனி வழியை நிர்ணயித்துக் கொண்டிருக் கிறது. கதை கள் கிடை யாது என்றெ ல்லாம் சொன் னேன். ஜன நாயக முறை

பேசுவதென்ருல் அலாதி குஷி

யில்மக்களேபக்குவப் படுத்தஇத் தகைய பத்திரிகைகள் தாராள மாக சேவை செய்யலாமே என்ருர்.

தமிழ்நாட்டை விட்டு நீங்கள் வேறு ராஜ்யத்திற்கு கவர்னரா கப் போகிறீர்களே இந்த ராஜ் யத்தின் மக்களுக்கு செய்தி என்ன என்றேன்.

பழகினவர்களிடமிருந்து பிரி வது கஷ்டமாகத்தான் இருக் கிறது. இருந்தாலும் தமிழ் நாட்டில் நான் பெற்ற அன்பும் ஆதரவும் எப்போதும் என் மனதில் பசுமையாக இருக்கும் என்ருர். ''ஜெய் ஹிந்த்'' என்று கூறி அவரிடம் விடைபெற்றுக் கொண்டேன்.

போட்டோக்கள் :

டி. ஐ. சந்தாமியான்

சென்னே கவர்னர்கள்

நாடு சுதந்திர மடைந்த பின்பு சென்னேயின் முதல் கவர்னராக இருக்கும் பாக் கியம் பெற்றவர் ஸர் ஆர்ச்சி பால்ட் நை. லார்ட் மவுண்ட் பேட்டனே முதல் கவர்னர் ஜெனரலாக நியமித்தபோது இரு வெள்ளேயர்களுக்கு தான் சுதந்திர இந்தியாவில் கவர்னராக இருக்கும் பாக் கியம் கிடைத்தது. ஒருவர் நை. மற்ருெருவர் பம்பாய் கவர்னராக இருந்த ஜான் கோல்வில்.

பவநகர் மகாராஜா அடுத்தபடி சென்னே கவர்ன ராக நியமிக்கப்பட்டார். இவர் செய்யும் பிரசங்கங் கள் எல்லாம் ரத்தினச் சுருக் கம். எழுதித்தான் படிப்பார்.

இவருக்குப் பின் இப்பதவி யை ஏற்றவரே ஸ்ரீ பிரகாசா.

நாடு சுதந்திர மடையுமுன் இருந்த பிரிட்டிஷ் கவர்னர் களில் ஸர் தாமஸ் மன்ரோ, லார்ட் வெலிங்டன் இவர்கள் இருவருக்கு மட்டுமே சென் னேயில் சிலேகள் உள்ளன, சென்னேயின் எல்லா பிரிட் டிஷ் கவர்னரின் படங்களும் ராஜாஜி ஹாலில் வைக்கப் பட்டுள்ளன.

இந்தியக் கலைத்தூதர் ஸ்ரீ ராம்கோபால்

இந்தியாவின் நடனக் கலையை அயல்நாடுகளில் பரப்பி, புகழ் பெறச் செய்த பெருமை முக்கியமாக மூவரைச் சேரும். ஒருவர் ஸ்ரீ உதயசங்கர். மற்றொருவர் ஸ்ரீமதி ருக்மணிதேவி. மூன்றாமவர் ஸ்ரீ ராம்கோபால். ஸ்ரீ ராம்கோபால் தன் கோஷ்டியுடன் எடின்பரோ பிலிம் விழாவில் ஆடின நடனக் காட்சி ஒன்று இங்கு சித்தரிக்கப்பட்டிருக்கிறது. விழாவிற்கு வந்த யாவரும் இந்திய நடனங்களை மிகவும் ரஸித்தார்களாம்.

அழகே உருவான ஆடும் பெருமான்

இம்மாத ஆரம்பத்தில் சென்னை ராஜாஜி ஹாலில் இந்திய உலோக வேலைப் பொருள்கள் கண்காட்சி நடைபெற்றது. அதில் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சேகரிக்கப்பட்ட அரிய பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன.

இந்தியாவின் கைவேலைப் பொருள்களில் உலோக வேலைப்பொருள்கள் முக்கிய ஸ்தானத்தை வகிக்கின்றன. உலோக வேலை இந்நாட்டில் புராதனகாலந் தொட்டே நடந்து வந்திருக்கிறது.

உலோக வேலைப் பொருள்களில் எத்தனையோ வகைகளும் ரகங்களும் இருக்கின்றன. இந்த உலோக வேலைப் பொருள்களில் மிகவும் முக்கியமானவை வெங்கலச் சிலைகள். அவை ஈடிணையற்ற எழிலுடன் விளங்குகின்றன. உருவ அமைப்பு பூர்ண அழகு முற்றுப் பெற்றவையாக இருக்கிறது. கோவில்களிலும் வீடுகளிலும் அவை அழகுற விளங்குகின்றன. அவை புராதன காலச் செல்வங்கள். இந்த வகையைச் சேர்ந்த விக்ரகங்களுள் ஒன்று அழகே உருவான ஆடும் பெருமான். ஒவ்வொரு கோயிலிலுள்ள நடராஜ விக்ரகமும் ஒவ்வொரு விதத்தில் தனி அழகு படைத்ததாக விளங்குகிறது.

தஞ்சாவூர் உலோக வேலைப் பொருள்களுக்குப் புகழ்பெற்று விளங்குகின்றது. செம்பு, பித்தளை, வெள்ளி ஆகிய உலோகங்களில் தட்டு, கிண்ணி, பெட்டி முதலியவை செய்யப்படுகின்றன.

தென்னிந்திய விக்ரகங்கள்



உடையாபரணங்கள் தங்கம், வெள்ளி நகைகள் முதலியவை எல்லா ராஜ்யங்களிலும் சகஜமாகத் தயாரிக்கப்படுகின்றன. சென்னை, திருவாங்கூர் — கொச்சி, மேற்கு வங்காளம் ஆகிய ராஜ்யங்களில் வெண்கல வேலைப்பாட்டுப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. வெண்கலத் தயாரிப்புக்கு செம்பு, ஈயம், துத்தநாகம் ஆகிய உலோகங்களை சரியான விகிதப்படி சேர்த்த பின்பே செய்யப்பட வேண்டும்.

ஒரிஸா, ஹைதராபாத் ஆகிய ராஜ்யங்களில் கம்பி வேலைப் பொருள்

இந்த தட்டு தஞ்சாவூருக்கு சிறப்பு தருவது

சிலைகளின் சிருஷ்டி கர்த்தா அழகே உருவான சிலைகளை கல்களிலும் உலோகங்களிலும் அமைக்கும் கலைஞர்கள் புராதனகாலம் முதற்கொண்டே இந்தியாவில் இருந்து வருகின்றனர். இவர்கள் ஸ்தபதிகள் என்று அழைக்கப்படுகின்றனர். ஒரு காலத்தில் ஏராளமாக இருந்த இவர்கள் எண்ணிக்கை இன்று விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் இருக்கிறது. அந்த ஒரு சிலரும் இன்று ஆதரிப்பாரின்றித் தவிக்கின்றனர்.

உலகின் பல பகுதிகளிலுள்ள மியூஸியங்களிலும் நடராஜர் சிலை அதிசயப் பொருளாகவே கருதி வைக்கப்பட்டிருப்பதிலிருந்து இதன் சிறப்பை என்னவென்பது?

கள் சிறந்து விளங்குகின்றன. சமீபத்தில் பம்பாயில் செம்பு வேலைப் பொருள்கள் பிரபலமடைந்து வருகின்றன.

கைத்தறிக்கு அடுத்தபடி உலோக வேலை தான் நம் நாடெங்கும் வியாபித்துள்ள கைத்தொழில். இத்தொழிலை பிரபலப்படுத்த அகில இந்திய கைவேலைப் பொருள்கள் போர்டு ராஜாஜி மண்டபத்தில் விசேஷ கண்காட்சியை நடத்திற்று. இதர நகரங்களிலும் இக் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

பல பாகங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட உலோகப்பொருள்கள்

வாசனை சாந்து உற்பத்தி

எக்ஸ். வி. கொரைரா

வாசனை சாந்து அலங்கார சாதனங்களில் இன்றியமையாத ஒன்றாகும். இது தாய்குலத்திற்கு மட்டுமின்றி, ஆண்களுக்குங் கூட உபயோகப்பட்டு வருகிறது.

பண்டைக் காலந் தொட்டு வானளாவும் இந்துக் கோவில்களின் கோபுரங்கள், கல்வெட்டுகள், சிற்பங்கள் முதலியவை பாரத நாட்டின் கலாச்சாரத்தின் சின்னமாகத் திகழ்ந்து வருவது போல், நம் நாட்டு பெண்கள் உபயோகித்து வரும் பொட்டும் கூட நம் நாட்டு கலாச்சாரத்தின் சின்னமாக இருந்து வருகிறது. எல்லோரா, அஜந்தா குகைகளிலுள்ள சித்திரங்களிலிருந்து பல நூற்றாண்டுகளுக்கு முன் கூட பாரத நாட்டின் பெண்கள் கண் மை, பொட்டு இவைகளை அழகு தரும் சாதனங்களாக உபயோகித்து வந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

இத்தகைய அத்தியாவசியமான பொருளை உற்பத்தி செய்வது பற்றி இப்போது கவனிப்போம்.

பண்டைக்காலத்து பொட்டு என்பதுதான் காலம் மாறிப் போனதால், இப்போது வாசனை சாந்து எனப்படுகிறது.

வாசனை சாந்துக்கு இருக்க வேண்டிய குணங்கள் மூன்று. அவை யாவன :

1. நல்ல வாசனையுள்ளதாக இருக்க வேண்டும்.

2. கண்ணைக் கவரும் நிறமுள்ளதாகவிருக்க வேண்டும்.

3. பொட்டு வைத்துக்கொண்ட பின் சீக்கிரம் உலர்ந்து போகும்படியாகவும் கட்டியாக இறுகி போகக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

பொட்டு வாசனையாக இருக்க ஏதாவது நல்ல செண்ட்டை சேர்த்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக ரோஸ், ஜாஸ்மின், சந்தனம் வாசனையுள்ளவைகளைச் சேர்த்துக் கொள்ளலாம்.

அழகான நிறமுள்ளதாக இருக்க தண்ணீரில் கரையக்கூடிய சாயப் பொருள்களை உபயோகித்துக் கொள்ளலாம். உதாரணமாக கருப்பு பொட்டு தேவையானால் நைகுரோசனையும், சிகப்பு பொட்டு தேவையானால் கார்மைனையும், நீல நிறப்பொட்டு தேவையானால், அல்ட்ராமரினையும் உபயோகிக்கலாம்.

வாசனை சாந்து தயாரிக்க உபயோகிக்கும் தண்ணீர் சுத்தமானதாக இருக்கவேண்டும். டிஸ்டில் வாட்டரில் கொஞ்சம் பன்னீர் சேர்த்து உபயோகிப்பது நல்லதாயிருக்கும்.

1. அராபிக்கோந்து 4 அவுன்ஸ் எடை.

2. தண்ணீர் 6 அவுன்ஸ் அளவு.

3. நைகுரோசின் (Nigrocine) தேவையான அளவு.

4. செண்ட் தேவையான அளவு.

செய்முறை :

1. அராபிக் கோந்து அல்லது ஏதாவதொரு நல்ல கோந்து வகையை நன்றாக பொடி செய்து தண்ணீரில் ஊறவைப்பதால், நன்றாகக் கரைந்துவிடும். இதை சுத்தமான மெல்லிய துணியின் வழியாக வடிகட்டி எடுப்பதால் தூசி முதலியவை நீக்கப்படுகின்றன.

2 அரை அவுன்ஸ் கொதிக்கும் தண்ணீரில் வேண்டிய அளவுக்கு சாயத்தைக் கரைத்து (1) உடன் நன்றாகச் சேரும்வரை கலக்கவும்.

3. தேவையான செண்ட்டை வேண்டிய அளவுக்குச் சேர்த்து நன்றாகக் கலக்கிக்கொண்டால் வாசனை சாந்து தயாராகி விடுகிறது. ★

கர்ண மகாராஜன் சண்டை

கே. என். பாலசுப்பிரமணியம்

'சுந்தரி' என்ற பெயரோடு ஒரு பெண் வந்தால், "'சுந்தரி' என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? இவள் பெயருக்கும் அந்தப் பொருளைத் தரும் சொல்லுக்கும் பொருத்தம் உண்டா?" என்றெல்லாம் நாம் ஆராய்ச்சியில் ஈடுபடுவதில்லை. ஆனால், அதே மங்கை 'அழகி' என்ற பெயர் சூடி வந்தால், மேற்கூறிய ஆராய்ச்சிகள் பிறக்காமலிரா. காரணம் என்ன? 'சுந்தரி' என்ற பெயர் நமக்குப் பழக்கப்பட்டு விட்டது. பொருளை மதியாமல் நாம் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறோம். ஆனால், 'அழகி' என்னும் போது, முதலில் சொல்லின் பொருளைத் தான் மனம் எண்ணிப் பார்க்கிறது. சுருக்கமாகச் சொன்னால், 'சுந்தரி' பழகிப்போன அளவு, 'அழகி' பரிச்சயப்பட வில்லை.

இதே போல, 'புகழேந்தி' என்ற பெயரும் பன்முறை கேட்டுக் கேட்டு நன்கு பழகிப்போன ஒன்று தான். 'நளவெண்பா' இயற்றிய ஒப்பற்ற 'வெண்பாவில் புகழேந்தி'யை முதலில் நினைவுறுத்தினாலும் அப்பெயரைத் தாங்கிய நபர் ஒரு புலவன், கவிஞன் என்றே எண்ணத் தோன்றுகிறது. புகழை ஏந்தியிருந்தார்களோ, இல்லையோ தமிழ் நாட்டில் ஏராளமான 'புகழேந்திப் புலவர்கள்' இருந்திருக்கிறார்கள். இந்த நாடோடிப் புகழேந்திகள். ஆங்காங்கே வழங்கி வரும் புராணக் கதைகளையும், நாடோடி வரலாறுகளையும் வைத்து, வில்லுப்பாட்டு உரையில் பாடல்கள் இயற்றியிருக்கிறார்கள்.

'கர்ண மகாராஜன் சண்டை' என்ற ஒரு நூலைப்பாடிய புலவரும் புகழேந்திப் புலவர்தான். ஆனால் ஒரே ஒரு வித்தியாசம்; இவர் சர்வ சாதாரணமான புகழேந்தியல்ல; 'வித்வத் சிரோமணி' என்ற பட்டந் தாங்கிய புலவர். மகா பாரத வரலாற்றிலிருந்து பெரும்பாலான செய்திகளை ஆதாரமாகக் கொண்டு, தம் கற்பனைக் கலவையைக் குழைத்து, தமிழ் நாட்டுக் கிராமிய வர்ணம் தீட்டி, இவர் அழகான சிறு காவியக் குடிசையினையைக்கட்டி விட்டார் எனலாம். காவிய மாளிகை எழுப்பியிருக்கிறார் எனக்கூற முடியாது தான்!

கர்ணனின் பெயர் தமிழ் மாணவர் எல்லோருக்கும் மிகுந்த தொல்லை கொடுக்கும் ஒன்று. 'கர்ணன்' என்ற வடமொழிப் பெயரை, 'கருணன்' அல்லது 'கன்னன்' என்றுதான் தமிழில் சொல்ல வேண்டும். வில்லி பாரதத்தில் 'கன்னன்' என்ற பெயரையே காண இயலும். ஆனால் இந்தப் புகழேந்தியார் இரண்டு கட்சிக்கும் சமரசம் செய்து வைத்து, 'கர்னன்' என்று நாமகரணம் செய்திருக்கிறார்! நூலின் பெயரும், 'கர்ன மகாராஜன் சண்டை'தான்! 1911-ல் அச்சிட்ட ஒரு பிரதி இப்பொழுது கிடைக்கிறது.

முறையான கல்வி கேள்வியில்லாத ஒரு நாடோடிப் புலவன், தன்னுடைய இயற்கை அறிவாலும் உணர்வாலும், கூடியவரை சந்தத்திற்குக் குறைவின்றி, வில்லுப்பாட்டு நடையில் ஒரு சிறு காவியம் இயற்ற முடியும் என்பதற்கு இந்த நூல்கள் எடுத்துக் காட்டு. இதில் காணப்படும் சிற்சில ரசமான வர்ணனைகள், உவமைகள், சொல்லாட்சிகள், விளக்கங்கள் எல்லாம் நம் உள்ளத்தைத் தொட்டுவிடும் விந்தையைக் காணலாம்.

வழக்கம் போல, 'கர்ண மகா ராஜன் சண்டை'யும் விநாயகர், சுப்பிரமணியர், சரஸ்வதி, ஈசுவரர், மகாவிஷ்ணு துதிகளுடனே துவங்குகிறது. இதில் ஒரு வேடிக்கை, சரஸ்வதி துதி,

''வெற்றிக் கர்னன் கதையை
 விரும்பியே நான் படிக்கப்
பக்தியுடன் இருந்து
 பார்வதியே முன் நடவாய்''

என்று முற்றுப் பெறுவதுதான்!

கர்ணனுக்குப் பொன்னுருவி என்ற ஒரு மனைவி. அவள் சிறு வயதிலேயே கர்ணனை மணந்து கொண்டுவிட்டாள். பின்னர் தேர்ப்பாகன்தானே என்ற அலட்சியம் மிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் கர்ணன் அவளிடம் தன் குலப் பெருமையை எடுத்துச் சொல்லுகிறான்:

''தக்க புகழுடைய
 தருமர் எனக்(கு) இளையார்;
வெற்றி மதயானை
 வீமன் எனக்(கு) இளையான்;
ஆனால் அழகு மன்னன்
 அருச்சுனன் என் தம்பி;
நாமக்கொடி வேந்தன்
 நகுலன் எனக்(கு) இளையான்;
சாஸ்திரர் கொடி வேந்தன்
 சகாதேவன் எனக்(கு)
 இளையான்.''

என்று,'இவர்கள் யாவரும் எனக்கு இளையவர்' எனக்கூறி, 'தான் யாருக்கும் இளைத்தவனல்ல' என நிரூபிக்கிறான் கர்ணன். அடுத்தபடி, தன் கல்வி கேள்விகளைக் கர்ணன் கூறுகிறான்:

''ஜெமதக்னி மகாரிஷி
 செல்வன் பரசுராமர்,
அவர் கையால் எந்தனுக்கு
 ஆயுதம் கற்பித்தார்,
ஆயுதவித்தை கற்று,
 அவர் கையினால் சாபம்
 பெற்றேன்.''

இவ்வாறெல்லாம் கர்ணன் தன் வரலாறு கூறிய பின்னர், பொன்னுருவி மிகுந்த வருத்த மடைந்தாள். தான் இத்தனை நாளும் கணவனை அவமதித்ததற்காகக் கெஞ்சுகிறாள்.

''காட்டிலே காய்ந்த
 நிலவானேன், கண்மணியே!
கானலிலே பெய்த
 மழையானேன்,கண்மணியே!
ஆற்றிலே கரைத்த
 புளியானேன் ஆரணங்கு!''

என்று பலபடியாகப் புலம்புகிறாள் பொன்னுருவி. 'போதாவிட்டால் புளியைக் கரை' என்பதுண்டு. குழம்புக்குத்தான் இது பொருந்தும். அதுவும் கரைத்துக் கற்சட்டியில் விடவேண்டும். ஆற்றிலே புளியைக் கரைப்பதும், கடலில் பெருங்காயத்தைக் கரைப்பதும் ஒன்றுதான்.

பெருங்கூட்டத்திற்கு முன்னே பாடும்பொழுது ஆங்காங்கே கை தட்டல் வாங்குவதற்கும் 'புகழேந்தி'யார் வழி செய்திருக்கிறார். கர்ணன் பொன்னுருவி தன்னை முன்பு அவமானப்படுத்திய கதையைச் சொல்லி வருகிறான்:

''விசையாகப் போம்பொழுது,
 வேல்பொருதும் கண்ணாளே!
தங்கத்தால் பொன் சரிகை
 தானிழைத்த முந்தானை
மாணிக்கப் பொன் சரிகை
 வைத்திழைத்த முந்தானை,
சோர்ந்து விழுந்துதடி
 சுந்தரியே என் முடிமேல்;
ஆணிப் பொன் பூமுடிமேல்
 ஆடை வந்து சேர்ந்துதடி
சேரவே கண்டும் அந்தத்
 துயிலாடை அறுத்தெறிந்தாய்;
உள்ளாடை யோடே நீ.
உட்கட்குப் போய் நுழைந்தாய்!''

இப்படி உள்ளன்புடன் 'உள் நாட்டுக்குப் போகும்' காட்சியை இன்றேரிடத்திலும் பார்க்கிறோம்; துரியோதனன் மனைவி கர்ணனுடன் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருக்கிறாள். துரியோதனன் வந்தவுடன் அவன் மனைவி 'மாமா' வென்று எழுந்தாள். உடனே கர்ணன்,

''முன்றானை பற்றி

 இழுத்தேன் காண் மொய்
 குழலே!
பற்றியிழுத்திடனே
 பாவை நல்லாள் முன்றானை,

முத்து நவரத்தின
முழு வயிரப் பொற் சரிகை
தைத்தி யிருந்தது காண்
தேன் மொழியாள் பூவாடை,
முத்துச் சரத்தை
முடியவிழ்த்து விட்டது போல்
ஆலித்து விழுந்தது காண்
ஆரணங்கு பூவாடை
கலகலென்(று) அத்தனையும்
கழன்று விழுந்தது காண்.
அத்தனையும் பாராமல்
அன்ன நடையாளுள்
உள்ளாடை யோடேதான்
உட்கட்டுப் போய் நுழைந்தாள்.''

இரண்டு இடங்களில் இவ்வாறு இனக் கவர்ச்சியைக் காட்டிய புலவர், இனப்பூசலை ஓர் இடத்தில் வெளிப்படுத்தவும் தயங்கவில்லை. கர்ணனுக்குப் பிறகு, துரோணரின் மகன் அஸ்வத்தாமனைத் துரியோதனன் சேனாதிபதியாக்குகிறான். அஸ்வத்தாமன் பஞ்சபாண்டவர்களின் மக்கள் எல்லோரின் தலையையும் கொய்து வந்து விடுகிறான். அந்தக் கோரக் காட்சியைக் காணச் சகியாது, துரியோதனன் வாயிலிருந்து வார்த்தைகள் வெடித்து வருகின்றன.

''செல்வரைக் கொல்வதற்கோ
சேனாபதி அளித்தேன்?
பாலகரைக் கொல்வதற்கோ
பாக்கிலை நான் கொடுத்தேன்?
இளம்பஞ்ச பாண்டவரை
ஏன் கொன்றாய், பாலகனே?
பார்ப்பாரப் புத்தியினால்
பாலகரைக் கொன்றாயோ!''

கடைசி அடியைப் பக்க வாத்தியங்களோடு பாடும்பொழுது, கை தட்டல் வானைப் பிளந்திருக்க வேண்டும்!

கர்ணன் கதையிலேயே அவன் ஈகைக் குணமும், அதன் காரணமாக அவன் போர்க்களத்திலே கண்ணனிடம், இல்லை யென் போர்க்கு 'இல்லை' என்னா இதயம் நீ அளித்தருள் என்று கேட்ட இடமும் தான் மிக முக்கிய மானவை. ஆனால் நம் நாடோடிப் புகழேந்தியார், கர்ணன் கேட்ட வரம் வேறு என்று விளக்குகிறார்.

''குரு குலத்துக் கர்ணன் என்று
கொற்றவர்கள் தங்களுடன்,
பெற்றெடுத்த குந்தியென்று
பிரபலமாய்க் காண வென்று
வா(ரி) எடுத்(து) என்னை
மார்போ(டு) எடுத்(து)
அணைத்து,
முடி மன்னர் கண்டவுடன்
முலையமுது தானளித்து,
தம்பிமார் என்னைத்
தழுவி எடுத்துப் போய்,
மாணிக்க மேடையிலே
வைத்து முடி சூடி,
கை கட்டி நின்றுதான்
கர்மக் கடன் கழித்து,
'ஐவருக்கும் மூத்த ஒரு
சங்கராயன்' என்று சொல்லி
ஈரே(ழு) உலகத்து
ராசாக்கள் தான் புகழ,
மாசம் வடும் வரையில்
வில்லுயிர்தான் இருக்க—
இதுவரமே அல்லாமல்
யான் என்றும் வேண்டேன்
காண்!''

இந்தப் புதுயுகக் கர்ணன் குண சித்திரத்தைக் 'கர்ணமகாராஜன் சண்டை'யில் பரிபூரணமாய்க் காண்கிறோம். சாதாரண மானிடரைப் போல் அவன் விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாவதும், தன்னை மதியாத மனைவியிடம் மனம் நொந்து இறைஞ்சும் இடமும் மிக இயற்கையாக இருக்கின்றன. அவன் பரம்பரையும் மிகுந்த வீரமுடையதுதான். சூரிய பற்பன், சுந்தர பற்பன் என்ற இரு பிள்ளைகளும் நடுவனுடன் சண்டை பண்ணி ரணகளத்தில் தான் மடிந்தார். கர்ணன் இறந்த பிறகு அவன் மனைவி பொன்னுருவி தன் மகனைக் (?) காப்பாற்றுவதற்காகத் தீப்பாய்ந்து மாயா மலிருந்தாள் என்கிறார் ஆசிரியர்.

இன்னொரு புதிய செய்தியையும் கர்ணனைப் பற்றித்தான் - அறிகிறோம். கர்ணன் பிறந்தவுடன் குந்தி தேவி பெட்டியில் வைத்து அவனை ஆற்றில் விட்டாளல்லவா? அது எந்த ஆறாக இருக்குமென்று நினைக்கிறீர்கள்?

''பெற்று வளர்த்து நான்
பெருமகிழ்வு கொள்ளாமல்,
வைகையிலே விட்டுவிட்ட
மாபாவி ஆனேனே !''

என்று குந்தி தேவியின் வாய் மொழியாகவே வருகிறது. பிற்கால ஆராய்ச்சியாளர், தென்னாட்டில் வைகை நதி தீரத்தில்தான் மகா பாரத வரலாறு நிகழ்ந்தது என நிரூபிக்க இந்தக் 'கர்ண மகா ராஜன் சண்டை' பெரியதொரு சான்றாக விளங்கும்!

இந்த வரலாற்றில் படிப்பினை என்ற பகுதி காந்தாரியின் வாய்ச் சொல்லாக வருகிறது வியாச முனிவர் முன்பு ஒரு முறை காந்தாரீ கூறியதை அவருக்கு நினைவுறுத்துகிறார் :

''எந்நாளும் தர்மம் வெல்லும்
இடர் செய்யும் கர்மம்' என்று
பொறுத்தார் புவி ஆள்வார்—
பூமியே சாட்சிய தாய் !
பொறுக்க அறியாதார்
பூமியிலே தாம் மடிவார்—
பஞ்ச பூதங்களுந்தான்
பகல் இருளே சாட்சியாய்!''

கடைசியாக, வழக்கம் போலவே நூலாசிரியரை ஆதரித்த வள்ளல், அச்சிட்டுக் கொடுத்தவர், நூலைக் கொள்வர், படித்தவர், கேட்டவர் எல்லோருக்கும் நன்றியும் ஆசியும் சொல்லி இந்தக் கதை முடிகிறது; நம்மையும் காப்பாற்றுகிறது !

இப்புலவர் சிற்சில பெயர்களைச் சிதைத்து வழங்கி யிருப்பது கவனிக்க வேண்டிய ஒன்று : கிரியாதிரன் (துரியோதனன்), வீஷ்மர் (பீஷ்மர்), சயிந்தவன் (சயத்திரதன்), துஷ்ட தூய்மன் (திருஷ்டத்தும்னன்), காண்டாவனம் (காண்டகவனம்), தருமலிங்கம் (தர்மர்), முதலியவற்றை எடுத்துக் காட்டலாம். வழக்கு மொழியான, 'குன்றாததூங் குன்றினன்' என்பதைக் 'குண்ணதுங் குண்ணினன்' எனவும்; 'உண்டது' என்பதை 'உண்ணது' எனவும் புலவர் கூறுகிறார். இவற்றைப் போல் இன்னும் எவ்வளவோ !

காந்தாஸம், வங்கிஷம், முத்திரித்தல், வகிழ்ந்திருப்பார் (மகிழ்ந்திருப்பார்), ஏளிதம் (ஏளனம்), கதரி (அவர்), அக்கியாதவாசம், (அக்ஞாதவாசம்) முதலிய புதிய சொற்களையும், சொல் திரிபுகளையும் இதில் காண்கிறோம்.

சகுனியின் குணநலத்தைப் பற்றி ஓரளவு தெரிய வருகிறது, இந்நூல் மூலம். துரியோதனனிடம் அவன் மனைவி பெருந்திருவாழ் நாயகி வருத்தத்தோடு போகிறாள். அப்போது அவள் சகுனியை, 'குடி கேடனார் சகுனி' என்கிறாள். ('குடிகேடன்' என வைதாலும் 'ஆர்' விகுதி கொடுத்து மதிப்பு வைத்ததை மறக்கவே முடியாது!) தொடர்ந்து, சகுனிக்கும் பட்டங்கள் பலவும் வழங்குகிறாள் :

''முட்டி முட்டிப் போக
மூதேவி! பட்டிமகன் !
கட்டைத் தலையன் !
கறுகுசிறையான் ! மாபாவி !
பட்டு விழுவான் !
பறையன் ! சகுனி யல்லோ !''

இவ்வளவும் போதாதென்று,

''கொல்லைக்குப் பல்லி
குடிக்குச் சகுனி''

யென்று ஒரு புதுமொழியும் தமிழ் மொழிக்கு ஆக்கி அளிக்கிறாள்!

இன்னும், சில உரிமைகள் உள்ளங் கவர்வனவாய் உள்ளன. கர்ணன் அழைப்பதாகக் கூறிய தாதியரைப் பார்த்துப் பொன்னுருவி, 'சிங்கத்தின் குட்டியைப் போல் சீறி அவள் பற்கடித்தாள்? கணவனின் உயர் குடிப்பிறப்பறிந்ததும் அதே பொன்னுருவி,

' காம விகாரமதைக்
கடுகியவள் தான் நினைந்து,
ஆங்கார மாகியே
அலறி அவள் தான் எழுந்து,
குறுக்காக வந்து
கொற்றவனைத் தான் பிடித்து,
மானும் கலையும்
மருவி அணைந்தது போல்
கொங்கைகளும் மார்பும் அழுந்தக்
கொற்றவனை தான் தழுவி.''

இவ்வாறு பிராயச்சித்தம் செய்து கொள்கிறாள். பின்னர், கர்ணன் போருக்குப் புறப்படும் பொழுது பொன்னுருவியின் நிலை என்ன?

''ஈரச் சுவரது போல
இடிந்(து) இளங்கொடியாள்
அலைவந்து சேர்ந்தது போல்
சங்கனிடமே விழுந்து''

அழுது புலம்பி நைந்துருகுகிறாள். 'பருத்திப் பொதி தனிலே நெருப்புப் பொறியது போல்' ஐவரையும் எரித்து விடுவதாகச் சொல்லிப் புறப்படுகிறான் கர்ணன்.

கர்ணன் தங்கள் அண்ணன் என்று அவன் உயிர் பிரியும் தருணத்திலேதான் பஞ்சபாண்டவர்களுக்குத் தெரிகிறது. அப்போது அவர்கள்,

''ஓமப் புகையில் நெய்யை
ஊற்றினவா றதுபோல்,
ஆறாத் துயரமுற்று
அனலில் மெழுகாகி,
'அண்ணாவே!' என்று
அலறிப் புரண்(டு) அழுதார்;

'கன்றிழந்த பசுவைப் போல்' கதறிப் புலம்பினர்.

''ஆண்டாண்டு தோறும்
அழுது புரண்டாலும்
மாண்டார் வருவதுண்டோ,
வர்ண மணி விளக்கே!''

என்று, குற்றுயிராய்க் கிடக்கும் கர்ணன் தாயைத் தேற்றுகிற சந்தர்ப்பத்தில், நிலையாமை பற்றிய நிலைத்த உண்மை ஒன்றை நிலையான பழமொழியோடு தருகிறார் வித்வத் சிரோமணிப் புலவர்!

இறந்து போன மன்னவரின் பத்தினிமார் எல்லோரும் போர்க்களத்தில் தீக் குளிக்க வருகிறார்கள். ஆசிரியர் அந்த இடத்தை உவமிக்கும் அழகை பாருங்கள்:

''ஆட்டுக் கடாவை
அடித்தோட்டி விட்டாற் போல்
அலறித் தலை விரித்து
அணைவோரும் தாமெழுந்து
'கோ' என்ற சத்தமுமாய்க்
குருக்ஷேத்திரம் தான் நோக்கி''

வந்து சேர்ந்தார்களாம். கண்ணீர் சிந்த வேண்டிய ஒரு கட்டத்திலேயும் இப்படி நகைச்சுவை சொட்டும் உவமையைக் கையாண்டவரைப் 'புகழேந்தி' என்றோ, 'வித்வத் சிரோமணி' என்றோ சொல்வதில் என்ன தவறு இருக்க முடியும்?

இலக்கிய நயம் செறிந்த பண்டைப் பெரு நூல்களையே படித்துத் திளைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு, 'கர்ண மகாராஜன் சண்டை' போன்ற சிறு நாடோடி இலக்கியங்கள் சிறந்த, இனிய, சுவை மிகுந்த பொழுது போக்கு அம்சங்களாக அமையும் என்பதில் ஐயமில்லை. ★

''கருத்துச் சுதந்திரம் இல்லாவிடில், ஞானம் என்பதொன்று இராது. பேச்சுரிமை இல்லாவிடில், பொது விடுதலை என்பதொன்று வாழாது. பேச்சுச் சுதந்திரம், ஒருவன் அதனைக் கொண்டு மற்றவனுக்குக் கேடு விளைக்காதவரையும் மற்றவனது உரிமையைக் கட்டுப்படுத்தாதவரையும், ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உரிமையாகும்... ஒரு நாட்டின் சுதந்தரத்தைத் தொலைக்க நாடுகிறவன் அதற்கு ஆரம்பமாகப் பேச்சுரிமையை ஒடுக்க வேண்டும்.''

—பிராங்கிளின்.

''ஒருவரையும் வருத்தப்படுத்தாதென்று உறுதியாகத் தெரியும்வரை ஒன்றையும் அச்சிடுதலாகாதென்று அச்சடிப்போர் யாவரும் தீர்மானஞ் செய்தால், அதிகமாக ஒன்றையும் அச்சிட முடியாது......நான் அச்சுத்தொழிலை விடமாட்டேன். நான் என் வேலையைத் தொடர்ந்து செய்வேன். நான் என் அச்சுக்கூடத்தை எரிக்க மாட்டேன்; என்னிடத்திலுள்ள எழுத்துக்களை உருக்கமாட்டேன்.''

—பிராங்கிளின்.

முற்காலத்தில் செய்யுள் இயற்றுவதில் வல்லவர்களான பல புலவர்கள் இருந்தனர். அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொருவித செய்யுள் வகையைப் பாடுவதில் சிறப்புற்றிருந்தனர். உதாரணமாக,

''வெண்பாவிற் புகழேந்தி,
பரணிக்கோர்
சயங்கொண்டான், விருத்த
மென்னும்
ஒண்பாவி லுயர்கம்பன்,
கோவையுலா
வந்தாதிக் கொட்டக் கூத்தன்;
கண்பாய கலம்பகத்திற்
கிரட்டையர்கள்.
வசைபாடக் காளமேகம்,
பண்பாகப் பகர் சந்தம் படிக்காச
லாதொருவர் பகரொணாதே''

என்னும் செய்யுளிலிருந்து அதனை அறியலாம். இதிலிருந்து, படிக்காசுப் புலவர் சந்தம்பாடுவதில் சிறந்து விளங்கியவரெண்பதும் அறியக்கிடக்கிறது.

படிக்காசுப் புலவர்

(மாத்தளை – அருணேசர்)

இப்புலவரவர்கள் தொண்டை நாட்டில் செங்கற்பட்டுக்குச் சமீபத்திலுள்ள பொன் விளைந்த களத்தூரில் கைக்கோளர் மரபில் 285 ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்தார் எனக் கூறப்படுகிறது.

இவர் ஸ்தலயாத்திரை செய்து வந்தபோது, சிதம்பரத்தை யடைந்து அங்கு எழுந்தருளியுள்ள சபாபதியையும் சிவகாமி அம்மையையும் தரிசித்துத் துதித்து நின்றார். அவரின் நிலைக்கு இரங்கிச் சிவபெருமான் பஞ்சாட்சரப் படியில் ஐந்து பொற்காசுகள் வைத்தருளினார். அதனைப் பெற்ற படியால் அவரைப் படிக்காசுப் புலவர் என எல்லோரும் அழைக்கத் தொடங்கினர். அதுவே அவருக்கு நிலைத்த பெயராக விளங்கலாயிற்று.

இவர் ''பழமொழி விளக்கம்'' என்னும் ஓர் அருமையான நூலைச் செய்துள்ளார். இதன் ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு பழமொழியை விளங்கவைத்துப் பாடியுள்ளார். இவரால் பாடப்பட்ட வேறு பல நூற்களுமுள. ''தொண்டைமண்டல சதகம்'', ''புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம்'' முதலியவற்றை முக்கியமாய்க் கூறலாம். தொண்டை மண்டல சதகம் என்னும் நூலில் தொண்டை நாட்டிலுள்ள பல வித்துவான்கள், பிரபுக்கள் ஆகியோர்களுடைய சிறப்பை எடுத்துக் காட்டியுள்ளார். புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் என்னும் நூலில் புள்ளிருக்கு வேளூரில் எழுந்தருளியுள்ள வைத்தீசுவரர் என்ற சிவபெருமானைப் பற்றிப் போற்றிப் பாடியுள்ளார்.

மேற்கூறப்பட்ட நூற்களையன்றி இவர் சமயோசிதமாகவும் சாதுரியமாகவும் பாடிய தனிப்பாடல்கள் பல உண்டு. வல்லநகரத்தில் வாழ்ந்த காளத்தி பூபதி மாவண்டூரில் வாழ்ந்த கஸ்தூரி முதலியாரின் புதல்வர் கறுப்ப முதலியார், இராமநாதபுரத்து மகாராஜாவாகிய இரகுநாத சேதுபதி, மதுரைத் திருமலை நாயகர், காயற்பட்டணத்துச் சீதக்காதி முதலியோர்களின் பேரில் பாடப்பட்டவை முக்கியமானவை.

இவர், மேற்குறித்த கறுப்ப முதலியாரின் வேண்டுகோளிற்கிணங்கி தொண்டைமண்டல சதகம் பாடி அரங்கேற்றிய

பொழுது, அந்தப் பிரபு இவருக்கு மிக்க திரவியங்களை அளித்தது மன்றி, இவரைப் பல்லக்கின் மேலேற்றி ஊர்வலஞ் செய்விக்கத் தொடங்கி, அப்பொழுது தாமும் தம் தம்பியருமாகப் பல்லக்குத் தூக்கிச் சென்றனர், இதனைப் புலவரவர்கள் மகிழ்ந்து பாடிய கீழ்க்காணும் செய்யுளால் அறியலாம்.

''எல்லப்பனம்மையப்பன் றருதிரு
வேங்கடநாத னெழிற் சிராமன்
வல்லக் கொண்டையன் மாதை
வேங்க
டேசுரன்போல வரிசை செய்தே
செல்லத் தம்பியருடனேகத்
தூரி மகன்
கறுப்பன் தெருவீதிக்கே''
பல்லக்குத்தான் சுமந்தான்
அது நமக்
கோராயிரம் பொன்
பரிசுதானே''

இங்ஙனம் இவர் பல்லக்கு முதலிய விருதுகளுடன் வெகு ஆடம்பரத்தோடு மதுரையை அடைந்த பொழுது, அங்கு அரசாண்டிருந்த திருமலை நாயகர் இவரைப் பிடித்துக் கிளிக்கூட்டுச் சிறையில் அடைத்து வைத்து விட்டார். கூட்டுக்குள்ளிருந்த படியே புலவர் பின் வருமாறு ஓர் செய்யுளைப்பாடி வருந்தினர்.

''நாட்டிற் சிறந்த திருமலையா
துங்க நாகரிகா
காட்டில் வனத்தில் திரிந்
துழலாமல் கலைத்தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த படிக்காச
னென்னுமோர் பைங்கிளியைக்
கூட்டிலடைத்து வைத்தாய்
இரைதாவென்று கூப்பிடுதே.''

இதனைக் கேட்ட நாயகர் உடனே அவரைச் சிறையினின்று விடுவித்ததோடு அவருக்குப் பல பரிசுகளையும் அளித்துச் சிறப்பித்தார்.

புலவரின் காலத்தில் அவருடனிருந்தவர் வித்துவான் பல பட்டடைச் சொக்கநாதப் புலவர் முதலியோராவர். இப்புலவர் அவரைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். அப்பாடல் வறுமாறு:-

''மட்டாருந் தென்களந்தைப்
படிக்காச
னுரைத்ததமிழ் வரைந்த
ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும்
பரிமளிக்கும் பரிந்தவவேட்டைத்
தொட்டாலும் கைமணக்கும்
சொன்னாலும்
வாய்மணக்கும் துய்யசேற்றில்
நட்டாலும் தமிழ்ப் பயிராய்
விளைந்திடுமே
பாட்டினது நளினந்தானே'', ★

''நாடு சுதந்திரமடையும் முன் காங்கிரஸ் வனவாசம் செய்ய நேர்ந்தது. இந்த ஸ்தாபனத்திலுள்ளவர்கள் பரிசுத்தமடைய முடிந்தது. ஆனால் இன்று காங்கிரஸ் வனவாசம் செய்யவில்லை. ஆட்சி பீடத்தில் இருக்கிறது. ஆகவே ஸ்தாபனத்திற்குள் விரும்பத்தகாத சக்திகள் புக இடமுண்டு. இந்த நிலைமையில் மக்களுக்காக அவர்கள் ஓரளவு தியாகம் செய்வதற்கான திட்டம் ஒன்று வேண்டும். நாட்டின் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பூதான இயக்கம் அம்மாதிரி திட்டங்களில் ஒன்று.''

—வினோபாஜி

தாவர வளர்ச்சிக்கான உணவுகள்

அ. ராம்கோபால்

நாம் உயிர் வாழ உணவுப் பொருள்கள் எப்படி அவசியமோ அதே போல் தாவரங்கள் செழித்து வளர உணவுப் பொருள்கள் அவசியம். அவற்றை விவரிக்கிறது இக்கட்டுரை.

நாம் பிரதானமாக அரிசி, காய்கறிகள், பருப்பு, எண்ணெய், பால், பழம் முதலியவற்றைச் சாப்பிட்டு வாழ்கிறோம். இவற்றையே நாம் நம் உணவெனச் சொல்லுகிறோம். ஆனால் உண்மையில் அரிசியோ, பாலோ பழமோ நம் உணவல்ல. அவற்றில் அடங்கியுள்ள புரொடீன், கார்போஹைட்ரேட், கொழுப்பு, கால்ஸியம், பாஸ்பரஸ், இரும்பு வைடமின்கள் முதலியவையே நமக்கு உணவாகப் பயன்படுகின்றன. உதாரணமாகக் கைக்குத்தல் அரிசியை எடுத்துக் கொள்ளுவோம். அதில் நமக்கு உணவாகப் பயன்படும் சத்துக்கள் கீழ்கண்ட விகிதம் அடங்கியுள்ளன.

ஜலம்	14 5%
புரொடீன்	6·8%
கொழுப்பு	1 4%
கால்சியம்	0·01%
பாஸ்பரஸ்	0 21%
இரும்பு	0·0036%
மற்ற கனிஜம்	1 1%
மொத்தம்	24·0236%

நாம் உணவாக உட்கொள்ளும் அரிசியில் கால் பங்கே அதாவது 24 0236% தான் நமக்கு உணவாகப் பயன்படுகிறது. பாக்கி முக்கால் பங்கு அதாவது 75 9764% நமக்குப் பயன்படாத பொருள்களே அரிசியில் அடங்கியுள்ளன. இதேபோல்தான் நாம் சாப்பிடும் மற்ற உணவுப்பொருள்களும்.

இரு வகைகள்

நாம் உண்ணும் உணவுப் பொருள்களை தாவரங்களிலிருந்து கிடைப்பவை, பிராணிகளிலிருந்து கிடைப்பவை என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பாலும் மாமிசமும் பிராணி வகையிலிருந்து கிடைப்பவை. மற்றவை எல்லாம் பெரும்பாலும் தாவரங்களிலிருந்து கிடைப்பவையே பாலும் மாமிசமும் கொடுக்கும் ஆடுமாடு முதலியவைகள் உண்ணும் புல், புண்ணாக்கு, பருத்திக்கொட்டை எல்லாமே தாவரங்களிலிருந்து அவற்றிற்குக் கிடைப்பவையே. ஆகையால் உண்மையில் பால், மாமிசம் மூலம் நமக்குக் கிடைக்கும் உணவுச் சத்துக்களும் தாவரங்களிலிருந்து கிடைப்பவையே.

தாவரங்களுக்கு இவ்வுணவுச் சத்துக்கள் எங்கிருந்து கிடைக்கின்றன? ஆராய்ச்சிகள் செய்ததில் அவை இச்சத்துக்களை நீர், நிலம், காற்று முதலியவற்றிலிருந்து பெருகின்றன எனத் தெரியவந்துள்ளது. ஆனால் நீரிலோ, நிலத்திலோ, காற்றிலோ புரொடீனும் இல்லை, கார்போஹைட்ரேட்டுமில்லை, கொழுப்புமில்லை. ஆகையால் தாவரங்கள் அவற்றை உணவாக உட்கொள்ளுவதென்பது சாத்தியமல்ல. நீர், நிலம், காற்றில் நீரகம், பிராணவாயு, கரியமிலவாயு, பாஸ்பரஸ், கால்சியம், இரும்பு, கந்தகம் இன்னும் பல பொருள்கள் உள்ளன. இவற்றையே தாவரங்கள் தங்கள் உணவாக உட்கொள்ளுகின்றன. எவை எவையிலிருந்து என்ன என்ன பொருள்களை உட்கொள்ளுகின்றன என்பதை கீழே காணலாம்.

1. காற்றிலிருந்து: கரியமில வாயுமட்டும்.

2. நீரிலிருந்து: நீரகமும் பிராணவாயுவும்.

3. நிலத்திலிருந்து: நைட்ரஜன், பாஸ்பரஸ், பொடாசியம், கால்சியம், சோடியம், மாக்னிசியம், கந்தகம், குளோரின், சிலிகான், துத்தநாகம், நிக்கல், இரும்பு, போரன், மாங்கனீஸ், செம்பு, அலுமினியம், புரோமின், அயடின், பாஷாணம், கொபால்ட், ப்ளோரின், வெனெடியம், செலனியம் முதலியவை.

இவ்விதம் நீர், நிலம், காற்று மூன்றிலிருந்தும் உட்கொள்ளும் பொருள்களை தாவரங்கள் தங்களுக்கு வேண்டிய செல்லுலோஸ், பிசின். புரொடீன், கார்போஹைட்ரேட், எண்ணெய், கொழுப்பு, ஸ்டார்ச், சாம்பல் முதலியவைகளாக மாற்றியமைக்கின்றன. இவற்றில் நம் உணவுக்கு முக்கியமாகத் தேவைப்படுவது புரொடீன், கார்போஹைட்ரேட், கொழுப்பு முதலிய மூன்றுமே. தாவரங்கள் தாங்கள் உட்கொள்ளும் எப்பொருள்களை எந்த எந்த அளவில் கலந்து இப்பொருட்களைத் தயாரிக்கின்றன எனச் சோதனைகள் நடத்தியதில் கீழ்கண்ட உண்மைகள் தெரிய வந்துள்ளன.

	புரொடீன்	கா. ஹைட்ரேட்	கொழுப்பு
1. கரி	52%	44·5%	77%
2. நீரகம்	7%	6%	11·5%
3. நைட்ரஜன்	15%		
4. பிராணவாயு	23%	49·5%	11·5%
5. கந்தகம்	2%		
6. பாஸ்பரஸ்	1%		
	100	100	100

தாவர உணவுகள்

நீர், நிலம், காற்று மூன்றிலிருந்தும் தாவரங்கள் உட்கொள்ளும் உணவுப் பொருள்களை இரண்டு பிரிவாகப்பிரிக்கலாம். தாவரங்களுக்கு அதிக அளவில் தேவைப் படுபவை ஒரு வகை, மிகமிகச்சிறு அளவில் தேவைப் படுபவை மற்றொரு வகை. தண்ணீர், கரியமிலவாயு, நீரகம், பிராணவாயு, நைட்ரஜன், பாஸ்பரஸ், பொடாசியம் கால்சியம், சோடியம், மாக்னிசியம், கந்தகம், குளோரின், சிலிகான்—இந்தப் பதின்மூன்று தாவரங்களுக்கு அதிக அளவில் தேவைப்படுபவை. மற்றவை மிக மிகச் சிறு அளவில் தேவைப்படுபவை. கோதுமைக்கு அதிகமாகத் தேவைப்படும். உணவுப் பொருள்கள் எந்த எந்த அளவு வேண்டும் என்பதைக் கீழே காணலாம். இது ஒரு உதாரணத்துக்காக கொடுக்கப் பட்டிருக்கிறது.

ஜலம்	10·00%
கரி, நீரகம், பிராணவாயு	... 86·00%
நைட்ரஜன்	1·93%
பாஸ்பரஸ்	0·83%
பொடாசியம்	0·54%
கால்சியம்	0·06%
சோடியம்	0·04%
மாக்னிசியம்	0·21%
கந்தகம்	0·16%
க்ளோரின்	0·006%
சிலிகான்	0·040%

மிக மிகச்சிறு அளவில் தேவைப் படும் உணவுப் பொருள்கள் ஒவ்வொன்றும் எந்த எந்த அளவு கோதுமைக்குத் தேவை என்பதையும் கீழே காணலாம்.

	பத்துலட்சத்தில்
துத்தநாகம்	100 பங்கு
நிக்கல்	35 ,,
இரும்பு	31 ,,

போரன்	16	,,
மாங்கனீஸ்	24	,,
செம்பு	6	,,
அலுமினியம்	3	,,
புரோமின்	2	,,
அயடின்	0·006	,,
பாஷாணம்	0·1	,,

புளோரின் வேனடியம் செலனியம் மாலிபிட்னம்	மிகமிகச் சிறு அளவு

அதிக அளவில் தேவைப்படும் உணவுப் பொருளானாலும் சரி, மிக மிகச் சிறு அளவில் தேவைப்படு பவையானாலும் சரி, தாவரத்துக் குத்தாவரம், பயிருக்குப்பயிர் தேவை அளவு மாறுபடும். ஒவ்வொரு பயிருக்கும் ஒவ்வொரு உணவும் எவ்வளவு தேவை என் பது தனித்தனியே ஆராய்ச்சி செய்தே நிர்ணயிக்க வேண்டும். ஆனால் பொதுவாக எல்லாத்தாவ ரங்களுக்கு பயிர்களுக்கும் அதிக அளவில் தேவைப்படும் உணவுப் பொருள்கள் மேலே குறிப்பிட்ட பதினான்கே தான். இவற்றில் ஏதா வதொரு உணவுப்பொருள் போதிய அளவு தாவரத்துக்கோ பயி ருக்கோ கிடைக்காவிடில் அதன் வளர்ச்சியை அது பல வகைகளில் பாதிக்கக்கூடும் பலவித நோய் களுக்கும் காரணமாகக் கூடும். உதாரணமாக :

கரி (கார்பன்)

கரி (கார்பன்) : மனிதனின் உடல் எலும்புக்கூட்டை ஆதார மாகவைத்து எழுப்பப்பட்டிருக் கிறது. தாவரங்களும் இதே மாதிரி ஒரு வகைக்கூட்டை ஆதார மாகக் கொண்டே எழுப்பப்பட்டுள் ளன. இக்கூட்டை ஆங்கிலத்தில் பிளாண்ட் ஸ்கெலிடன் எனச் சொல்லுவார்கள். இத்தாவரக் கூடு பெரும்பாலும் கரியால் ஆனதே. இது மட்டுமல்ல. தாவ ரங்களில் பலவிதமான உயிரணுக் கள் (செல்ஸ்) உண்டு. இவை எல்லாம் பெரும்பாலும் கரியோடு நீரகமும் (ஹைட்ரஜன்) பிராண வாயுவும் (ஆக்ஸிஜன்) சேர்ந்து ஆனவையே. புரோடீன், கார் போஹைட்ரேட், கொழுப்பு, செல் லுலோஸ், ஸ்டார்ச், பிசின் முதலி யவை உற்பத்தியிலும் இதற்குப் பங்கு உண்டு. தாவரங்களுக்குப் போதிய அளவு இச்சத்து கிடைக் காவிட்டால் எல்லா வகையிலும் அவற்றின் வளர்ச்சி பாதிக்கப் படும். ஆனால் காற்றிலிருந்து தாவரங்களுக்கு இது கிடைப்ப தால் இதற்குப் பஞ்சமென்பதே இல்லை.

நீரகம்

நீரகம் : ஜல உருவில் இச்சத்து தாவரங்களுக்குக் கிடைக்கிறது. போதிய அளவு இது கிடைக்கா விட்டால் நிலத்திலிருந்து கிடைக் கும் சத்துக்கள் இலையை அடை வதோ, இலையிலிருந்து உணவுப் பொருள்கள் தாவரத்தின் பல் வேறு பாகங்களைச் சென்றடை வதோ சாத்தியமல்ல. ஆகையால் இச்சத்தும் தாவர வளர்ச்சியை எல்லா வகையிலும் பாதிக்கக் கூடியதே.

பிராணவாயு : ஜல உருவில் இச்சத்து தாவரங்களுக்குக் கிடைக்கிறது. நீரகம் போன்றதே இதுவும்.

நைட்ரஜன்

நைட்ரஜன் : தாவரங்கள் செழிப்பாக வளருவதற்கும், பூ, காய், பழம் முதலியவை அதிகமாக உண்டாவதற்கும், இலையின் வளர்ச்சிக்கும் காரணமாக இருப் பது நைட்ரஜன் தான். வளர்ச்சிக் குறைவு, தண்டு மெலிதல், அதிகக் கிளை இல்லாமை, பசுமை குறைந்து மஞ்சள் அல்லது சிவப்பு வர்ணம் கலந்த இலைகள். இளமை யிலேயே இலை உதிர்தல், பூ, காய் குறைதல், வேர் வளர்ச்சிக் குறைவு, விதைகள் சிறிதாகவும் தோல் சுருங்கியுமிருத்தல்—இவை யெல்லாம் நைட்ரஜன் குறைவால் ஏற்படுபவையே. அளவுக்கதிக மாக நைட்ரஜன் தாவரங் களுக்குக் கிடைத்தால் இலைகள் கரும் பசுமை அடையும். இலை களும் அடர்ந்து விடும். பூச்சி, பூஞ்சாணம் போன்றவை அதிக மாகத் தாக்கும். பலனும் குறைவு

படும். பழங்கள், பீட்ரூட், சர்க்கரைவள்ளி போன்ற இனிப்பான விளைபொருள்களின் தித்திப்பு சுவை குறைவுபடும்.

பாஸ்பரஸ்

பாஸ்பரஸ்: இச்சத்து வேர்களை வள்ர்க்கக் கூடியது. இதனால் வேர்கள் பூமியிலிருந்து அதிக சாரங்களை கிரகிக்க முடிகிறது. இதன் காரணமாக பலன் அதிகமாகக் காணும். சீக்கிரமாகவும் காணும். விதைகளும் பெரிதாகவும், உறுதியாகவும், திடகாத்திரமாகவுமிருக்கும் தாவரங்கள் பச்சையாக, ஆனால் வளர்ச்சி குன்றி சிறிதாகக் காணப்பட்டால் அதன் வளர்ச்சிக்குப் போதிய பாஸ்பரஸ் சத்து கிடைக்கவில்லை எனச் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். பயறு வகைகள், கிழங்குகள், பழங்கள் முதலியவை நல்ல பலன்தர இச்சத்து மிகமிக அவசியம்.

பொடாசியம்

பொடாசியம்: காற்றிலுள்ள கரியமில வாயுவை கரைக்கக்கூடிய சக்தியை இலைகளுக்குக் கொடுப்பது இச்சத்தே. இதனால் இலைகளில் நடக்கும் ஒளிச் சேர்க்கை (போட்டோ சிந்தசிஸ்) அதிகரிக்கிறது. வேர் வளர்ச்சிக்கும் இது உதவுகிறது. தித்திப்பு உள்ள பலன் கொடுக்கும் பழச்செடிகள், பழமரங்கள், பீட்ரூட் கிழங்கு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, கரும்பு போன்றவைக்கு இச்சத்து மிகமிக முக்கியம். தாவரங்களில் அமில சத்து அளவுக்கதிகமாகப் போய் விடாது மட்டம் தட்டுவதும் இச்சத்தே. இச்சத்துக் குறைந்தால் தானியமோ, பழமோ, கிழங்கோ நல்ல தோற்றத்துடனிருக்காது. ருசியாகவும் மணமாகவுமிருக்காது.

கால்சியம்

கால்சியம்: இச்சத்து தாவரங்களின் உயிரணுக்கள் உற்பத்திக்கு மிகவும் அவசியமானது. சல்லி வேர்கள் வளர்ச்சிக்கும் இது முக்கியமானது. இச்சத்துக் குறைவால் பூக்கள் உதிரும், இலை ஓரங்கள் சுருங்கி மடியும். கிழங்குகள் சரியாகப் பெருக்காது. நிலத்தில் உள்ள நைட்ரஜன் சத்து சரியாகத் தாவரங்களுக்குக் கிடைக்காதும் போய்விடும்.

மாக்னீசியம்

மாக்னீசியம்: தாவரங்களின் உயிரணுக்கள் உற்பத்திக்கு உதவுகிறது. இலைகளில் உள்ள குளோரோபீல் என்னும் பச்சைப் பொருள் உற்பத்திக்கும் இது உதவுகிறது. இக்குளோரோ பீல்லோ ஒளிச்சேர்க்கை மூலம் தாவர உணவு உற்பத்திக்கு உதவுவது. குளோரோபில் இன்றேல் பெரும்பாலான தாவரங்கள் ஜீவிப்பதென்பதே சாத்தியமில்லை. இச்சத்துக் குறைவால் இலைகளில் மஞ்சள் சிகப்பு புள்ளிகள் விழும். சீக்கிரமாக இலைகள் உதிரும். இலைகளின் நுனி முதலில் பசுமை குறைய ஆரம்பித்து பிறகு படிப்படியாக காம்பு நோக்கி பசுமை குறைந்து கடைசியில் இலை முழுவதுமே வெண்மை அல்லது மஞ்சள் கலந்த வெண்மை நிறமாக மாறும்.

இதர வகைகள்

சிலிகான்: கோதுமை. நெல், பார்லி போன்று ஒரே பருப்புள்ள (மானோகொடிலீடன்ஸ்)வையும் நேர் நேரான நரம்பு கொண்ட இலையுள்ளவைகளுமான தாவரங்களுக்கு இச்சத்து மிகவும் முக்கியமானது. பயிர்களின் விளைவு ஒரே மாதிரி, ஒக்ர சமயம் கண்டு, ஒரே சமயம் முற்றுவதற்கு உதவுவது இச்சத்து. இது குறைந்தால் ஒரே சமயம் முற்றி அறுவடைக்குத் தோதாக விளையாது.

கந்தகம்: தாவரங்களில் புரோடீன் சத்து உற்பத்திக்கு தேவையான பொருள்களில் இதுவும் ஒன்று. இது போதிய அளவு தாவரத்துக்கு கிடைக்கா விட்டால் விளைவின் தரமும் அளவும் குறைபடும். இலைகள் பசுமை குன்றி அவற்றில் மஞ்சள் அல்லது காப்பி நிறப் பொட்டுகள் உண்டாகும்.

இரும்பு : இலைகள் பசுமை குன்ருதிருக்கவும் தங்கள் அலுவலை சரியாகச் செய்யவும் இரும்பு அவசியம். காற்றிலிருந்து இலைகள் கிரஹிக்கும் கரிசத்து இரும்பு இல்லாவிட்டால் பயனுடையதாகாது. நிலங்களில் சாதாரணமாகப் போதுமான இரும்பு சத்து இருந்த போதிலும் மிகுதியான சுண்ணும்புச் சததின் காரணமாகவோ அல்லது அமில சத்து போதுமான அளவு தாவரங்களுக்குக் கிடைக்காது போய்விடும். இச் சத்துக் குறைவால் இலைகளின் பசுமை குறையும்.

மாங்கனீஸ்; இரும்பைப் போலவே இலைகளின் பசுமை குன்ருதிருக்க மாங்கனீஸ் அவசியம். நிலத்தில் இச்சத்து போதுமான அளவு இருந்த போதிலும் தாவரங்களுக்கு இது போதுமானபடி கிடைக்க நிலத்தில் புல்பூண்டுகளைக் குவித்து அவற்றிற்கு நெருப்பிட வேண்டும். கந்தகத் தூள் தெளிக்க வேண்டும். அல்லது நீர் தேங்கி நிற்கும்படி மழை பெய்யாத இடங்களானுல் பாசனம் செய்ய வேண்டும். இச்சத்து போதுமான அளவு கிடைக்காது போனுல் இலைகளின் பச்சை நிறம் காணுவதோடு, இலைகளின் ஓரங்களும் நுனியும் சேதமடையும்.

தாவரங்களுக்குத் தேவைப்படும் மற்ற உணவுப் பொருள்களைப் பற்றி ஆராய்ச்சிகள் இன்னும் பூரணமடையவில்லை.

தாவரங்கள் தங்களுக்கு வேண்டிய இவ்வுணவுப் பொருள்களை நீர், நிலம், காற்று முதலியவற்றிலிருந்து பெறுகின்றன என நாம் மேலே பார்த்தோம். காற்றுக்குப் பஞ்சமில்லை. ஆகையால் காற்றிலிருந்து கிடைக்கும் கரிக்கும் பஞ்சமில்லை. தண்ணீர் வேண்டிய மட்டும் மழை உருவில் கிடைக்கிறது. இது போதாவிட்டால் பாசனம் மூலம் இக்குறையை ஈடு செய்ய வேண்டும். நிலத்திலிருந்து தங்கள் உணவுக்காக தாவரங்கள் எடுத்துக் கொள்ளும் சத்துக்கள் நிலத்தில் குறைவுபடும். ★

சாந்தி நிலவுமா ?

சமாதான இன்ப வாழ்வு நடத்த வேண்டுமென்றே சாதாரண பொதுஜனங்கள் அவாவுற்றனர் என்பதை மனிதகுல வரலாற்றில் நெடுகிலும் காணலாம். ஒவ்வொரு நாட்டிலுமுள்ள சர்வ சாதாரண மக்களின் ஆசையும், ஆர்வ அபிலாஷையும் எப்போதுமே சமாதானத்தைப்பற்றித்தான் இருந்தது. ஆனுல் இந்த அபிலாஷைகளை அவர்கள் என்றுமே அடைய முடிந்ததில்லை. நாடுகளுக்கிடையே, சண்டைக்குப் பின்னுல் சண்டை நடந்துகொண்டேயிருந்தது. இந்த யுத்தங்களின் பாரம் முழுவதும் சாதாரண மக்களின் தலையில் தான் விழுந்தது. ஆயுதங்களை உற்பத்தி செய்பவர்களுக்கு யுத்தங்களினுல் புதிய ஆதாயங்கள் கிடைத்தன ; போர் வீரர்களுக்கோ அந்தஸ்தும், பாராட்டுப் பதக்கங்களும் கிடைத்தன ; அரசியல்வாதிகளின் வாழ்க்கையோ வளமடைந்தது; ஆனுல் சாதாரணப் பொதுமக்களுக்குக் கிடைத்ததோ எல்லையற்ற வருத்தமும் வறுமையும்தான். வியர்வையும், ரத்தமும் சிந்தினர் அவர்கள். அவர்கள் அமைதி எங்கே என்று அல்லும் பகலும் தேடிக் கொண்டேதானிருக்கின்றனர். அவர்கள் தேடும் அமைதி என்று கிட்டுமோ ?

—பேராசிரியர் ஜி. தெபோரின்.



தமிழகத்தில் இணைந்த குமரிமுனை

குமரிமுனையும் அதையொட்டிய நான்கு தாலூகாக்களும் தமிழகத்துடன் சேர்ந்து விட்டன. ‘வடவேங்கடம் முதல் தென் குமரிவரை தமிழ் கூறும் நல்லுலகம்’ என்று தொல்காப்பியத்திலேயே தமிழ்நாட்டின் எல்லை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. வடவேங்கடம் நமக்கு எல்லையாக அமையவில்லை என்றாலும் குமரிமுனை தமிழ்நாட்டின் தென் எல்லையாக அமையும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். குமரிமுனையைப் போல மூன்று சமுத்திரங்களும் சேரும் கண்ணுக்கினிமையான இடம் உலகிலேயே இல்லை என்று சொல்லலாம்.

சூரியோதயமும், அஸ்தமனமும்

சித்ரா பௌர்ணமியன்று சந்திர உதயத்தையும் சூரிய
அஸ்தமனத்தையும் ஏககாலத்தில் பார்க்கலாம்.

தூரத்தில் காணப்படுவது விவேகானந்தர் பாறை

சுசீந்திரம் கோயிலும் குளமும்





திருவாங்கூர்-கொச்சியில் உள்ள ஆத்திங்கால். இதுவும் போர்த்துகீஸிய கொள்ளைக்கு இலக்காயிற்று.



இந்தியாவின் தென்கோடி-இங்கு தெரிவதுதான் கடைசி தெரு.

கொளச்சல் துறைமுகம். வேநாட்டுப் படை, டச்சுக்காரர்களை இங்குதான் முறியடித்தது.

முட்டம் கிராமம்
16-வது நூற்ருண்
டில் சுசீந்திரம்
கன்யாகுமரி
கோயில்களைக்
கொள்ளையிட
போர்த்துகீசியர்
இங்குதான்
இறங்கினர்கள்.





குமரிமுனை
யிலுள்ள
ராஜாங்க
விருந்தினர்
விடுதி.

நாகர்கோவிலுக்குத்
தண்ணீர் விநியோ
கம் செய்யும் முக்
கூடல் ஏரி.





சுசீந்திரம் கோவிலுள்ள அருச்சுனன் சிலை.

வனவாசத்தின்போது தாடி உண்டாயிருக்கவேண்டும் !

சுசீந்திரத்தில் சன்னிதி மண்டபத்திலுள்ள கணேசனி. ஸ்திரீ ருபத்திலுள்ள இதைப் போன்ற விநாயகர் சிலை மிக அபூர்வம்.



சுசிந்திரம் கோவில் கோபுரம். இதற்குள் ராமாயண
சித்திரங்கள் உள்ளன.
பிராகாரம் தூண்களில் விளக்குப் பாவைகளைக் காணலாம்.



நாகர் கோவிலில் காந்தி ஞாபகார்த்த ஸ்தூபி. கலைவாணர் ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணனால் இது கட்டப் பட்டது.





நாகர்கோயில் சன்னதியைக் காக்கும் நாக ராஜ தம்பதிகள்.

மறக்க முடியாத சம்பவம்

மறக்க முடியாத சம்பவங்கள் சிலவேனும் உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும். அவைகளைப்பற்றி 200 வார்த்தைகளுக்குள் எழுதி அனுப்புங்கள். ஒவ்வொரு மாதமும் பிரசுரிக்கப்படும் முதல் கட்டுரைக்கு ரூ. 10 சன்மானம் தரப்படும். பிரசுரம் செய்யப்பட்ட இதர சம்பவங்களுக்கும் ரூ. 3 வீதம் கொடுக்கப்படும்.

ஆசிரியர்: 'திங்கள்', 17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

ரயிலில் நடந்தது...

மறுநாள் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் விடு முறைக்குப் பின் திறக்கப்பட இருந்ததால் அன்று மாலை மதுரை ஜங்ஷனில் ஒரே மாணவர் கூட்டம். நண்பர்களுடன் குழியாகப் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் நான் பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தேன்.

வண்டி புறப்படும் சமயம் வந்தது. நாங்கள் எல்லாரும் வண்டியில் ஏறிக்கொண்டோம். வண்டி புறப்பட்டது. கைக்குட்டையை ஆட்டியும், அது இல்லாதவர்கள் வெறுங்கையை ஆட்டியும் வண்டியிலிருந்தவர்கள் தம் நண்பர்களிடம் விடை பெற்றுக்கொண்டார்கள்.

வண்டி ஸ்டேஷனை விட்டகன்றதும் நான் என்னை ஒரு சாமானாகப் பாவித்துக் கொண்டு 'சாமான்களுக்கு மட்டும்' பலகையிலேறிப் படுத்தேன். உறக்கம் எப்போது என்னை ஆட்கொண்டது என்பது எனக்குத் தெரியாது. நான் விழித்தது—டக்டக் என்று தொடர்ந்து கேட்ட ஒலியினால் தான். அந்தச் சப்தத்தின் கர்த்தா டிக்கட் பரிசோதகர் என்பதைப் புரிந்து கொள்ள நேரமதிகமாகவில்லை.

டிக்கட்டை அலட்சியமாக எடுத்துத் தந்தேன். அதை வாங்கிய அவர் இரண்டு மூன்று முறை திருப்பிப் பார்த்தார். பிறகு என்னை இரண்டு முறை ஏற இறங்கப் பார்த்தார், எனக்கு எரிச்சலாக இருந்தது. டிக்கட்டைத் தந்தால் பரிசோதித்து விட்டுத் தரவேண்டியது தானே இவர் வேலை?

"மிஸ்டர், நீங்கள் எங்கே போகிறீர்கள்?"

"ஏன்? டிக்கட்டைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுவதுதானே?"

"தெரியவில்லையே! அதனால் தான் கேட்கிறேன்."

"டிக்கட்டில் 'சிதம்பரம்' என்று அச்சடித்திருப்பது தெரியவில்லையா, என்ன!"

பரிசோதகர் பதில் ஏதுமின்றி அமைதியாக என்னிடம் டிக்கட்டை நீட்டினார். வாங்கிப் பார்த்த எனக்கு ஒரே அதிர்ச்சி! ஏன் தெரியுமா? டிக்கட் மதுரை ஜங்ஷனுக்கான பிளாட்பாரம் டிக்கட். நொடியில் விஷயங்களை உணர்ந்து கொண்டேன். மதுரையில் எனக்கு ஒரு சிதம்பரம் டிக்கட்டும் நண்பர்களுக்குப் பிளாட்பாரம் டிக்கட்டுகளும் நான்தான் வாங்கினேன். அதில் யாரோ ஒருவருக்கு சிதம்பரம் டிக்கட்டை தந்துவிட்டு பிளாட்பாரம் டிக்கட்டை நான் எடுத்துக் கொண்டு விட்டேன். பரிசோதகருக்கு நிலைமையை விளக்கினேன். புரிந்து

கொண்ட அவர் என்னை நம்பினார். ஏதோ, என் நல்ல காலம்! ஆனாலும் இதுவரை மதுரையினின்றும் டெலிபோனிலோ தந்தி வழியாகவோ செய்தி வராததால் ரயில்வே விதிகளின்படி நான் திருச்சியினின்றும் சிதம்பரத்துக்கு ஒரு டிக்கட் வாங்க வேண்டுமென்றார். ரூ. 2-11-0 செலுத்தி அதைப் பேற்றுக் கொண்டேன். ரயிலில் டிக்கட் பரிசோதகரைக் காணும்போதெல்லாம் இச்சம்பவம் என் நினைவில் வரும்.

எஸ். கிருஷ்ணசாமி,
சிதம்பரம்.

மூச்சை வாங்க இருந்த நீச்சல்!

அப்போதெல்லாம் செழிப்பான காலம் எங்கும் தண்ணீர் மயமாக இருக்கும். பள்ளி முடிந்ததும் குளத்தைநோக்கித்தான் ஓடுவோம் என் நண்பர்கள் குஷியாக நீந்துவார்கள். நான் வேடிக்கை பார்ப்பேன் ''டேய், நம்ம மானிட்டர் நீச்சுத் தெரியாத மானிட்டர்டா'' என்று ஒருவன் மற்றொருவனிடம் சொல்ல மேட்டிலிருக்கும் என்னைப் பார்த்து எல்லோரும் 'கொல்' என்று சிரிப்பார்கள் ஆகவே அவர்களின் மீது பொறாமையும் இன்னும் நீச்சல் பழகவில்லையே என்னும் கவலையும் என்னைக் கப்பிக் கொள்ளும். நான் எப்படியாவது நீச்சல் பழகி அவர்களோடு விளையாடவேண்டு மென்ற எண்ணம் உறுத்திக் கொண்டே இருந்தது.

ஒரு நாள்; அன்று விடுமுறை நான் போய் 'கிராப்' வைத்துக் கொண்டு பக்கத்திலிருக்கும் குளத்தில் நீந்துவதற்குக் குதித்து விட்டேன்! 'டப், டப்' என என்கைகள் தண்ணீரை அடித்தனவாம். தலையோ தெரிய வில்லையாம்! உடனே அந்த 'முடிவெட்டுபவர்' வந்து என்னை மேட்டில் தூக்கிப் போட்டு ஆட்டினாராம். கொஞ்ச நேரம் கழித்து என்ன நடந்தது என்று புரிந்து கொண்டேன். ''தயவு செய்து இதை மற்றவர்களிடம் சொல்லாதேப்பா'' என்று நான் அவரிடம் கேட்டுக்கொண்டு கிளம்பினேன், ஆனால் அந்த ஆள் இரவு எட்டு மணிக்கு எங்கள் வீட்டிற்கு வந்து நடந்ததைக் கூறிவிட்டார். என்னை எல்லோரும் வைதார்கள். இதை ஒரு நண்பன் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டுக் காலையில் அவன் மற்றவர்களிடம் சென்று நடந்ததைக் கூற அவர்கள் எல்லாம் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள்! நான் ஊமையாகவே இருந்தேன், அவர்களிடம் அன்றிலிருந்து. அவர்களும் எனக்கு நீச்சல் கற்றுக் கொடுக்க முயற்சி எடுத்துக் கொண்டார்கள். என் வாழ்வில் 'மூச்சைப் போக்கவிருந்த அந்த நீச்சல் சம்பவம்' என்றும் மறக்க முடியாத ஒன்றாகும்!

எம். ராஜு,
மதுரை.

ரிப்பனோ ரிப்பன்!

அப்பொழுது எனக்கு எட்டு வயதிருக்கும். பள்ளிக்கூடம் விட்டுப் பகல் போஜனத்திற்காக வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். ரிப்பன் விற்கும் ஒருவன் திடீரென்று என் மேற்பாய்ந்து ஒருகையால் என் குரல்வளையை இறுகப்பற்றி, மற்றொரு கையிலிருந்தக் கத்திரிக் கோலால் என் கைகளிலிருந்தத் தங்க வளையல்களையும், தங்கச் சங்கிலியையும் கத்தரித்து எடுத்துக் கொண்டு ஓடிவிட்டான். வீட்டிலுள்ளவர்களிடம் நடந்ததைக் கூறினேன். உடனே என் தகப்பனார் போலீஸுக்குப் புகார் கொடுத்தார்.

இவை நடந்துக் கிட்டத் தட்ட ஒரு மாதம் ஆகியிருக்கும். தெருவில் 'ரிப்பன்'! ரிப்பன்!' என்ற குரல் கேட்டது. என்ன ஆச்சரியம்! அன்று என் குரல்வளையை நெரித்து நகைகளைக் கத்தரித்துப் போன அதே ரிப்பன்காரன் தான்! உடனே என் தகப்பனாரிடம் சென்று நடந்தைக் கூறினேன். உடனே என் தகப்பனார் அவனைப் பிடித்துப் போலீஸில் ஒப்புவித்தார் போலீஸார் அவனை மிரட்டி அடித்தபின் அவன் உண்மையை ஒப்புக்கொண்டு நகைகளைக் கொடுத்து விட்டான். இது நடந்து நாள்கு வருடங்களாகியும் இச்சம்பவத்தை என்னால் மறக்கவே முடியவில்லை.

ஜெ. கௌரி,
சென்னை.



திருவண்ணாமலை-கோயிலும் மலையும்

கார்த்திகைத் திருநாள்

டி. எஸ். ரங்கநாயகி

நம்நாடு ஒளியின் மேன்மை கண்ட ஒரு நாடு. ஒளியை நினைப்பூட்டப் பல திருநாட்களைக் கொண்டது. அத்திருநாட்களில் ஒன்று கார்த்திகை. இத்திருநாள் சைவருக்கு மட்டும் உரியதன்று. அது வைணவர், ஜைனர், புத்தர், முதலிய பலருக்கும் உரியது.

விழாவின் முறை

கார்த்திகை மாதத்தில், கார்த்திகை நட்சத்திரத்தன்று, திருக்கார்த்திகைத் திருநாள் கொண்டாடுகிறோம். சிவ, விஷ்ணு ஆலயங்களிலும், இதர ஆஸ்திக ஸ்தாபனங்களிலும் வீடுகளிலும் நீராடி தூய்மையுடன் பகவானுக்கு ஏராளமான புது விளக்குகளும் நவமணி அலங்காரத் தீபங்களும் ஏற்றி, ஏலம் முதலிய சுகந்த திரவியம் சேர்த்து, வெல்லத்துடன் அவல் பொரியைக் கலந்தும், எள்ளும் தேங்காயும் கலந்து அப்பம், அதிரசம் செய்தும் அவரவர் சிறப்புக்கும் சக்திக்கும் ஏற்றபடி மகா நிவேதனமும், பாயசம் பக்குவச்

★ கார்த்திகை 3-ம் தேதி 18-11-1956 திருக்கார்த்திகைத் திருநாள் வருகிறது. அதை முன்னிட்டே இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது...



திருவண்ணுமலை கோயில்-உட்பிரகாரம்

சித்திரான்னங்களும், கனி வர்க்கங்களும் நிவேதித்துப் பரமனை பக்தியுடன் ஆராதித்து, உண்டு மகிழ்ந்து, வீடெங்கும் வெளியிலும் தீபங்களை அலங்காரமாய் வைத்துக் கார்த்திகைத் திருநாளைக் கொண்டாடுகிறோம்.

ஆதாரங்களில்...

கார்த்திகைத் திருநாளில் அணியணியாய் ஏராளமாய் விளக்கிட்டு விழாக் கொண்டாடும் வழக்கம் நம்நாட்டு இந்துக்களிடை பண்டைய நாள் தொட்டு உள்ளதென்பதற்கு அநேக ஆதாரங்கள் உள. தமிழ்ப்பதினெண் கீழ்க் கணக்கில் ஒன்றான 'கார் நாற்பது' என்பது மதுரைக் கடைச் சங்கப் புலவரான மதுரைக்கண்ணங் கூத்தனார் என்ற நல்லிசைப் புலவரால் இயற்றப்பட்டது. கார் காலம் அணுகையில், திரும்பிவிடுவதாய்ச் சொல்லி அரசனுடன் போர்த் துணையாய்ச் சென்ற தலைவன், கார் காலம் சமீபித்தும் வராமை கண்டு சகியாது, தலைவி தோழியிடம் மனங்கசிந்து சொல்லுவதாய் இதிலுள்ள கவிகள் குறிக்கின்றன, இதில் நாற்பது செய்யுள்கள் உள்ளதால் 'கார் நாற்பது' என்று ஆக்கியோரால் இதற்குப் பெயரிடப் பெற்றது.

நன்மை மிக்க கார்த்திகை விழாவிலே நாட்டினர் ஏற்றி வைத்த முதல் நாள் தீபத்தைப் போல அழகுடையவள் என்பது இதன் பொருள். நலமிகு கார்த்திகை என்பதைக் கார்த்திகை மாதம் எனக்கொண்டு தலைநாள் என்பதை அத்திங்களிற் சிறந்த தினமான கார்த்திகை என்று கொள்ள வேண்டும். ஆதியில் நாட்கள் கார்த்திகை முதலாகவே கணக்கிடப்பட்டதாக அறியப்படுவதால், தலைநாள் என்றூர். தலைநாள் என்பதற்கு விழாவின் முதல் தினமான கார்த்திகை என்று பொருள். இதே போல 'அகநானூறில்'

''குறுமுயன் மறுநிறங் கிளர
மதிநிறைந்
தறுமீன் சேருமகலி விருண்டு
நாண்
மறுகு விளக்குறுத்து மாலை
தூக்கிப்
பழவிறன் மூதூர்ப் பலருடன்
றுவன்றிய
விழவுடனயர வருகதி லம்ம''

என்பதும் 'களவழி நாற்பதில்' கார்த்திகைச் சாற்றில், கழி விளக்கைப் போன்றனவே என்பதும் தேவாரத்தில் துளக்கில் கபாலீச்சுரத்தான் தொல் கார்த்திகை நாள் விளக்கீடு காணுதே, போதியோ பூம்பாவாய் என்பதும் 'சிந்தாமணியில்' 'குன்றிற் கார்த்திகை விளக்கிட்டென்ன' கடிகமழ் குவளைப் பைந்தார்'' என்பதும் கவனிக்கற்பாலது.

தீபமிடுதல் !

தீபம் பண்டைய முறைப்படி இடப்படுவதே சிறப்பு. அகல்,



ஸ்ரீ ரமணர் சமாதி

எண்ணெய், வர்த்தி, தீபம் முதலியன யோக நுட்ப தத்துவங்களை உள்ளடக்கிக் கொண்டிருப்பன.

உடம்பெனு மனையகத்துள்
 உள்ளமே தகழியாக
மடம்படு முணர் நெய்யட்டி
 யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயா லெரி
 கொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி
 காணலாமே — அப்பர்.

விளக்கு...!

விளக்காவது என்ன? விளங்கச் செய்வதே விளக்கு. இருளினை நீக்கி, இருப்பதைக் காட்டுவது விளக்கு. மறைப்பதை நீக்கி மறைபட்டதைக் காட்டுவது விளக்கு. விளக்குகளில் குத்து விளக்கும வழிபாட்டுக்கு ஏற்றதே. விளக்கே தெய்வம். மனிதரிடத்திலுள்ள ஞான ஜோதியே விளக்கு. ஆகவே விளக்கு வழிபாடு ஞானத்தைக் குறிக் கொண்டதாகும்.

குத்துவிளக்கு...

குத்து விளக்கு மனித சரீரத்தைக் காட்டுவது எப்படி? பருவம் வரப்பெற்ற ஆடவர், பெண்டிர், ஆகிய இருபாலருக்கும் நாபியிலிருந்து மேல் நோக்கிக் கொடி போல, ஒரு ரேகை ஓடும். இதை அவரவர்களே பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். நாள் ஆக ஆக இக்கோடு நன்ருகப் பதியும். யோகம் கைவரப் பெற்றவர்களுக்கு இக்கொடி மிகவும் நன்ருகத் தெரியும். யோகம் கைவரப் பெற்றவர்களுக்கு மூலாதாரத்திலிருந்து குண்டலினியை எழுப்பி, நெற்றியிலே புருவ மத்தியிலிருக்கும் இடத்திலே ஜோதிப் பிழம்பாகக் காட்டுவார்கள். அந்த ஜோதிப் பிழம்பு குத்து விளக்கு எரிவது போலிருக்கும். மனிதரது இடுப்புக்குக் கீழ்ப்பட்ட பாகமே குத்து விளக்கின் பாதம். இடுப்பிலிருந்து மேல் நோக்கி ஓடும் ரேகைக் கொடியே குத்து விளக்குத் தண்டு, கழுத்துக்கு மேற்பட்ட நமது தலையே குத்து விளக்குத் தலை. புருவ மத்தியில் ஜோதி எரிவதே குத்து விளக்கு எரிவதாம். ஆகவே, குத்து விளக்கு ஏற்றுவதின் அர்த்தம் என்ன? யோகியாரை வணங்குவது. ஆத்ம ஜோதியை வணங்குவது. ஞானம் கைவர வேண்டுவது.

ஐந்து குணங்கள்

குடித்தனக்காரிக்கு இருக்க வேண்டிய ஐந்து குணங்களையே குத்து விளக்கின் ஐந்து முகங்களும் குறிப்பிடுகின்றன. சகிப்புத் தன்மை, அன்பு, மன உறுதி, சமயோசித புத்தி, நிதானம்,



தீபங்கள் நிறைந்த கோபுரங்கள்

ஆகிய இவைகளே அந்த ஐந்து குணங்கள். விளக்கின் எண்ணெய்க் குழியே குடித்தனக்காரியின் மனம். அதிலிருந்து ஊட்டம் பெற்று, அந்த ஐந்து குணங்களும் சேர்ந்தாப்போலச் ஜொலிக்க வேண்டும். அவை ஐந்தும் சேர்ந்து பிரகாசிக்கும் போது வீடெங்கும் ஒளி நிறைந்து ஜெகஜ்ஜோதியாகச் ஜ்வலிக்கும்?

திருவண்ணுமலேயிலே!

கார்த்திகைத்தீப வழிபாட்டுக்கென்று ஒரு திருப்பதியும் ஆன்ருேர்களால் குறிக்கப் பெற்றுள்ளது. அது திருவண்ணுமலேயே! கார்த்திகை விழா நாளிலே திருவண்ணுமலேயில் மலேமேலுள்ள பெருங் குண்டத்திலே பெருஞ் சோதி வளர்ப்பார்கள். பக்தர்கள் பலவாருன பட்டாடைகள், அகில், சந்தனம், கஸ்தூரி, சாம்பிராணி, கற்பூரம், மட்டிப்பால்/தைலாதிகள், முதலியவற்றை அதிற்போட்டுப் பிரார்த்தனே செலுத்துவர். இதன் தத்துவம் யாதெனின் பக்தர் பகவானை சோதி சொரூபமாய்ப் பாவித்துப் பூஜிப்பதாகும.

கார்த்திகைத் திருநாள் நமது நாட்டுக்கு உரியது. தொன்மை வாய்நதது. இருளைப் போக்குவது. அத்திருநாளைக் கொண்டாட வேண்டுவது நம் பெருங் கடமை கார்த்திகையன்று திருவிளக்கேற்றுவோம்! தீப ஜோதியை வழிபடுவோம்! கந்தவேளின் கடாக்ஷத்தைப்பெற கார்த்திகை விரதமிருப்போம்!

அற்புதம்! அற்புதம்!!

தேவாரத்தில் ''சோதியேசுடரே! சுடரொளி விளக்கே!'' என்றும் ''அம்பவளக் குன்று'' என்றும், ''முழுத்தழன் போல் மேனி முதல்வன்'' என்றும் சைவ சமய குரவர் பாடி இருக்கிருர்கள். வைஷ்ணவ சமயிகளான ஆழ்வாராதிகளும் திருமாலேயும் ''சோதீஸ்வரூபி'' என்று பாடியிருக்கிருர்கள். ★

திருவண்ணுமலே கோவில் பிராகாரம்

விந்தை உள்ளம்

'சாந்தி'

காலைக் கதிரவன் தனக்கு நிகர் வேறு எவரும் இல்லை என்ற முறையில் தன் வெங்கதிர்களுடன் நீல வானில் ஒளி வீசிக் கொண்டிருந்தான், எடுக்க எடுக்க குறையாத 'அட்சய பாத்திரம்' போல் நாள் தோறும் தன் வெப்பத்தை அள்ளி வீசிக்கொண்டிருந்த போதிலும் உஷ்ணத்திற்கு சற்றுக்கூட குறைவு ஏற்படவில்லை. ஒரு பாழடைந்த வீடு. அவ்வீட்டினுள்ளும் தன் ஆதிக்கத்தைச் செலுத்த விரும்புகிறான் ஆதவன். அந்த வீட்டின் கூரை வேயப்பட்டு எத்தனையோ ஆண்டுகள் ஆகி விட்டதால் ஞாயிறு தன்னைக் கட்டுப்படுத்த எவருமில்லை என்று எண்ணி மிகவும் சுதந்திரமாகத் தன் கதிர்களை அக் கூரையில் வாயிலாக அள்ளி வீசினான்.

அவ்வீட்டின் முற்றத்தில் ஒரு கிழவி ஊன்று கோலையே தன் காலாகக் கொண்டு ஓர் அடி போவற்கு, பல குறுகிய அடிகள் இட்டு நடக்கமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள். கண்ணொளி மங்கி விட்டது. சங்கு போன்ற வெண்மையான அவளது கூந்தல் மின்னிக் கொண்டிருந்தது. ''ஐயோ! இன்னும் என் உயிர் செல்லவில்லையே எத்தனை நாளைக்கு நான் இவ்விதம் தவிக்க வேண்டும்'' என்று அவளது வாய் அரற்றியது. அவளைக் கண்டோர் யாவரும் ''முதுமை என்பதை இக்கிழவியின் உருவில் தான் காணவேண்டும்'' என்று உள்ளம் நெகிழ்ந்து கூறினார்கள்,

இது மட்டும் தானா உள்ளத்தை உருக்கும் காட்சி! அவ்விட்டின் ஒரு மூலையில் ஒரு இளம் பெண் துயரமே உருவெடுத்து காட்சியளித்தாள். வயதில் மட்டும்தான் அவள் இளம் பெண்ணாக இருந்தாள். ஆனால் வறுமையும் துன்பமும் அவளை நடுத்தா வயது கடந்தவளாக ஆக்கி விட்டன. எவ்வளவு வறுமை இருந்ததோ அதே அளவில் அவளுக்குப் பிள்ளைகளும் இருந்தனர். சிறிய பச்சிளங் குழந்தைகள் அவளிடத்தில் பால் உண்ண விரும்பின. ஆனால் மார்பிலும் வறுமைதான் குடி கொண்டிருந்தது. அவளது உடலை மறைக்க வேண்டுமே என்று மாசோடு கூடிய ஆடை அவளது உடலை மறைத்துக் கொண்டிருந்தது.

அடுப்பில் வெறுங் குப்பைக்கீரை உப்பும் மோரும் இல்லாமல் நீரில் கொதித்துக் கொண்டிருக்கிறது. அக்குடும்பம் அரிசி உணவைக் கண்டு எவ்வளவோ நாட்களாகி விட்டன. இக்கீரை கூட அவளுக்குக் கிடைப்பது அரிது. இந்நிலையிலும் தன் கணவன் பொருள் கொண்டு வரவில்லையே என்று அவனை வெறுக்கவில்லை. அறக் கடவுளைத் தான் அவள் பழித்தாள். பகல் முழுவதும் தன் வெப்பத்தை அள்ளி வீசிய கதிரவனுக்கும் கருணை பிறந்து விட்டது போலும் மலைவாயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். முல்லை மொட்டுகள் தன் மணத்தை அள்ளி வீசிக் கொண்டு மலர்ந்தன. வீதியில், தன் வரவை முன் கூட்டி அறிவிப்பது போல் பசுக்கள் தங்கள் எழுத்திலுள்ள மணிகள் ஒலிக்க வந்து கொண்டிருந்தன. கன்றுகள் தாயின் வரவை ஆவலோடு நோக்குவதுடன் 'அம்மா' என்று கூவின. எங்கும் ஓர் அமைதி. அந்த அமைதியில் இன்பம் கண்டனர் இளங்காதலர்கள்.

ஆனால் அவ் இல்லத்தில் குழந்தைகளின் அழுகைக்குரல் அவ் வீட்டையே அதிரும்படி செய்கிறது. ''அம்மா! பசிக்கிறது'' என்று புலம்புகிறான் ஒரு சிறுவன், மற்றொருசிறுவன் உள்ளே சென்று எல்லாக் கலன்களையும் திறந்து

பார்க்கிருன் மிகவும் ஆவலோடு. ஆனல் கலன்கள் காலியாக இருக்கின்றன. ஏமாற்றத்துடன் தாயின் அருகில் சிணுங்கிய முகத்துடன் நின்று கொண்டிருக்கிருன், மற்ெருரு குழந்தை பசியின் மிகுதியால் மிகவும் அழுகிறது. தாய்க்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. எவ்விதம் அமைதி படுத்துவது என்று அறியாமல் தவிக்கிருள். ''புலி வரும் அழாதே!'' என்று அச்சுறுத்துகிருள். ஆனல் அதன் அழுகை அதிகமாகிறது, ஆகாயத்தை அழகு பெறச் செய்கின்ற சந்திரனைச் சுட்டிக்காட்டி அவனது துயரத்தை நீக்க முயற்சி செய்கிருள். அச்சமயத்தில் அவள் கணவன் வருகிருன். அங்குள்ள நிலையை ஒருவாறு அறிந்து கொண்டு பொருள் இல்லாமல் வீடு திரும்புவதில்லை என்ற சூளுரையுடன் வெளியே சென்று விட்டான்.

அவன் சபதம் வீணுகவில்லை. பல வள்ளல்கள் கொண்ட இப்பூவுலகில் அவனுக்கு அடைக்கலம் கொடுத்தான் குமணவள்ளல், செல்வங்களை மூட்டை மூட்டையாகக் கட்டி யானையின்மேல் வைத்து அனுப்பினுன்.

அன்றலர்ந்த தாமரையைப் போலிருந்தது அவனது முகம். ஆம் பல ஆண்டுகளாகப் பிடித்திருந்த வறுமை அவனை விட்டு ஓடியது. மனைவி அவனை இன்முகத்துடன் வரவேற்ருள். சிறுவர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டனர். மனைவியினிடத்தில் தான் கொண்டு வந்த செல்வங்களைக் கொடுத்தான் அவளது மட்டற்ற மகிழ்ச்சியை எவ்வாறு கூறுவது?

ஆனல் அவன் அவளிடத்தில் பொருள் அளித்துவிட்டு கவலையற்று வாழலாம் என்று அவன் எண்ணவில்லை. மனைவியைத்தன் அருகில் அழைத்தான். செல்வத்தைச் சுட்டிக்காட்டி ''இவ்வளவு செல்வம் இருக்கிறது. இதை எல்லோருக்கும் நீயும் கொடு'' என்ருன். நீயும் கொடு என்ற பொழுது ''நான் எல்லோருக்கும் வாரி வழங்கப் போகிறேன். யார் யாருக்குக் கொடுக்க விரும்புகிருயோ அவர்களுக்கு நீயும் கொடுக்கலாம்'' என்று கூறுகிருன். எத்தகைய உரிமையைப் பண்டைக்காலத்தில் நம் நாட்டு இல்லத் தலைவர்கள் மனைவிக்குக் கொடுத்திருக்கிருர்கள், பார்த்தீர்களா! அவன் வாயிலிருந்து இன்னும் என்ன சொற்கள் வருமோ என்று அவனது முகத்தையே கவனித்துக்கொண்டு நின்று கொண்டிருந்தாள் அவ்வீட்டுத் தலைவி.

யார் யாருக்குக் கொடுக்க வேண்டும் என்று ஓர் அட்டவணையைத் தயாரித்ததுபோல், ''உன்னை விரும்பும் மகளிர்க்கும் நீ இச்சை கொண்ட பெண்களுக்கும் பல மாட்சியை பொருந்திய பல நல்ல குணங்களையும் கற்பையுமுடைய நினது உறவின் மூத்த மகளிர்க்கும் அவர்களது, வறுமை நீங்கு மட்டும் பொருள் கொடு'' என்ருன் அத்துடன் நின்று விடவில்லை. அவன். அக்குடும்பம் பல தாட்களாக வறுமையால் வாடுவதால் அவர்கள் எல்லோருடமும் கடன் வாங்கியுள்ளார்கள். கடன் வாங்கியவர்களிடத்திலும் கடனைத் திருப்பிக் கொடுத்துவிடு என்று மனைவிக்குக் கட்டளை யிட்டான். எவரெவருடைய வறுமையைப் போக்க வேண்டும் என்று கூறிய பிறகு வேறு யாராவது முன்பின் தெரியாதவர்கள் வறுமையால் வாடினுல் அவர்களது வறுமையையும் நீக்க வேண்டும் என்ற ஆசை அவனது மனதில் துளிர்த்தது. ஆதலால் முன் பின் தெரியாத புதியவர்களது துன்பத்தையும் துடைக்க விரும்பினுல் அவர்களுக்கும், ''கொடு'', என்று கூறினுன். பிறகு அவனுக்கு ஓர் ஐயம் தோன்றியது. ''நான் வீட்டில் இல்லாத பொழுது யாராவது பொருள் கேட்டால், 'அவர் வீட்டில் இல்லையே' என்று கூறி ஏமாற்றத்துடன் அனுப்பி விட்டால் என்ன செய்வது என்று எண்ணி யார் யாருக்குக் கொடுக்க வேண்டும் என்று என்னுடன் கலந்து யோசனை செய்ய வேண்டாம். நீ விரும்பினுல் எவருக்கும்

கொடுக்கலாம்'' என்று அவன் கூறினான். இதைப் படித்தவுடன் நீங்கள் வியப்படைவீர்கள் அல்லவா? ''நான் காலையிலிருந்து மாலைவரை நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்துப் பொருள் கொண்டு வந்தால் நீ என்னைக் கேட்காமல் எல்லோருக்கும் தானம் செய்வாய்!'' என்று கணவன் ஏளனமாகப் பேசுவதைத் தான் நாம் கேட்டு பழக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் அக்காலத்து இல்லத் தலைவனின் பண்புதான் என்னே!

என்ன என்ன கூற விரும்பினாளோ எல்லாவற்றையும் கூறியும் அவனது மனம் அமைதி கொள்ளவில்லை போலும். அவனது மனதில் ஏதோ உறுத்திக் கொண்டிருந்தது ''இவ்வளவு செல்வம் கொண்டு வந்திருக்கிறார். எல்லாவற்றையும் எல்லோருக்கும் வாரி வழங்காமல் செட்டும் சீருமாகக் குடித்தனம் செய்தால் பல ஆண்டுகள் இன்பமாக இருக்கலாமே'' என்று மனைவி எண்ணி விட்டால் என்ன செய்வது என்று சிந்தித்து அவளது எண்ணத்திற்கு அணை போட்டு விடுகிறான் அத் தலைவன் ''நாம் நன்றாக வாழவேண்டும் என்று நினைக்காதே தம்மைச் சூழ்ந்தவர்களும் நன்கு இருத்தல் வேண்டும். ஆதலால் எல்லோரும் பொருள் கொடு என்று கூறி விட்டான். தன்னலம் அவனைக் கண்டு எங்கு ஓடி மறைந்ததோ? அறியோம்!

இத்தகைய விந்தை உள்ளம் படைத்தவர்களை நீங்கள் எங்காவது கண்டதுண்டா? சங்க காலத்தில் ஒரு புலவர் இத்தகைய உயரிய உள்ளத்தை உடையவராக இருந்தார். இவரது சீரிய பண்பு நலத்தைப் படம் பிடித்துக் காட்டுவது போலுள்ள கீழ்க் காணும் பாடலைப் படித்து நீங்களும் மகிழுங்கள்.

நின்னயந் துறைநர்க்கு நீநயந்
துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத
லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி
யோர்க்கும்
இன்னோர்க் கென்னா தென்
னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து
மென்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி
மனைகிழ வோயே

(புறநானூறு; 163)

ஜெர்மன் சம்ஸ்கிருத புலவர் டார்டர் ஆல்ஸ்ட்டார்ப் தரும் தகவல்:

பிரீட்ரிச் ரூக்கெர்ட் என்ற ஜெர்மன் அறிஞர் நான்கே மாதங்களில் தமிழில் புலமை பெற்றிருக்கிறார்.

ஹாம்பர்க் சர்வகலாசாலையில் முதல் உலக யுத்தத்திற்குப் பிறகு நவீன இந்திய மொழிகளுக்காக இந்திய 'லெக்சரர்' (விரிவுரையாளர்) ஸ்தானம் ஏற்படுத்தப்பட்டு. அது முதல் இந்த ஸ்தானம் இருந்து வருகிறது. இதே போன்ற ஸ்தானங்கள் இதர ஜெர்மன் சர்வகலாசாலைகளிலும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.



இதோ, உலகம்!

ஸி. ராஜப்பா.

உலகம் உருண்டையோ, தட்டையோ அதன் மேற்பரப்பிலுள்ள எல்லா நாடுகளையும் ஏககாலத்தில் நம்மால் நேருக்கு நேர் சென்று பார்க்க இயலவில்லை.

ஆனால், ஒரு விரலைச் சுட்டிக்காட்டி, ''இதோ' 'உலகத்தின் கூறை' எனப்படும் பாமீர் பீடபூமி!'' ''அதோ இருள் சூழ்ந்த காடுகளடங்கிய இருட்டுக் கண்டம்,'' ''அங்கே பார்! வானளாவும் கட்டிடங்களைக் கொண்ட வாஷிங்டன் நகரம். இதோ, பார்! வாசனைத் திரவியங்கள் ஏராளமாகக் கிடைக்கும் கிழக்கிந்தியத் தீவுகள்! இதோ உலகத்திலேயே நீளமான மிஸிஸிபி நதி! அதோ உலகத்தின் மிகப் பெரிய சிகரம் எவரெஸ்ட்! பசுமை தவழும் கங்கை நதி தீரம்!''—என்று வினாடிக்கு வினாடி வெவ்வேறு பகுதிகளிலுள்ள இடங்களை நாம் சுட்டிக்காட்டி வருகிறோமே! அது எப்படி? இந்தப் பிரபஞ்சத்தையே மாயக் கம்பளம் போல் நம் முன் விரித்தபடி காணப்படும் ஒரு (காகித)—துணிச் சுருள்தான் 'இதோ, உலகம்!' என்று காட்சியளிக்கிறது.

உலகின் வடிவம் உருண்டை என்ற நிரூபணம் நமக்கு வியப்பையளிக்கலாம். ஆனால், இந்த உருண்டையான உலகின் நிலப் பரப்பை அளந்து, அதன் பரப்பிலுள்ள மிக முக்கியமான இடங்களை ஒரு படத்தின் மூலம் நம் கண்முன் கொண்டு வந்து காட்டும் திறமை மேலும் நமக்கு வியப்பை அளிக்கிறதல்லவா?

உலகப் படம் தோன்றிய வரலாறு மிகவும் சுவை பொருந்தியதாகும். அதன் சுருக்கமே கீழே தரப்பட்டுள்ளது.

''உடலுக்குச் சிரமமின்றி, பொருளுக்குச் செலவின்றி, உலகம் சுற்ற ஒரே வழி, உலகப்படம் ஒன்றைப் பிரித்துப் பார்ப்பது தான்'' என்றார் மிகல் டி ஸர்வான்டிஸ். இது முற்றிலும் உண்மையல்லவா? எங்கு செல்லு முன்பும், அவ்விடத்திற்குச் செல்லும் மார்க்கம், அவ்விடத்தின் அமைப்பு முதலியவற்றைத் தெரிந்து கொண்டு செல்வது தான் சிறந்ததாகும்.

இங்கிலாந்து வாசி இந்தியா சுற்ற விரும்பினாலும், இந்தியர்

அமெரிக்க விஜயத்தை மேற்கொள்வதாக இருந்தாலும் இக்காலத்தில் அந்தந்த தேசங்களின் முக்கிய நகரங்கள், போக்குவரத்து மார்க்கம் இவற்றை எளிதில் தெரிவிப்பவை உலகப்படம் தான்.

அரபு நாட்டுக் கதைகளில் வரும் மாயக்கம்பளங்களை விட மகிமை பொருந்தியது இந்த உலகப்படச் சுருள் என்றாலும் மிகையாகாது. பெரும் போர்கள் நிகழ்வதிலும், புதிய நாடுகள் ஆராய்ச்சியிலும் இத்தகைய படங்கள் பெரும் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன.

இன்று புதிய ஓரிடத்திற்குச் செல்லும் மார்க்கத்தைக் கண்டறிந்து வெளியிடுதலை சமூக சேவையாகக் கொள்ளுகிறோம். ஆனால் முதன் முதலில் இம்மாதிரி புதிய வழிகள் கண்டு பிடிக்கப்பட்டு வந்த விவரம் லகுவில் வெளியிடப்படாது. அத்தகைய தகவல்களைச் சேகரிப்பவர்களை, அரசாளும் வர்க்கம் சர்வ ஜாக்கிரதையுடன் கண்காணித்து, அதை தன்னாட்டவரல்லாத மற்றவர்கள் அறியக்கூடாதபடி செய்து வந்தனர். அத்தகைய தடையைமீறி இந்த உண்மையை வெளியிட்டுவிட்டால், அந்த நபரைக் கடுந்தண்டனைக்குள்ளாக்கி வந்தது அரசாங்கம். காரணம், புதிய இடமொன்றுக்குத் தன்னாட்டவன் வழி கண்டு பிடித்தால், அவ்விடத்தில் தன் ஆதிக்கமே பரவி, அப்பிரதேசத்தின் செல்வச் சிறப்பை தானே அடையலாமே என்ற பேராவல்தான்! தனக்குப் போட்டியாக மற்ற நாடுகள் அப்புதிய இடத்திற்குச் சென்றுவிட்டால், தன் செல்வாக்கு குறைந்துவிடுமோ என்ற பயம்தான் கொடூர தண்டனைகளுக்கு மூலகாரணமாக இருந்தது. பொருள்வளம் மிகுந்த புதிய பிரதேசத்திற்கு வழி கண்டுபிடித்து, அதன் மார்க்கத்தை நன்கறிந்தவன் தன்னை ஒரு பெரும் செல்வந்தனாக எண்ணிக்கொள்ளும் வழக்கம் இருந்துவந்தது.

உதாரணமாக மத்தியதரைக் கடல் மார்க்கத்தைக் கண்டுபிடித்த டயர் கப்பல்குழு அந்த மார்க்கத்தை வெகுநாள்வரை பிறநாடுகளுக்குத் தெரியாமல் பாதுகாத்து வந்தனர். அந்த மார்க்கமாக வியாபாரத் தொடர்புகளைக்கொண்டிருந்த அவர்கள், சர்வஜாக்கிரதையுடன், போட்டி ஏற்படாமல் காத்துவந்தனர். இதேபோல் அவரவர்கள் தாங்கள் கண்டுபிடித்துள்ள புதிய மார்க்கங்களைத் தாங்களே ஆதிக்கம் செலுத்த விரும்பி வந்தனர். குறுகிய மனப்பான்மைக்கு மட்டும் உலகத்தில் எந்தக் காலத்திலும் பஞ்சமேற்படவில்லை!

புதிய நாடுகள் ஆராய்ச்சியிலிறங்கின கொலம்பஸும், மெகல்லனும் எத்துணையோ சிரமங்களுடன் நாடுகளை ஆராய்ந்து, அவற்றிற்குச் செல்லும் மார்க்கங்களையும் குறித்தனர். இத்தகைய குறிப்புகள் சர்வஜாக்கிரதையுடன் கண்காணிக்கப்பட்டு வந்தும், லஞ்சம், திருட்டு முதலிய காரணங்களால் அவை பறிபோகப்பட்டன. இத்தகைய செயல்களைச் செய்த கயவர்களை அரசாங்கம் எவ்வளவு சிரமப்பட்டு முயன்றும் கண்டுபிடிக்கமுடியவில்லை என்றால், திருடியவர்கள் இதன் மதிப்பை எவ்வளவு உணர்ந்திருக்கவேண்டும்! தவிர, இழந்ததை மீண்டும் பெற அரசாங்கம் எடுத்துக்கொண்ட சிரத்தை, இக்குறிப்புகளின் முக்கியத்துவத்தை நமக்குத் தெரிவிக்கின்றனவல்லவா!

17-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி

ஆதாரம்

★

டி. ஸி. பியெடி

எழுதிய

'ரோமான்ஸ் ஆப்

மேப்ஸ்'

கட்டுரை.

யார் ‘உலகப்படம்’ ஒன்றின் 180பிரதிகளைத் தயாரித்தனர். இது வரை இம்மாதிரி பொதுப்படையானமுறையில் படங்கள் தயாரிக்கப்பட்டதில்லை. வெகு ரகஸ்யமாகப் பாதுகாக்கப்பட்டே வந்தன ஐரோப்பாவிலிருந்து, இந்தியா, மலேயா, சைனா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் செல்லும் கடல் மார்க்கங்களை விவரித்த இப்படங்களை கம்பெனி தலைவர்கள் மட்டும் தங்கள் வசம் வைத்திருந்தனர்.

டச்சு கிழக்கிந்திய கம்பெனிக்காரர்கள் இப்படங்களைத் தயாரித்தபோது நெதர்லாந்தைச் சேர்ந்த மெர்கடார், தான் வாழ்ந்த 17-ம் நூற்றாண்டில் உலகின் பகுதிகள் எது வரை கண்டு பிடிக்கப் பட்டனவோ, அவற்றின் மார்க்கங்களையும், முக்கியத்துவத்தையும் விவரித்து அழகுற ‘உலகப்படம்’ தயாரித்து விட்டார்.

இன்று இத்தகைய ‘உலகப் படம்’ தயாரிப்பது எந்த வித சட்ட திட்டங்களுக்கும் அடங்கியிருக்கவில்லை. எந்நாட்டினரும் இதனைப் பிரதி யெடுத்து அச்சிட்டு வெளியிடுவதற்கு உரிமைபெற்று விட்டனர்.

உலகின் உன்னத நகரங்களையும், சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களையும், பெரும் கடல்களையும், எரிமலைப் பிரதேசங்களையும், மரகதப்பச்சை தவழும் சமவெளிகளையும், பெரும் மலைத்தொடர்களையும் நம்மால் நேருக்கு நேர் சென்று பார்க்க முடியாத குறையை அவையவை உள்ள இடங்களைக் குறிப்பிட்டுக்காட்டி ‘இதோ உலகம்!’ என்று நம் கண் முன் காட்டுமளவிற்கு இப்படங்களைத் தயாரித்தவர்களுக்கு நன்றி பாராட்ட நாம் மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம்.

கிரேக்க நாடு கலை வளர்ச்சியில் சிறப்புற்று விளங்கும் நாடு என்பது சரித்திரம் கூறும் உண்மை. உலகத்தின் முக்கிய பிரதேசங்களைப் படமாகத் தீட்ட விரும்பி. கோழி முட்டை வடிவில் பழங்கால கிரேக்கர்கள் படம் ஒன்றைத் தீட்டினர். கி.பி. 150-ல், கிளாடியஸ் டாலமி என்னும் கிரேக்க வான சாஸ்திரி தன் சுய முயற்சியில் உலகப்படம் ஒன்றைத் தெளிவான விளக்கங்களுடன் தயாரித்தார். அதில் கிரீஸ் நாடு, ஏனைய அறிஞர்கள் ஏற்கனவே கூறியது போல் உலகின் மத்தியில் இல்லை என்பதை நிரூபித்துக் காட்டினார் டாலமி. தவிர, ஐரோப்பா, டென்மார்க், ஆப்பிரிக்காவின் பெரும்பகுதி ஆகிய இடங்களையும் அவர் தீட்டியுள்ளார்.

நான்கு திசைகளைக் குறிப்பாகக் கொண்டு படம் வரைதல் முறை அக்காலத்தும் இருந்தது. அப்போது படத்தின் தலைப்புறம் கிழக்கு என்றே குறிப்பிடப்பட்டது. இறைவன் வாழும் சுவர்க்க பூமி உலகின் கிழக்குப் பகுதி என்ற நம்பிக்கையால், அக்காலத்திய அறிஞர்கள் கிழக்கையே உயர்ந்த திசையாக எண்ணி, படத்தின் தலைப்பக்கத்தை கிழக்கு எனக் குறிப்பிட்டனர். ஆனால், பிற்கால ஆராய்ச்சியாளர்கள் வடக்கையே படத்தின் தலைப்பா

க் கொண்டு, திசைகளைக் குறிப்பிட்டனர்.

இத்தகைய உலகப் படங்கள் தோன்றிய பின் புதிய நாடுகள் ஆராய்ச்சியிலிறங்கிய மார்க்கோ போலோ, போர்ச்சுகீசியர் ஆகியவர்கள் இதனைத் துணை கொண்டு, தங்கள் ஆராய்ச்சி மூலம் சில நாடுகளைக் கண்டுபிடித்தனர்.

கி. பி. 1500-ல் கொலம்பஸுடன் சென்ற தலைவர் ஒருவர் உலகப் படம் ஒன்றை எழுதினார். ஆனால் 'புதிய உலகம்' கண்டுபிடிக்கப்பட்டபின் முதன் முதலாக எழுதப்பட்டு, 1506-ல்தான் அச்சடிக்கப்பட்டது. இதன் ஒரே ஒரு பிரதி தற்போது பிரிட்டிஷ் மியூஸியத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதன் பிறகும் நாடுகளின் வளர்ச்சி, அவற்றின் சிறப்புத் தன்மை காரணமாகச் சேகரிக்கப்பட்ட குறிப்புகளைக் கொண்டு விரிவான விளக்கங்களுடன் 'உலகப் படம்' தோன்றலாயிற்று.

காகிதச் சுருளாகத் தயாரிக்கப்பட்ட படங்களைத் தவிர, உலகின் உண்மை வடிவைப் பிரதிபலிக்கும் முறையில் 'கோளங்கள்' உருவாக்கப்பட்டன அவற்றில் உலகின் கண்டங்களும், கடல்களும் வரையப்பட்டிருப்பது இன்று நமக்குப் பேருதவியாக இருக்கின்றது.

உள்ளங்கையில் உலகத்தைநாம் தாங்கிக்கொள்ளுமளவிற்கு 'கோளங்கள்' தயாரிக்கப்பட்டுள்ளன. அதைச் சுழற்றினால் உலகின் பல்வேறு பகுதிகளும் நம் கண்முன் மாயமாகத் தோன்றுவதைக் காணலாம். ★

மேதைகளும் திருமணமும்

"மணவாழ்வில் இன்பம் காண்பவனே வாழ்கிறான்—மற்றவர்கள் வாழப்பிறந்தவர்களல்ல" என்ற தத்துவத்தைக் கடைப்பிடித்தார் ஆல்பிரெட் டெனிஸன்.

ஆனால், "மணந்து கொள்பவன் முழுமனிதனாக இருப்பதில்லை. அவன் அரைமனிதனே" என்கிறார் ரோமன் ரோலண்ட்.

"கற்பனைசக்தி உள்ளவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் திருமணம் பெருந்தடை—உலகின் புகழுக்கு தன் சிந்தனைசக்தி மூலம் சிறப்படைந்தவர்கள் திருமணத்தை வெறுத்தவர்கள்தான்" என்கிறார் பேக்கன்.

நியூடன் தன் வாழ்வில் ஒரு முறையே காதலித்து, தன் காதலியின் கைவிரலை சுருட்டு என எண்ணி, தவறாக உபயோகித்ததன் காரணமாக காதலியால் நிராகரிக்கப்பட்டார். அதன் பின் அவர் யாரையும் காதலிக்கவில்லை. அவர் இதன் காரணமாக வெறுப்படையாமல், தீவிர ஆராய்ச்சிமூலம் உலகப் புகழ் பெற்றார்.

கவ்லீ, ஆட்வே, கங்கிரீவ், கிரே, கோல்ட்ஸ்மித், போப், ஸ்விப்ட் ஆகியோர் வாழ்வில் காதல் குறிக்கிட்டாலும், 'திருமணம்' என்ற தண்டனையை அவர்கள் அனுபவிக்காததால், அவர்களிடமிருந்து இன்று உலகம் ஒப்பற்ற சிந்தனை சிருஷ்டிகளைப் பெற்றுள்ளது. உலகப் புகழ் பெற்ற சைத்ரீகர் லியனார்டோ டாவின்ஸி மணவாழ்வில் இன்பமே காணாதவர்தான்!



★ தொன்மை வாய்ந்த ஈழத்துத் துறைமுகங்களின் சிறப்பை விவரிக்கும் கட்டுரை இது.

ஈழத்துத் துறைமுகங்கள்

ந. மு. குமாரசிங்கன்

ஈழத்துத் துறைமுகங்கள் முற்காலத்தில் உலக அரங்கில் முக்கிய இடம் பிடித்துக் கொண்டன. இதற்கு முழு முதற்காரணம், இந்து மகா சமுத்திரத்தின் நடுவில் இலங்கை வீற்றிருந்தமையே. இலங்கை தனது அயல் நாடாகிய இந்தியாவோடு மட்டுமல்லாமல் அகிலம் முழுவதுடனும் வர்த்தகத் தொடர்பு வைத்துக் கொண்டது. இதற்குப் பாலி நூல்களில் பொதிந்து கிடக்கும் உண்மைகளும், பிறநாட்டவர்களின் நூல்களிலுள்ள இலங்கையைப் பற்றிய விபரங்களுமே சான்றாகத் திகழ்கின்றது.

1. காங்கேசன் துறை

காங்கேசன் துறை முற்காலத்தில் வர்த்தகத்தின் நிலைக்களனாக விளங்கியது என்று மகாவம்சம் கூறுகின்றது. இத்துறைமுகத்தை ஜம்புக்கோலா என்று அந்தக் காலத்தில் அழைத்தார்கள். காங்கேசன் துறை அதிகமாக வட இந்தியாவுடன்தான்—அதாவது வங்காளத்துடன்தான் வர்த்தகம் நடத்தியது.

2. மன்னார்

அடுத்தபடியாக முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகம் மன்னார். இங்கிருந்துதான் தேவநம்பியதீசனின் தூதுக்குழு பௌத்த சமயத்தை வளர்க்க, அசோகனுடன் தொடர்பு வைத்துக் கொண்டது என்று மகாவம்சம் சொல்லுகின்றது. இத்துறைமுகத்தை மகாதித என்றுதான் அழைத்தார்கள். இது கடற்கொள்ளைக்காரர்களுக்குப் புகலிடமாக இருந்தது என்றாலும், பௌத்த சமயத்தை வளர்க்க உதவியது. உலகிற்கு ஈழத்திலிருந்து அளிக்கப்படும் சிறந்த முத்துக்கள் இங்கேதான் வீரமிகு தமிழர்களால் எடுக்கப்பட்டன. இதுவே தேவநம்பியதீசன் காலத்தில் அரசாங்கத் துறைமுகமாகத் திகழ்ந்தது. இன்று ஈழத்திலுள்ள கண்டுபிடிக்கப் படாத புதைந்த நகரங்களில் இதுவும் ஒன்று. மேலும் இப்புதைந்த நகரத்தின் சுற்றளவும், விஸ்தீரணமும் 300 ஏக்கர் என்று கணிக்கப்பட்டது. இது இத்துறைமுகத்தின் பெருமைக்குச் சான்று.

இங்கே காணப்படும் ரோமன், அரேபிய பாஷைக் கல்வெட்டுகளும், சீனதேசத்து மட்பாண்டங்களும், இங்கு வாழ்ந்த மக்களின் நாகரிகத்தையும், பண்பாட்டையும் விளக்குகின்றன. சங்க கால இலக்கியங்களிலும் இத்துறைமுகத்தை ஈழத்தின்

முதன்மை வாய்ந்த துறைமுகமாகக் கருதிப் பாடப்பட்டிருக்கின்றது. இதன் மூலமாகத்தான் தலதா இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது. இதன் மூலமாகத்தான் தமிழர்கள் இலங்கை வந்தார்களெனச் சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். ஆனால் இன்று அரசாங்கத்தார், மன்னார் கள்ளத் தோணிகள் வரும் இடமென்று பலத்த போலீஸ் காவல் வைத்திருக்கின்றனர்.

சோழர்கள் ஆட்சியின் கீழ் இத்துறைமுகம் ராஜராஜபுரம் என்றழைக்கப்பட்டது. சதாமலகாரா, கொஸ்மா என்ற இரு நூல்களில் மன்னரின் மகிமையைப் பற்றியும் இங்கிருந்து உலகெங்கும் ஏற்றுமதியான திரவியங்களைப் பற்றியும் வெகு அழகாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. கிருஸ்துவிற்குப் பின் 982-ம் ஆண்டில் எழுதப்பட்ட அல்—அலாம் என்ற நூலில் ஈழத்தில் உற்பத்தியாகும் பொருட்களெல்லாம், மூவாஸ் என்ற துறைமுகத்தின் மூலமாகவேதான் அனுப்பப்பட்டது என்று எழுதப்பட்டிருக்கிறது. மன்னாரேதான் இத் துறைமுகமாக இருக்கக்கூடும் என்று ஊகிக்கப்படுகின்றது பொலநறுவா தலைநகராயிருந்த காலத்தில்கூட, மன்னார் முக்கிய துறைமுகமாகத்தான் திகழ்ந்தது. இங்கிருந்துதான் மகா பராக்கிரம பாகு, தென் இந்தியாவிற்குப் படை எடுத்தான். ஆனால் இன்றோ இது கள்ளக்குடியேற்றத்துக்கு அனுசரணையான துறைமுகம் எனக்கருதப்பட்டு, ராணுவ வீரர்களால் காவல் காக்கப்படுகிறது.

3. காவற்றுறை

பதினைந்தாம் நூற்றாண்டுடன் மன்னாரின் கீர்த்தி மங்கியது. பின்பு கோகில சாண்டேச என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ள ஊரு தோட்ட அல்லது கயிற்ற முக்கிய துறைமுகமாகத் திகழ்ந்தது. இங்கருக்கும் ஏழு தீவுகட்கும் ஊர்காவற்றுறையே தலைநகராக விளங்குகின்றது. துறைமுகத்திலிருந்து சொற்ப தொலைவில் நெடுந்தீவு என்னும் தீவு இருக்கிறது. இங்கிருந்து இந்தியா வெகு சொற்ப தூரத்தில்தான் இருக்கிறது. நாவாய் மூலம் அப்போது இந்தியாவுடன் வர்த்தகம் நடத்தினார்கள். ஆனால் இன்றோ? இத்துறைமுகத்தில் வேலை பார்த்த தொழிலாளர்கள் எல்லோரும் வேறு இடம் நாடினார். பிழைப்பு இல்லாத படியால், அன்று அகிலத்துடன் வர்த்தகம் நடத்திய துறைமுகம் இன்று அமைதியுடன் மிளிர்கிறது. மக்களின் வறுமையைப் பிரதிபலிக்கிறது.

4. ஊறுவெல

இதன் பிறகு புகழுடன் விளங்கியது மன்னாருக்கு அருகிலிருக்கும் ஊறுவெல என்னும் துறைமுகம். சிங்களம், பாலி முதலிய பாஷைகளில் எழுதப்பட்ட நூல்களில் இத் துறைமுகத்தை மாகும்ப என்று குறிப்பிட்டிருந்தார்கள். இதனருகிலிருக்கும் நகரங்கள் இலங்கையில் முதன் முதலாகக்

கொழும்பு நகரின் தற்காலத் துறைமுகம்

— போட்டோ : சு. சண்முகசுந்தரம்

குடியேறிய ஆதிமனிதர்களால் கண்டுபிடிக்கப்பட்டது என்று கருதப்படுகிறது.

5. காலி

பின்பு சிங்கள மன்னர்களின் ஆதிக்கம் வலுத்த பின்பு ஈழத்துத் துறைமுகங்களுள் காலியே பிரதானத் துறைமுகமாகத் திகழ்ந்தது. சீன, அரேபிய வர்த்தகர்கள் இத் துறைமுகத்தின் மூலமாகத்தான் தூரக்கிழக்கு,மத்திய கிழக்கு நாடுகளுடன் வர்த்தகம் செய்தனர். இதனருகிலுள்ள கிராமங்களில் நவரத்தினங்கள், யானைகள், மற்றும் கறுவா, இலவங்கம் முதலிய வர்த்தகப் பொருட்கள் பெருமளவில் இருந்ததால், இத்துறைமுகம் அகிலமெங்கும் பிரபல்யமடைந்திருக்கிறது.

வர்த்தகத்தால் காலி ஈழத்தை பிற நாடுகளுடன் உறவு கொள்ளச் செய்தது. மேலும் இந்தியாவுக்குச் சமீபமாக இருந்ததால், அங்குள்ள பண்பாடு, கலாச்சாரம் முதலியன இங்கும் பரவின. கிறிஸ்துவிற்குப் பின் 2-ம் நூற்றாண்டில் பிளினி என்பவர் எழுதிய ''சரித்திர ஆராய்ச்சி'' என்னும் நூலில்'ஈழம் செல்வம் கொழிக்கும் பூமி' என்று குறிப்பிடுகிறார். கேவதாசுத்த என்னும் பாலி நூலில் இலங்கையிலுள்ள முக்கியமான துறைமுகங்களைப் பற்றிய குறிப்புகளும், இங்கே பெறக்கூடிய வர்த்தகப் பொருட்களைப் பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவிற்கு முன் 3-ம் நூற்றாண்டில் ஸ்டிராபோவால் எழுதப்பட்ட பூமி சாஸ்திரத்தில், இலங்கை, யானைத் தந்தம், அழகான வர்ணம் தீட்டப்பட்ட ஆமை ஓடுகள், இரத்தினங்கள் முதலியவற்றிற்குப் பெயர் போனது என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ராஜவாளிய என்னும் நூலில், இந்திய மகாராணிகள் ஈழத்தில் செய்யப்பட்ட துணிமணிகளையே அணிந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

வடஇந்தியாவில் தமரலிபிட்டிதான் ஈழத்து வர்த்தகப் பொருட்கள் போயிறங்கும் துறைமுகமாக விளங்கியது என்று பிரபல வர்த்தகரும், உலகப் பிரசித்திபெற்றவருமாகிய பாகியன் குறிப்பிடுகின்றார். ரத்ன வாலிய என்னும் நூல் இத் துறைமுக மகிமையைப் பற்றியும், இதன் மூலமாகத்தான் புத்தரின் பல் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது என்றும் கூறுகின்றது.

இத்துறைமுகத்தின் வீழ்ச்சியின் பின்பு தென் இந்திய வர்த்தகம் தழைத்தது. இதன் பலாபலன்கள் தென் இந்தியர்களின் அனுராதபுர ஆதிக்கத்தில் முடிந்தது. கம்பே என்னும் துறைமுகத்தில்தான் ஈழத்து வர்த்தகப் பொருட்கள் வந்து குவிந்தன. இந்தியாவிலிருந்து புடவை, சீனி, தங்கம், வாசனைத் திரவியங்கள் முதலியன இங்கு இறக்குமதி செய்யப்பட்டன. இக்காலத்தில் கிரேக்கருடனும் வர்த்தகம் செய்தனர். பதினைந்தாம் நூற்றாண்டில் பாரசீகத்தாருடன் ஈழம் தொடர்பு வைத்துக் கொண்டது. ஏழாம் நூற்றாண்டில் பாண்டியர்களின் எழுச்சியின் பின்பு இலங்கையின் வர்த்தகம் அவர்களின் கையில் சிக்கியது பின்பு பத்தாம் நூற்றாண்டில் சோழர்களே இலங்கை வர்த்தகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தினர். போர்த்துகீசியரின் வருகை சோழர்களின் வீழ்ச்சிக்கு அடிகோலியது!

சிங்கள இலக்கியங்களிலும் ஏனைய மொழி நூல்களிலும் கூட ஈழத்துத் துறைமுகங்களின் சிறப்பு வெகுவாக விவரிக்கப்பட்டிருப்பதன் காரணம், இவைமூலம் உலக நாடுகளுடன் நடந்துவந்த வியாபாரத் தொடர்புகளேதான்.

இவ்வாறு அகில முழுவதுடனும் வர்த்தகம் செய்து, ஈழத்தில் செல்வத்தைக் குவித்து மாண்புடன் விளங்கிய துறைமுகங்கள் அந்நிய ஆதிக்கத்தின் பின்பு மாண்பு குன்றி, மங்கின. மீண்டும் இத் துறைமுகங்கள் பண்டைப் புகழெய்தி, ஈழத்தின் பெருமையைப் பாரெங்கும் பிரகாசிக்கச் செய்து மக்களுக்கு சுபீட்ச வாழ்வு தேடித் தருமா? ★

பரோடா

ச. சீ. கங்காதரன், பி. ஏ.,



படம் 1.

சமீப காலம் வரை தனித்தியங்கி, ஒரு சுதேச சமஸ்தானமாகப் புகழ் பெற்று இலங்கி வந்த பரோடா, தற்பொழுது பம்பாய் ராஜ்யத்தில் இணைந்துள்ளது. பம்பாயிலிருந்து டெல்லி செல்லும் ரயில் பாதையில் ஒரு முக்கிய சந்திப்பான பரோடா, பம்பாயிலிருந்து 244 மைல் தூரத்தில் அமைந்திருக்கிறது.

மொகலாய அரசர்களின் பலம் குன்றிய பொழுது. மராட்டியர்கள் இந்நகரைக் கைப்பற்றி, ஆண்டு வந்தனர். இவர்கள் ''கெயிக்வார்'' என்ற பெயரால் அழைக்கப் படுகின்றனர். இந்நகரில் சுதேச அரசர்கள் நிர்மாணித்த அரண்மனைகள் விசாலமானதாகவும் கலையழகு நிரம்பியனவாகவும் உள்ளன. அரண்மனைகளுள் அவசியம் காண வேண்டியவை 'லக்ஷ்மி விலாஸ்' அரண்மனை. இது தவிர, மகரபுர அரண்மனை, நாஸர்பாக் அரண்மனை, பிரதாப விலாஸ் ஆகியவைகளும் இங்குள்ளன. இவ்வரண்மனைகளைப் பார்க்க விரும்புபவர்கள், முன்னதாகவே அனுமதி பெற்றுச் செல்ல வேண்டும். அனுமதி பெறுவது எளிது; ஆனால் இவ்வரண்மனைகளைப் படம் எடுக்க அனுமதி கிடைத்தல் அரிது. மேற்கூறிய அரண்மனைகள் ஒவ்வொன்றுடனும் எழில் மிக்க நந்தவனங்கள் அமைக்கப்பட்டு, சீராகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அரண்மனைகளுள், மஹாராஷ்டிரப் பேரரசர் உபயோகித்த பல வகைக்கத்திகள் கேடயங்கள், அணி முடிகள், துப்பாக்கிகள், மற்றும் ஒளி மணிகள் பொருந்திய போர் ஆயுதங்களும் காட்சிக் குரியனவாக வைக்கப்பட்டுள்ளன.

பரோடா நகரின் நடுவில் அமைந்துள்ள ஸுரஸாகர் என்ற பெரிய குளம், ஊருக்கு அணிகலமாய்த் திகழ்கின்றது. அந்தக் குளத்தை நாற்புறமும் சூழ்ந்த அரசாங்க அலுவலகங்களும, கல்லூரிகளும் கடை வீதிகளும் அழகுற அமைந்துள்ளன. சிறந்த ஸுரஸாகர் ஏரியை அடுத்து அமைக்கப்பட்டிருக்கும் ராணி சிம்னுபாய் நியாயஸ்தலம், காண்பதற்குரிய இடங்களில் ஒன்று. இந்த நியாயஸ்தலம் முழுமையும்,



படம் 2.



படம் 3.

பிரான்ஸ் தேசத்திலிருந்து விசேஷமாகத் தருவிக்கப்பட்ட ஒருவகை உயர்ந்த செங்கற்களால் கட்டப்பட்டது எனக் கூறப்படுகிறது. க்ஷீரஸாகர் என்ற ஏரிக்கு மறுபுறம் பரோடா முனிசிபாலிட்டியார் ஜுபிலி பார்க் என்ற பெயரில் அழகிய பூங்காவை அமைத்து, அதன் அருகே புதிதாக ஒரு ''முனிசிபல் ஹால்'' ஒன்றையும் கட்டிக் கொண்டிருக்கின்றனர்.

எழில் கொண்ட பூங்காக்களும், நிழல்தரும் மரங்களும், அரண்மனைகளும் நிறைந்த இந் நகரின் ஒரு பல்கலைக் கழகமும் பணியாற்றி வருகிறது. இதனை நிறுவியவர் பரோடா மன்னர் சாயாஜி ராவ். அவர்களது பெயர் பூண்டு இலங்கும் இப்பல்கலைக்கழகத்தின், கீழை நாட்டுக் கலைகள் பற்றி ஆய்வதற்கெனவே ஒரு தனிப் பகுதி இயங்கி வருகிறது. தவிர, சமூக சேவை, அகக் கலை, லளித கலை

படம் 4.



ஆகியவற்றிற்கென தனித்தனிப் பகுதிகள் அமைந்துள்ளன.

லளித கலைகளுக்கெனவே அமைந்துள்ள கலா பவனத்திற்கு மிகவும் அருகில் அமைக்கப்பட்டுள்ள ஒரு அசோக ஸ்தூபீ, கம்பீரமாக நின்று அந்த இடத்திற்கு ஒரு புதிய அழகைக்கொடுக்கின்றது. இந்திய அரசாங்கம் அசோக ஸ்தூபியை அரசாங்க முத்திரையாக ஏற்றுக் கொள்ளு முன்பே, இந்த ஸ்தூபி பரோடா மன்னரால் நிறுவப்பட்டது என இங்குள்ள மக்கள் கூறுவர்.



படம் 5.

பரோடா நகரை அணைந்து செல்லும் 'விஸ்வாமித்ரி' என்ற நதியின் கரைகளிலே விசாலமானதும் மனதிற்கு ரம்மியமானதுமான பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இவ்வழகிய பூங்கா சுமார் 150 ஏக்கர் பரப்புடையதாய்ப் பரந்து கிடக்கிறது. இந்தப் பூங்காவினுள் ஒரு பொருட்காட்சிசாலையும் தவிர, ஒரு மிருகக்காட்சி சாலையும் அமைந்துள்ளன.

இங்குள்ள பொருட்காட்சி சாலை, இந்தியாவிலுள்ள மிகச் சிறந்த பொருட் காட்சி சாலைகளுள்

ஒன்ருகக் கருதப்படுகிறது. இங்கு இந்தியக் கலே, சமூகம், சமூக நாகரிகம், பண்பாடு. சரித்திரக் கல்வெட்டுகள், ஆகிய பல துறை சம்பந்தப்பட்ட பொருட்கள் ஒழுங்காகவும், சுத்தமாகவும் வைத்துக் காப்பாற்றப்பட்டு வருகின்றன. இந்தப் பொருட்காட்சி சாலேயில் வைத்திருக்கும் ஒரு பெரிய திமிங்கிலத்தின் எலும்புக் கூடு, ஆச்சரியத்தை விளேவிக்கக் கூடியதாய் இருக்கிறது. இந்தியக் கடற்கரையில் காணப்பட்ட இந்தத் திமிங்கிலத்தின் எலும்புக் கூட்



படம் 6.

டின் நீளம் தலேயிலிருந்து வால் வரை 78 அடி என்ருல் அதன் உருவத்தை கற்பனே செய்து கொள்ளுங்கள்!

இங்குள்ள சித்திர கூடத்தில், மேலே நாட்டுச் சித்திரங்களும், இந்திய நாட்டின் பல்வேறு பாகங்களேச் சார்ந்த ஓவியங்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பூங்காவுடன் இணேந்து அமைந்துள்ள மிருகக்காட்சி சாலேயில், சிறப்பாகக் குறிப்பிட்டுக்கூறும் வண்ணம், அங்கு காட்சிக்குரியன ஏதும் இல்லே.



படம் 7.

''கீர்த்தி மந்திர்'' என்று குறிப்பிடப்படும் மாளிகை பல வகைக் கற்களால் கட்டப்பட்டதாகும். இந்த மாளிகையின் உட்சுவர்கள் நந்தலால் போஸ் என்ற வங்க ஓவிய விற்பன்னரால் சித்திரம் தீட்டப்பெற்று, அழகுடன் மிளிர்கின்றன. இந்தக் கட்டிடம் கெயிக்வார் அரச பரம்பரையினரில் யாராவது இறந்து விட்டால், அடக்கம் செய்யும் சமாதியாக உபயோகிக்கப்பட்டு வருகிறது.

''படோலா'' என்று கூறப்படும் ஒருவகைப் புடவைகள் பரோடாவில் ஏராளமாக விற்பனேயாகின்றன. இவ்வகைப் புடவைகள் படான் என்ற இடத்தில் மிகுதியாக நெய்யப் படுகின்றன. இவ்வகைப் புடவைகள் மிகவும் விலே உயர்ந்தனவையாய் இருப்பினும், தரத்தில் மிகவும்நேர்த்தியானவை. நீண்டகாலம் உழைக்கக் கூடியவை. இப்புடவைகளில் ஒவ்வொன்றும் பல தலேமுறைகள் உப

படம் 8.



படம் 9.

யோசித்து வருவதற்குத் தகுந்த உறுதியும் வலிமையும் உடையன. வெளிர் சிவப்பு, தங்க நிறம் இலைப் பச்சை ஆகிய பல கண்கவர் நிறங்களில் பழைய காலத்துப் பாணிக



படம் 10.

ளில் அமைக்கப் பெற்று, இடையிடையே அழகிய பூ வேலைப்பாடுகளுடன் அமைந்த இந்தச் சேலைகள், கலைமணம் கமழும் பொருள்களாகத் திகழ்கின்றன.

படம் 11.



பரோடா நகர் இயற்கையன்னையின் பூர்ண எழில் பெற்று விளங்குகிறது. இத்துடனின்றி செயற்கை அழகினாலும் அந்நகரின் அழகை அதிகப்படுத்தியுள்ளனர். நகரைச் சுற்றிப் பார்க்க விரும்புபவர்கள் குறிப்பாக சில இடங்களைப் பார்த்து ரஸிக்க வேண்டும்.

நகரின் அழகைக்காணச் செல்வோருக்கு தங்குமிடங்கள் வசதியுடனிருக்கின்றன. முக்கியமாக வெளியூர்க்காரர்கள் வசதியுடன் தங்குவதற்கென சில விடுதிகளை தனி நபர்கள் நடத்தி வருகின்றனர்.

குறைந்த செலவில், வசதியுடனிருந்து, பரோடாவின் அழகைப் பார்த்து மகிழலாம். பரோடா நகரில் பார்க்க வேண்டிய இடங்களின் படங்கள் இக் கட்டுரையில் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. அவற்றின் முழுவிவரங்களும் கீழே விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

படங்களுக்கு விளக்கம்

1. பூங்காவின்வாசலில் அமைந்திருக்கும் சாயாஜி ராவ் அரசரது சிலையுருவம்.
2. இண்டர்மீடியேட் கல்லூரி.
3. பூங்காவில் ஒரு பகுதி.
4. ராணி சிம்னுபாய் நியாயஸ்தலம்.
5. பூங்காவில் தொங்கும்பாலம்.
6. லக்ஷ்மி விலாஸ் அரண்மனை- அரச குடும்பத்தினர் வசிப்பது.
7. க்ஷீரஸாகர் குளமும், ராணி சிம்னுபாய் நியாயஸ்தலமும்.
8. பரோடா புகை வண்டி நிலையம்.
9. கலா பவன்.
10. கீர்த்தி அரண்மனை - அரச குடும்பத்தினர் அடக்கம் செய்யப்படும் இடம்.
11. பொருட்காட்சி சாலையும் சிவாஜி சிலையும்.

சுதேச சமஸ்தான அரசாட்சி ஒடுங்கிய பின்னரும், பரோடா நகரம் என்றும் போல ''கல கல'' வென இன்றும் இருந்து வருவது போற்றுதற்குரியது. ★

எஸ். மகாலிங்கம், பி.எஸ்ஸி.,

நாள் முழுவதும் வேலை செய்தவுடன் உடம்பு அலுத்து விடுகின்றது. மனதில் சோர்வு ஏற்படுகின்றது. அமைதி குறைகின்றது. அலுப்புத் தட்டுகின்றது. அப்பொழுது மனது சாந்தியையும், சந்தோஷத்தையும் நாடுகின்றது. அப்படிப்பட்ட வேளைகளில் மனதிற்கு உகந்த ஏதாவது ஒரு பொழுதுபோக்கில் ஈடுபட்டால், மனம் நிம்மதியை அடைகின்றது.

பொழுதுபோக்குகள் பலவகைப்படும். நாம் தேர்ந்தெடுக்கும் பொழுது போக்கு தேகப்பிரயாசையில்லாததாகவும், பணச் சிலவு அதிகமில்லாததாகவும் இருக்க வேண்டும். பிறரும் அந்த பொழுது போக்கை அனுபவித்து, ரஸிக்கத் தகுந்ததாகவும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட பொழுது போக்குகளில் மிகச் சிறந்தது கண்ணாடித் தொட்டியில் பல நிறமீன்களையும், பச்சைப் பசேலென்ற செடிகளையும் வளர்த்தல்தான். மீன்களை வளர்த்தல் ஒரு அருமையான கலை. சிறந்த பொழுதுபோக்கு. இது மட்டுமா? மீன் தொட்டிகள் வீட்டை அழகுறச் செய்கின்றன. வீட்டுக்கு வருபவர்களும் கண்டு களிக்கின்றார்கள். வியாதியிலிருந்து சொஸ்தமுறும் நோயாளிகளின் படுக்கைக்கு அருகில், மீன்கள் தொட்டியிருந்தால், வியாதி சீக்கிரமாக குணமாவதோடு கூட, நோயாளிக்கு ஆனந்தத்தையும் கொடுக்கின்றது என்று ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர். பம்பாயில் ஒரு பிரபல சர்ஜன் இரண்டு ஆபரேஷன்களுக்கு மத்தியில் இருக்கும் நேரத்தை தன்னுடைய அறையில் இருக்கும் மீன் தொட்டியைப் பார்த்துக் கொண்டு பொழுது போக்குவாராம். பிரிட்டனின் மாஜி மந்திரி ஸர் வின்ஸ்டன் சர்ச்சிலின் பொழுதுபோக்கும் மீன் வளர்த்தல்தான். உற்சாகத்திற்கு மட்டுமில்லாமல், உணவிற்காகவும், ஊதியத்திற்காகவும் கூட மீன்களை நம் வீட்டில் வளர்க்கலாம்.

மீன் வளர்ப்பது எளியது. செலவும் அதிகமில்லை. அதற்காக அதிக பாடுபடவும் வேண்டாம். ஆனால் சற்று கவனமும், சிறிது பிரயாசையும் வேண்டும். மீன் வளர்ப்பதற்கு கீழ்கண்டவைகள் தேவை.

1. மீன் வளர்ப்பதற்கேற்ற ஒரு நீண்ட சதுரக் கண்ணாடிப் பெட்டி.

2. சுத்தமான தண்ணீர்.

3. பல வர்ணங்களும், வேடிக்கையான பழக்க வழக்கங்களும் உள்ள சில சிறு மீன்கள்.

4. நீர்வாழும் செடிகள், பூண்டுகள்.

5. நீர் நத்தைகள்.

6. தாவரப் பேன்கள்.

7. இரண்டு நீண்ட மரச்சட்டங்கள்.

8. ஒரு பெரிய கண்ணாடித் தட்டம்.

9. ஒரு மேஜை அல்லது ஸ்டூல்.

10. மணலும், வர்ணக்கற்களும்.

மேற் சொன்னவைகளைத் தயாரித்தவுடன் மீன் தொட்டி அமைப்பதை இப்பொழுது கவனிப்போம். மீன் வளர்ப்பதற்கு கண்ணாடியினால் செய்யப்பட்ட பெட்டிதான் நல்லது. பூராவாகவும் கண்ணாடி இல்லாவிட்டாலும் முன் பக்கம் கண்ணாடியினாலும், மற்ற பக்கங்கள் கற்பலகையினாலும் செய்யப்பட்டிருந்தாலும் போதும். கண்ணாடி முன் பக்கத்தில் இருப்பதினால் மீன்களின் வளர்ச்சியை நன்கு கவனிக்கலாம். அவைகளின் ஓட்டத்தையும் ஆட்டத்தையும் பார்க்கலாம். சூரிய வெளிச்சமும் நன்றாக ஊடுருவிச் செல்லும். பெட்டி நீண்ட சதுரப் பெட்டியாயிருப்பது தான் நல்லது. 2' 6'' நீளம், 1' 6'' அகலம், 1' ஆழம் உள்ளதுமான தொட்டியாக இருந்தால் கிட்டத்தட்ட 15 மீன்கள் வளர்க்கலாம். தொட்டியை உபயோகிக்கு முன் ஸோடா உப்பினாலும், பிறகு பொட்டாஸிய பர்மாங்கனேட் விலயனத்தினாலும் நன்ருகத் தேய்த்துக் கழுவி சுத்தம் செய்து, கடைசியாக சுத்த ஜலத்தினால் அலம்ப வேண்டும்.

தொட்டியை ஒரு ஸ்டூல் அல்லது மேஜையின் மீது நேரடியாக சூரிய வெளிச்சம் படாமல் வடக்கு நோக்கியிருக்கும் ஜன்னல் உள்ள அறையில் வைக்க வேண்டும். தொட்டியின் அடிப்பாகத்திற்கு மிருதுவான மணலை சிறிய கற்களோடும் உபயோகிக்க வேண்டும்.

தொட்டியின் அடியில் மணல் $1\frac{1}{2}''$ முதல் $2''$ கனத்திற்கு இருக்க வேண்டும். பின்பக்கத்திலிருந்து முன்பக்கம் சரிவாக இருக்கும்படி மணலைப் பரப்பவேண்டும். அதன் பின் தொட்டியில் சுத்தமானதும், கலங்கமற்றதும், தூசி இல்லாததுமான தண்ணீரை மணல் அசையாமலும், அதில் பள்ளம் விழாமலும் தொட்டியின் ஓரமாக, கொஞ்சம் கொஞ்சமாக, நிதானமாக முக்கால் தொட்டி ஊற்ற வேண்டும். அடுத்தபடியாக பச்சைத் தாவரங்களை தொட்டியில் நடவேண்டும். தண்ணீரில் கரைந்துள்ள பிராணவாயுவைத்தான் மீன்கள் உட்கொண்டு சுவாசிக்கின்றன. ஆகையினால் நீரில் வாழும் செடிகளை, தொட்டித் தண்ணீரில் வளர்க்க வேண்டும். அவைகள் மீன்கள் வெளிவிடும் கரியமிலவாயுவை உட்கொண்டு, பிராண வாயுவை வெளியிடும். இதற்காக வாலிஸ்நேரியா, எல்லோடியா, லென்ன ஹைட்ரில்லா, லுட் விக்யா, போடமோ ஜிடான் அன கேரியாஸ், சேஜிட்டேரியா, அம்பூலியா, கபம்பா போன்ற, பிராணவாயுவை அதிகம் வெளிவிடும் செடிகளாகப் பார்த்துப் பொறுக்கி, தொட்டியின் பின் பக்கத்திலும், பக்க வாட்டுகளிலும் நடவேண்டும். முன் பக்கம் நடக்கூடாது. அப்பொழுதுதான் மீன்கள் தங்கு தடையின்றி நீந்த முடியும். நாமும் அவைகளின் வளர்ச்சியையும், பழக்க வழக்கங்களையும் நன்கு கவனிக்க முடியும். நான்கு அல்லது ஐந்து செடிகளுக்குமேல் நடக்கூடாது.

செடிகளை நட்ட ஒரு வாரத்திற்குப்பின், மீன்களைத் தொட்டியில் விடவேண்டும். சாதாரண மீன்களை வளர்ப்பதில் பிரயோஜனமில்லை. கண்களுக்குக் கவர்ச்சியாகவும், பலவர்ணங்கள் கொண்டதாகவும் உள்ள மீன்களை வளர்த்தால்தான் மிகவும் ரம்மியமாக இருக்கும். ஆகையினால் பொன்மீன், குராமி, குப்பி, ஜீப்ரா, ராஸ்போரா, மாலிகள், ஜீவல் மீன், கண்ணாடி மீன், பார்பஸ, நியான் மீன், எக்ஸ்ரே மீன், ஸ்வர்கமீன், சயாமி போர் வீரன், சைனாப் போர் வீரன், ப்ளாக் ஸெயில், ஏஞ்சல் மீன், ஸோர்ட் மீன், பான்செக்ஸ், சொச்மோதி, ப்ளேடி, கத்திவால், டேப்ரா, தோராபன், பெர்ச், முத்துக்குராமி, முப்புள்ளிக் குராமி, கருப்பு டெட்ரா இவைகளை விலைக்கு வாங்கி வளர்த்தல் நல்லது. ஜீப்ரா மீனின் உடலில் நீட்டுப்போக்கில் உள்ள கோடுகள் மிக நேர்த்தியாக இருக்கும். குராமி மீன்கள் அலட்சியமாகவும், ஒய்யார

மாகவும், நீந்தும். எல்லா மீன்களிலும் தொட்டிக்கு அழகைக் கொடுப்பது குப்பி மீன் அடுத்தபடியாகத்தான் ஏஞ்சல், சயாமி மீன்களும், சைனுப் போர் வீரர்களும். அவைகளுக்குள் ஒரு நாளில் பல தடவைகள் விளையாட்டுச் சண்டைகள் போட்டுக் கொள்ளுவதைப் பார்ப்பது வநோதமாக இருக்கும். இம்மீன்கள் சண்டையிடும் பொழுது "யுத்த வீரர்களைப் போல்" ஒன்றை ஒன்று இடசாரி வலசாரியாகச் சுற்றியும், துள்ளிக் குதித்தும், கீழ் மேலாகத் தாண்டியும் போர் செய்கின்றன. அப்பொழுது அவைகள் தங்களின் உடல் நிறத்தை அடிக்கடி மாற்றிக் கொண்டு, பச்சோந்தியைப் போன்று பகட்டு நிறமுள்ளனவாயும், வெகு அழகாயும் காணப்படுகின்றன. பொன் மீனின் உடல் பளபளப்புள்ளதாகவும், பிரகாசமுள்ளதாகவும் இருக்கும். இம்மீனின் வால் முனையில் உள்ள சிறகுகள் அகன்று அழகான அமைப்பு உடையனவாயும், புள்ளிகள் உள்ளனவாயும் இருக்கின்றன. இவ்வின வகை மீன்களில், சிலவற்றின் உடலின் மீது அழகிய சிவப்பு வர்ணக் கோடுகளும், புள்ளிகளும், சித்திரமான அமைப்பு உடையனவாயு மிருக்கின்றன. கண்ணாடி மீனின் உடல் மிக மெல்லியதகடு போலவும், கண்ணாடி போலவும் இருக்கின்றது. தும்பி மீனின் செட்டைகளின் மீதும், உடலின் மீதும், செந்நிறமுள்ள வரிக்கோடுகளும், புள்ளிகளும் வரிசையாயும், அழகாயும் அமைந்திருக்கின்றன. இந்நிற பேதத்தையுடைய செட்டைகளின் தோற்றம் "ஆங்கில மாதர்களின் அலங்கார உடையணி போல" இருக்கின்றது. இத்தகைய மீன்களை செம்படவர்களிடமிருந்தோ, மீன் வளர்க்கும் சங்கங்களிடமிருந்தோ, மீன் வளர்ப்பவர்களிடமிருந்தோ, சர்க்கார் மீன் இலாகாவிலிருந்தோ பெற்றுக் கொள்ளலாம். மீன் வளர்க்கும் சங்கங்களிடமிருந்து சரசமான விலைக்கு அதிக விலையுள்ள, அழகான, கிடைப்பதற்கரிய மீன்களைப் பெறலாம்.

மீன்களுக்கு ஆகாரமாக ராகி மாவு, மசிந்த அரிசிச்சோறு, பொடி செய்யப்பட்ட சேமியா, பிண்ணாக்குத்தூள், ரொட்டித்துணுக்குகள், தளிர இலைகள், டயாடமஸ் இவைகளில் ஏதாவது ஒன்றை தினம் ஒரு முறை கொடுக்கலாம். வாரம் ஒரு முறை, துண்டிக்கப்பட்ட மண் புழுக்கள், இரத்தப் புழுக்கள், கொசுவின் புழுக்கள், பச்சை மாமிசம், எறும்பு முட்டைகள், தெள்ளுப்பூச்சி, சிறு ஈக்கள், புழு, பூச்சிகள், இறால் மீன் குஞ்சுகள் இவைகளில் ஏதாவது ஒன்றைக் கொடுப்பது மிகவும் நல்லது.

கடைசியாக மீன் வளர்ப்பதில் கவனிக்க வேண்டிய விதிகளை ஆராய்வோம்.

1. தூசி, தும்பு, புழு, பூச்சிகள் இவைகள் தொட்டியில் விழாமலும் மீன்கள் துள்ளும் பொழுது வெளியில் விழாமல் இருப்பதற்கும் மற்ற பிராணிகள் மீன்களை இரையாடாமல் இருக்கும் பொருட்டும் தொட்டியின் மேற் பாகத்தில் குறுக்கு வாட்டில் இரண்டு நீண்ட மரச்சட்டங்களை வைத்து, அவைகளின் மீது ஒரு கண்ணாடித் தட்டை தொட்டியின் விளும்புகளில் படாமல் உயர்த்தி வைக்க வேண்டும். அப்பொழுது தான் வெளிக் காற்றும் தொட்டியினுள் உள்ள தண்ணீருக்கு சுலபமாகச் செல்லமுடியும்.

2. கலங்கமற்ற நல்ல தண்ணீரைத் தொட்டியில் ஊற்ற வேண்டும்.

3. தொட்டித் தண்ணீரில் அடிக்கடி கையை விடக்கூடாது.

4. தொட்டியை சூரிய வெளிச்சம் நேரடியாகப் படுமாறு வைக்கக்கூடாது. பனியும், வெயிலும் மீன்களை பாதிக்கும். ஆகையினால் வெட்பதட்ப நிலைகளை அவ்வப் போது பார்த்து, ஆராய்ந்து அதற்குத் தகுந்தாற்போல் தொட்டியின் உஷ்ணநிலை ஒரே சீராக இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

5. எந்த ஒளியும் தொட்டியின் மீது மிதமாகவே படவேண்டும்.

அதிக ஒளிபட்டால் பாசி உற்பத்தி யாகி விடும்.

6. தினம் ஒரு முறை குறிப்பிட்ட வேளையில் ஆகாரம் கொடுக்க வேண்டும்.

7. ஆகாரத்தை அதிகமாகவோ குறைவாகவோ கொடுக்கக் கூடாது. உணவை நிதானமாக அளவறிந்து கொடுத்தல் வேண்டும்.

8. உப்புசம்பந்தப்பட்ட ஆகாரத்தைக் கொடுக்கக்கூடாது. உப்பு, உணவோடு கலந்திருந்தால், தொட்டி நீர் உப்பாகிவிடும். மீன்கள் வளர முடியாது.

9. வாரத்திற்கு ஒரு முறை துண்டிக்கப்பட்ட மண்புழுக்களைக் கொடுப்பது நல்லது.

10. போடப்பட்ட ஆகாரம் மீன்களால் உட்கொள்ளப்படாமல் 10 நிமிடங்களுக்கு மேல் இருந்தால், அவைகளை அப்புறப்படுத்தி விட வேண்டும். இல்லாவிட்டால் அவை அழுகி, தண்ணீர் அழுக்கடையும். துர்நாற்றம் வீசும். மீன்களை சீக்கிரம் வியாதி சுலபமாகப் பற்றிக் கொள்ளும்.

11. தொட்டிகளில் நீர் நத்தைகளையும், நீர்ச் செடிகளின் வேர்களில் வளரும் பேன்களையும் விடாமல் வளர்த்தல் அவசியம். நத்தைகளின் நிறம் தொட்டிக்கு அழகு செய்யும். அவைகளின் முட்டைகள் மீன்களுக்கு உணவாகப்பயன்படும். நத்தைகள் அழுகிய இலைகளையும், அழுகல் உணவையும் உண்டு தொட்டி நீரை சுத்தம் செய்யும். பேன்களும் அழுக்குகளைத்தின்று அவைகளை அகற்றுவதோடு மட்டுமில்லாமல், வளரும் மீன்களுக்கு சிறந்த உணவாகவும் அவை பயன் படுகின்றன.

12. மீன்களை ஒரு தொட்டியிலிருந்து மற்றொரு தொட்டிக்கு மாற்றும் பொழுது கைகளினால் தொடாமல் கொசுவலைத் துணியையோ, கம்பியினால் செய்யப்பட்ட வலையையோ உபயோகித்தல் வேண்டும்.

13. ஒரு தொட்டியிலிருந்து, இரண்டாவது தொட்டிக்கு மீனை அகற்றும் பொழுது இரண்டாவது தொட்டியில் உள்ள நீரின் உஷ்ண நிலை, முதல் தொட்டியில் உள்ள நீரின் உஷ்ண நிலையிலேயே இருக்கின்றதா என்பதைக் கவனிப்பது மிக, மிக அவசியம்.

14. வாரம் ஒரு முறை தொட்டியை நன்றாகக் கழுவி சுத்தம் செய்தல் வேண்டும்.

15. தொட்டியில் உள்ள அசுத்தங்களையும், அழுகிய இலைகளையும், மீந்துபோன ஆகாரங்களையும், மீனின் உடலிலிருந்து வெளிவரும் அசுத்தப் பொருள்களையும் ஒரு கண்ணாடிக் குழாய் அல்லது குச்சியைக் கொண்டு அவ்வப்போது அகற்றிவிட வேண்டும்.

16. தொட்டிகளில் பச்சைச் செடிகளை நடுமுன் அவைகளில் உள்ள அழுகிய இலைகளை அகற்றி நன்றாக அலம்பி, பிறகு நடவேண்டும்.

17. அதிக செடிகளை நடுவது ஆபத்து. மீன்களின் வளர்ச்சிக்கும் கெடுதல். நான்கு அல்லது ஐந்து செடிகள் நடுவதுதான் நலம்.

18. செடிகளை நட்ட ஒரு வாரத்திற்குப் பிறகுதான். (அவைகள் வேர்விட்டு, கற்களிலும், மண்ணிலும் பற்றிக்கொண்டு விட்டனவா என்ற பிறகுதான்) மீன்களை விட வேண்டும்.

19. தன் இனத்தோடும், பிற இனத்தோடும் சதா காலமும் சண்டையிட்டுக் கொள்ளும் மீன்களை கவனித்து, அவைகளைப் பிரித்துத் தனித்தனித் தொட்டிகளில் வளர்ப்பது மிக அவசியம்.

20. தொட்டியில் ஆவியாகும் நீரை ஈடுகட்ட, வாரம் ஒரு முறை கண்ணாடித் தொட்டியில் நீர்மட்டத்தின் அளவைக் குறித்துக் கொண்டு, தண்ணீரை ஊற்ற வேண்டும்.

21. தொட்டியில் உள்ள மண் பின்பக்கத்திலிருந்து முன்பக்கம் சரிவாக இருத்தல் அவசியம்.

22. தொட்டியில் தண்ணீரை ஊற்றும் பொழுது மண் கலங்காமலும், அதில் பள்ளம் விழாமலும் இருப்பது அவசியம்.

23. கல்லையும், மண்ணையும் தொட்டியில் போடுமுன் அவைகளை பலமுறை நன்றாகக் கழுவி சுத்தம் செய்ய வேண்டும்.

24. ஒரே சமயத்தில் எல்லா மீன்களையும் அவசரப்பட்டுக் கொண்டு தொட்டியில் விடக் கூடாது. ஒரு மீனைத்தொட்டியில் விட்டு, மீன்கள் வளரும்படியான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதா என்று ஆராய்ந்து, பிறகு மற்ற மீன்களை விடவேண்டும்.

25. சிறுமீன்களை பெரிய மீன்களிடமிருந்து தனியே அகற்றிவிட வேண்டும்.

26. வியாதியுள்ள மீன்கள் தண்ணீர் மட்டத்திற்கு அருகாமையில் வாலைக்கீழே தொங்கவிட்டுக் கொண்டு நீந்தும். சிறகுகள் பிரியாமல் உடலோடு ஒட்டிக்கொண்டிருக்கும். சோர்வுற்று மூலைகளில் அதிக நேரம் ஒண்டியிருக்கும். இப்படிப்பட்ட வியாதியுள்ள மீன்களை சுறுசுறுப்பாகவும், நல்ல நிலையிலுள்ள மற்ற மீன்களிடமிருந்து பிரித்து அப்புறப்படுத்த வேண்டும்.

27 தொட்டியின் தண்ணீரில் ஒரு ரப்பர் குழாயின் மூலமாக சுத்தக்காற்றை தினசரி நான்கு அல்லது ஐந்து தடவைகள் செலுத்துவது அவசியம்.

இந்த விதிகளை அனுஷ்டித்தால், மீன்கள் நன்றாக செழித்து வளரும். ஆகையினால் மீன் வளர்ப்பது ஒரு அருமையான பொழுதுபோக்கு. அருமையானதும், அபூர்வமானதும் பல நிறங்களும், உருவங்களும், பல்வேறு பழக்கங்களும் உள்ள மீன்களை வீடுகளில் வளர்ப்பது குதூகலத்தை உண்டு பண்ணுகின்றது. மனச்சோர்வை போககடிக்கின்றது. ஊக்கத்தையும் உற்சாகத்தையும், புத்துணர்ச்சியையும் அளிக்கின்றது. ★

பொருள் நூல்

ஜி. முருகேசன், பி.எஸ்ஸி.,

அன்றாட வாழ்வில் நாம் உண்ண உபயோகிக்கும் பொருட்கள், உடுத்த உபயோகிக்கும் பொருட்கள், இன்னும் பலவேறு வகையான உபயோகங்களுக்காக நாம் நாடும் பொருட்கள்—இவற்றைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள உதவியாக இருக்கும் அறிவே பொருள்நூல் விஞ்ஞானம் என்று பெயர் பெறும். இதை ஆங்கிலத்தில் 'கெமிஸ்ட்ரி' என்று சொல்கின்றனர். பொருள் நூல கற்கும் ஆரம்ப மாணவன் உணவு, உடை பற்றிய விஞ்ஞான உண்மைகளை அறிந்துகொள்வது மிகக் கடினம். அவற்றின் விஞ்ஞான உண்மைகள் குழப்பம் தருவனவாக உள்ளன. எனவே அவன் முதற் படியாக எளிய பொருட்களான காற்றையும் நீரையும் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். காற்றையும் நீரையும் பற்றிய அறிவு இயற்கையைப் பற்றித் தெரிந்துகொள்ள உதவுகிறது. இயற்கை அடக்கி வைத்திருக்கும் சட்ட திட்டங்களைப் புரிந்து கொள்வதால் விஞ்ஞானப் பாகுபாடுகளை நாம் புரிந்து கொள்ளும் திறன் பெறுகிறோம்.

பொருள்நூல் வல்லுநன் செய்திருக்கும் சேவை நம வாழ்வில் பிரிக்க முடியாத அளவுப் பிணைக்கப்பட்டிருப்பதை நாம் உணராதிருக்கிறோம். ஒவ்வொரு நாளும் நாம் உபயோகிக்கும் பொருள்கள் அவன் தன் திறனை மூலதனமாக வைத்து உருவாக்கித் தந்த செல்வமே. அவற்றில் பெரும்பாலானவை காற்று, நீர், நிலக்கரி, பெட்ரோலியம், உப்பு, சுண்ணம்பு முதலியவற்றின் சேர்க்கையால் உருவானவையே யாகும்; அவற்றை மனிதனே உருவாக்கினன், அழுக்கு நீங்கும் சோப்பு, கொழுப்புப் பொருளிலிருந்து செய்யப்படுகிறது. நோய் அணுகாதிருக்கப் நீரில் க்ளோரின் என்னும் வாயு பாய்ச்சப்பட்டு விஞ்ஞான அடிப்படையில் நீர் குடிப்பதற்கேற்ப சுத்தமாக்கப் படுகின்றது, ப்ளாஸ்டிக் பையும் பல் துலக்கும் பிரஷ்ஷும் நிலக்கரி வழி கிடைக்கும் உப பொருட்களிலிருந்து தயாரிக்கப் படுகின்றன. பழ மரங்கள் செழித்து வளர, பழங்களில் சுவையைப் பெருக்க நாம் விஞ்ஞானத்தையே நாடுகிறோம், உணவைச் சாப்பிட்ட பின்னர் நம்மில் சிலர் வைட்டமின் என்ற உயிர்ச்சத்து மாத்திரைகளைச் சாப்பிடுகிறோம். அப்போது பொருள்நூல் வல்லுநனைப் பாராட்ட நாம் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோம்! நாம வேண்டுவதெல்லாம் மேன்மையான உயிர். அந்த உயிரைச் செம்மைப்படுத்த மனிதன் கற்றுக் கொண்டு விட்டானே, அதுதான் அவன் சாதித்த மிகப்பெரிய செயல்!

பொருள்நூல் வல்லுநனைப் பிரிந்து நாம் ஒருக்கணமும் இருக்க முடியாது. ஆடை அணிகளுக்கான சாயப்பூச்சு எப்போதும அவனை நினைவு மடுத்தும். அவ்வளவேன், அடிப்படையான ஆடையே அவன் தந்த பொருள் தானே? அவனின்றேல் புகை வண்டி இல்லை; ரப்பர் இல்லை; ப்ளாஸ்டி இல்லை; கண்ணாடி இல்லை; முலாம் பூச்சு இல்லை.

இனி தொழில் துறையில் பொருள் நூல் விஞ்ஞானத்தின் பகுதியைப் பார்க்கலாம். உலகின் பொருளாதாரம் இன்றைய நாளில் இந்த விஞ்ஞானத்தைப் பொருத்தே அமைகிறது. தொழிற் சாலைகள் களங்களை அடிப்படையாகக் கொண்டே உருவாகின்றன. களங்கள் தொழிலுக்கு வேண்டிய ஆதாரமான மூலப் பொருள்களைத் தருகின்றன. நிலக்கரி போன்றவற்றை தரும் களங்கள் இல்லையேல் அதனைச் சார்ந்த பொருட்களைத் தயாரிக்க முடியாது. ஆக, களங்கள் தருபவற்றைக் கொண்டு நமக்குத் தேவை

யான பொருட்களை ஆலைகள் மூலம் உருவாக்கிக் கொள்கிறோம். மற்ற நாடுகளில் இருப்பதை விட அமெரிக்க நாட்டில் பெட்ரோலியம் தரும் களங்கள் அதிகமாக இருப்பதால், அந்த நாடு ஆலைத் தொழில்களில மேம்பட்டு விளங்குகிறது. உலகம் முழுதிலும் மூலப் பொருள்களைத் தரும் களங்கள் உண்டு. விஞ்ஞானிகள் ஆராய்ந்து அந்தந்த வட்டாரத்திற்குரிய ஆலைத் தொழில்கள் பெருக முனைந்து செயலாற்ற வேண்டும். இதற்கு நாம் எல்லோரும் வாழ வேண்டுமென்ற நல்லெண்ணமும், உலக மக்கள் அனைவரும் ஒரே குலம் என்ற விரிந்த மனப் பண்பும் நம்மிடை வளர வேண்டியது மிக்க அவசியம்.

இந்தத் தொழில் துறையை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். ஆதார மூலப் பொருட்களுக்கு முழுக்க முழுக்க இயற்கையை எதிர்பார்ப்பது முதல் பிரிவு. காகிதம், சர்க்கரை ஆலைத் தொழில்கள் இவ்வகையை சேர்ந்தவை. இன்றைய வளர்ச்சி அளவில் விஞ்ஞானிகள் தாமாக காகிதத்தையோ, சர்க்கரையையோ உண்டாக்க முடியாது; இயற்கை தரும் செல்வத்தை உபயோகித்துக் கொள்வதே நல்ல வழி.

இயற்கை தரும் பொருட்களை நமக்குத் தேவையான வடிவில் உருவாக்கிக் கொள்வது இரண்டாவது பிரிவு. தன் முயற்சியால் இயற்கையைப் பார்த்து கற்றுக் கொண்டு இப்பிரிவில் அடங்கிய பொருட்களை மனிதன் தானே உருவாக்க முடியும். ரப்பரும் ஆடையும் இப்பிரிவைச் சேர்ந்தவை. ரப்பர் இயற்கை வழியே கிடைக்கிறது. இதை மனிதன் தானே உருவாக்கவும் கற்றிருக்கிறான். இதே போலக் கம்பளியும், பருத்தியும் இயற்கை வழி வந்தவை. இவற்றைப் போல ஆடைகளுக்குதவும் ரேயான், நைலான் போன்றவற்றை நிலக்கரியிலிருந்தோ பெட்ரோலியத்திலிருந்தோ ஒரு விஞ்ஞானி தயாரிக்க முடியும்.

இயற்கை தரும் மூலப் பொருட்களை மாற்றி நமக்கேற்ப உபயோகித்துக் கொள்வது மூன்றாவது பிரிவு. இரும்பு, செம்பு, அலுமினியம், ஈயம் முதலியன அடங்கிய தாதுக்களைப் பக்குவப் படுத்தி உலோகங்களைப் பெறுவது இந்த வகை. கந்தக அமிலம் கந்தகத்திலிருந்து கிடைக்கிறது; சோடியம் ஹைட்ராக்ஸைடும், சோடியம் கார்பனேட்டும் சாதாரண உப்பு—கடல் உப்பிலிருந்து தான் கிடைக்கின்றன.

நான்காவது பிரிவு இயற்கையில் கிடைக்காதவற்றை அடக்கியது. முற்றிலும் மனித முயற்சியே இப்பிரிவுப் பொருட்களை உருவாக்குகிறது. ப்ளாஸ்டிக்ஸ், வெடி மருந்துகள், சில வைத்திய மருந்துகள் இப்பிரிவைச் சேர்ந்தவை.

''கிடைக்கும் வாழ்வு எப்படியும் கிடைக்கும்; விஞ்ஞான அறிவு விஞ்ஞானிக்குத் தேவையே; நமக்கு அது தேவைதானா?'' என்று பொது மக்களாகிய நாம் கேள்விக் குறியிடலாம். பொருள் நூல் விஞ்ஞானம் அறியாதிருந்தால் நமக்கு நாமே தீங்கிழைத்தவர்களாவோம்.

விஞ்ஞானம் நம்மை அறிவாளிகளாக வாழச் செய்கிறது.

இதை மேற் போக்காகக் கவனித்து ஒதுக்கி விடாமல், உள்ளே ஆராய்ந்து பார்க்க வேண்டும். இன்றைய மருத்துவம் விஞ்ஞான வளர்ச்சியின் எடுத்துக் காட்டாக அமைந்திருக்கிறது. மருத்துவமோ உடலை ஒட்டிய ஒரு பிரச்னை. உடலுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை நாம் வேறெதற்கும் கொடுப்பதில்லை அல்லவா? உடல் நலமோ உண்ணும் உணவைப் பொறுத்திருக்கிறது. சக்தியைப் பெறவும் வளர்ச்சியைக் காணவும் நாம் உணவை நாடுகிறோம். அந்த உணவு போஷாக்கு நிறைந்ததாக அமைய வேண்டும. அத்தகைய உணவு, சர்க்கரைச்சத்து, புரதம், கொழுப்பு, உலோகச் சத்துக்கள்,

உயிர்ச் சத்துக்கள் நிரம்பியதாக இருக்கும். பொருள்நூல் வல்லுநன் உயிர்ச் சத்துக்களைத்தானே தன் முயற்சியால் தன் சோதனைச் சாலையில் உலகம் வேண்டும் அளவு உற்பத்தி செய்து தருகிறான். உருவாகிய உயிர்ச் சத்து வில்லைகள் கடைகள் வழி வியாபாரத்திற்கு வருகின்றன. தயாரித்ததை விற்பனை செய்ய முதலாளி தன் திறனைக் காட்டுகிறான். பல விதமாக விளம்பரம் செய்கிறான். இந்நாளில் ரேடியோ விளம்பரம் எல்லாவற்றையும் மிஞ்சி நிற்கிறது. நமக்குத் தேவையல்லாதவற்றைக் கூட வாங்க வேண்டுமென்ற எண்ணத்தை விளம்பரங்கள் உருவாக்கி விடுகின்றன. நமக்குப் போதிய விஞ்ஞான அறிவு இருக்குமாயின் நமக்குத் தேவையானவற்றை வாங்கவும். வேண்டாதவற்றை விலக்கவும் நாம் தெரிந்து கொள்ளலாம். ஆமாம். அறிவாளிகளாக வாழக் கற்றுக் கொள்கிறோம்!

விளம்பரங்களில் மயங்கி தலையில் தேய்க்கும் எண்ணெயை ஒருவன் வாங்குவதாக வைத்துக் கொள்வோம். அந்த எண்ணெயோ நல்ல முறையில் தயாரிக்கப்பட்டதல்ல. அதை உபயோகித்தவன் இரண்டாம் நாள் தனக்குத் தலைவலி என்று அலறுகிறான். தலைவலியைப் போக்க மருந்தைத் தேடுகிறான் அவன். அப்போதும் விளம்பரங்களில் மயங்கிக் கேடு விளைவிக்கும் மருந்தொன்றை வாங்குவதாகக் கொள்வோம். அதை உபயோகித்தால் பிணி முற்றுகிறது. உயிரைக் காக்க வந்த மருந்து உயிரை நீக்கிவிடும். அபாயகரமானதாக மாறுவதும் உண்டு. இப்படிக் குருட்டுப்போக்கில் வாழ்க்கை நடத்தினால், அது நம் குற்றமேயன்றி விஞ்ஞானியின் குற்றமல்ல! ★

டீ. டீ. ட்டி.யும் பூச்சிகளின் எதிர்ப்பு சக்தியும்

உயிருக்காகப் போராடும்போது எல்லா ஜீவராசிகளுமே விசேஷ புத்திசாலித்தனத்துடன் நடந்து கொள்ளுகின்றன. சாதாரணமாய் எதிர்பார்க்கமுடியாத திறமைகளெல்லாம் ஜீவ-மரணப் போராட்டத்தில் வெளிப்படுகின்றன. உலக சுகாதார ஸ்தாபனத் தலைமை நிலையத்துக்கு 32 அங்க நாடுகள் தெரிவித்துள்ள ஒரு தகவல் இதை நிரூபிக்கிறது. அதிக சக்தி வாய்ந்த பூச்சி நாச மருந்தான டீ.டீ.ட்டீ,யைத் தொடர்ந்து உபயோகிக்கும்போது பூச்சிகள் டீ. டீ. ட்டீ.யைத் தாக்கிப் பிடிக்கக்கூடிய எதிர்ப்பு சக்தி பெற்றுவிடுகின்றன என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பனமா எங்கே, க்ரீஸ் எங்கே? இரண்டும் உலகத்தின் இரு அற்றங்களில் இருக்கின்றன. ஆயினும் இரு நாடுகளிலும் இதே நிலைமை காணப்பட்டிருக்கிறது. அதனால் இனிமேல் மலேரியா ஒழிப்புக்காக அகில உலக அடிப்படையில் மனிதன் நடத்தும் முதல் முதலான பெரும் போராட்டத்தின் யுத்த தந்திரத்தையே மாற்றவேண்டியிருக்கும் போல் தோன்றுகிறது.

இந்தியாவில், அதிர்ஷ்டவசமாய், இத்தகைய அனுபவம் இன்னும் ஏற்படவில்லை. சென்ற பத்து வருஷ காலமாய் மலேரியா கொசுக்களை ஒழிப்பதற்கு, டீ. டீ. ட்டீயே உபயோகிக்கப்பட்டுவருகிறது.

ஆடல்கலையில் அரிய மூன்று

எஸ். வி. ரமணி

நுண் கலைகள் பிறந்து வளர்ந்தது தென்னாட்டில்தான். செல்வந்தர்களும், கலாரசிகர்களும், சாதாரண மக்களும், கலைக்காகக் கலைஞர்களைப் பாராட்டி, அக்கலைகளுக்குக் காலத்தினால் நலிவு ஏற்படாமல் காப்பாற்றி வந்தார்கள். 'கலை மலிந்த நாடு இப்பாரத நாடு' என்று பாரதி கூறுகிறார். 'கலை பொலிந்த தென்னகம்' என்று பரத சார ஸங்கிரகம் என்ற நூலிலும் நம் நாடு வாழ்த்தப்படுகின்றது.

அத்தகைய உயர் கலைகளுள் தலையாயது பரதநாட்டியம். 'உயிரினும் உயர்ந்த எதையும் இறையம்சம் கொண்டதாக அல்லது இறைவனே அருளியதாகக் கொண்டு, பயபக்தியுடன் அதைப் போற்றிப் பாதுகாப்பது நம்மவர் மரபு. அதே மரபை யொட்டி, பரத நாட்டியமும், சர்வேஸ்வரனாலேயே சிருஷ்டிக்கப்பட்டதென்று பரத சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. தெய்வீகத்தன்மை பொருந்திய பல நுணுக்கங்கள், உடல் உறுதி, மனச்செம்மை அகக்கலை தேர்ச்சி பெற்றாரிடை உண்டாவது கண்கூடு. அத்துடன், தில்லையிலே ஆடும்பிரான் 'பரதநாட்டி' யத்தின் சிறப்பை உயர்த்தி, தெய்வீக நிலையாக்குகிறார்.

இவ்வளவு உயர்ந்த பரத நாட்டியத்திற்குப் பல நூல்கள் உள்ளன. எல்லாவற்றிற்கும் பரத ஸார சங்கிரகம் என்ற நூலே மூலமாகத் தெரிகிறது. சர்வேஸவரனிடமிருந்து அறிந்த பிரமன் பரத முனிக்கு உபதேசிக்கிறான். பரத ஸார ஸங்கிரகம் என்ற பெயரில் பல நூல்கள் இருக்கின்றன. வடமொழியில், ஜகஜ்ஜோதிமல்லர், வித்யாசக்ரவர்த்தி இருவர் நூலிலும் காணப்படுகின்றன. சுமார் 1700 வருஷங்களுக்கு முன்னால் சிக்கதேவராயரும், தெலுங்கும் வடமொழியும் கலந்த முடும்பி நரசிம்மாச்சாரியார் செய்த நூலும் காணப்படுகின்றன.

இந்தப் பரத ஸார ஸங்கிரகத்தில், பரத லட்சணம், பாவார்த்த லட்சணம், பாவாலங்கார லட்சணம், பாவாவிருத்தி லட்சணம் ஆகிய நான்கு பகுதிகள் உள்ளன.

பரதநாட்டியத்திற்கு முக்கியமானது பாவம். பாவம் என்பது விகாரமில்லாத மனிதனுடைய விக்கிரியைகள். 'சொற்கள், அபிநயங்கள், காண்பித்தல் இவற்றால் நாடகத்தின் பொருளை ஊட்டுவது பாவமாகும்' என்று நாட்டிய சாஸ்திரம் என்ற நூல் கூறுகின்றது. நாட்டியங்களில் அவை பல வகையான ரஸங்களை உண்டாக்குவதால், 'பாவம்' எனப்பட்டது என்கிறார் அடியார்க்கு நல்லார். பரதசேனாபதியம் என்ற நூல் 'பாவப் பகுதி பகருங் காலை அகத்தில் நினைத்தது அதுவாம்' என்றும், 'மானஸம் பாவம்' என்றும் கூறுகின்றது.

'ஏற்கனவே சாந்த நிலையிலுள்ள மனத்தில் முதன் முதல் ரஸம் பிறப்பது பாவமாகும்' என்று அபிநயதர்ப்பணம் என்ற நூல் கூறுகின்றது. மனத்தின் கண் ரஸம் ஏற ஏற, அது கண், புருவம் முதலிய அவயவங்களால் அதை வெளிப்படுத்தும்.

பரதத்திற்கு இன்றியமையாத பாவத்தைப் பற்றிக் கூறிய நூல்கள் அதன் பல கிளைகளையும் விரிவாகக் கூறுகின்றன. ஸ்தாயி பாவம், வியபாவம், அநுபாவம், ஸத்வ பாவம், வியபிசாரி பாவம் என்று ஐந்து வகைப்படும். இவைகளில ஸத்வாபாவம்தான் பிரதான்யம். பாவங்களைப் பற்றி உணர்வதற்கு இதுவேதான் காரணம். இது எட்டு வகைப்படும்.

விபாவம் இரண்டு பிரிவும், அநுபாவம் நான்கு பிரிவும், வியபிசாரிபாவம் முப்பத்திமூன்று பிரிவும் கொண்டவை. ஒவ்வொன்றும் மனத்தின் கண் உழலும் எண்ணங்களை, ரஸங்களை உணரச் செய்வதின் கர்த்தாக்கள் எனலாம்.

மனத்தெழுந்த பாவங்களை விளக்கும் அபிநயம் ஆங்கிரகம், வாசிகம், ஆகாரியம், சாத்வீகம் என நால்வகைப்படும். இந்த நயவகையையே மூன்று என்றும், ஐந்து என்றும் சில நூல்கள் கூறுகின்றன.

இந்த நான்குவித அபிநயங்களையும் சேர்த்துக் காட்டுவது தான் நாட்டியம். பதார்த்தத்தாலும் காத்திர விஷேபத்தினுலும் பாவாபாவத்தினுலும் வெளியிடுவது நிருத்த கீத வாத்திய தானங்களுடன் பிரயோகிப்பது நர்த்தனம். நாட்டியம், நிருத்தம், நர்த்தனம் ஆகியவற்றைப்பற்றிக் கொஞ்சம் மாறுதலுடன், தசரூபகம், அபிநயதர்ப்பணம், சிலப்பதிகாரம் ஆகியவைகள் கூறுகின்றன. பாவத்தை வெளிப்படுத்துவது அபிநயமென்று சிலப்பதிகாரமும் கிராதார்ஜுனீயமும் கூறுகின்றன.

மேலே கண்ட அபிநயத்தின் வகையான நான்கும் பல உட்பிரிவுகளைக் கொண்டிருக்கின்றன. உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களையும் அபிநயத்துக் காட்டி மகிழ்விக்கும் முறையும் அப்பிரிவுகளில் அடங்கியிருக்கின்றது. ஒளிபொருந்திய ஆபரணங்களை அணிந்து கொண்டு ஆடும்படியும். இராமாயணம் போன்ற இதிகாச நாடகங்கள் முதலியவற்றிற்கு ஏற்றபடி வேஷங்கள் பூண்டு ஆடுவதையும், பல நாட்டுக்குத் தகுந்தபடியும், பாத்திரமே பாடிக்கொண்டு ஆடும் முறையும், நட்டுவன் பாட, பாத்திரம் அதைக் கணப்பித்துக் கொண்டே நடனம் செய்வதையும், இன்னும் பலவும் அப்பிரிவுகளில் விரிந்து கிடக்கின்றன.

பாவத்தையும் அபிநயத்தையும் பார்த்தோம். அபிநயத்தைக் காட்ட உதவும் அங்கங்களைப் பார்ப்போம். அங்கங்கள், அங்கம், பிரத்தியாங்கள், உபாங்கம் என மூவகைப்படும். தலை, விரல், மார்பு கை, இடை, பக்கம், பாதம் இந்த ஏழும் அங்கம்; புயம், கழுத்து, வயிறு, மணிக்கட்டு, இருதுடைகள், முழுந்தாள், கணைக்கால், முதுகு, பூஷணுதிகள் சேர்த்து என்பதும் பிரத்தியாங்கம்; உபாங்கங்கள் விழி, கபாலம், இமை, புருவம்...போன்ற பன்னிரண்டு.

இந்த மூன்று அங்கப் பிரிவுகளிலும் சிற்சில வித்தியாசங்கள் இருக்கின்றன.

பாவ, ராக, தாளம் என்ற பரத சாஸ்திரத்தின் முக்கிய மூதல் மூன்றுபகுதிகளையும் பார்த்தோம். பாவம், அபிநயம், அங்கங்கள்! இனிமேல், நாட்டியத்தின் உபயோகத்துக்கான அவயவ பேதங்களின் இலங்கணங்களைப் பலபல பிரிவுகளாகவிளக்குகின்ற இந்தப் பகுதியே, சபையோரை ஆகர்ஷிப்பதால் அதிக விரிவாக, பரத சாஸ்திரம், பாலராம பரதம், மற்றும் இக்கட்டுரையின் கண் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா நாட்டிய சாஸ்திரங்களிலும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. தலைமுதல், பாதம்வரை உள்ள அங்க அபிநயங்களை இங்கே விவரித்தல் இயலாது. இன்னும், நட்டுவன் லட்சணம், பாத்திர லட்சணம், உடைக்கச்சை லட்சணம், அரங்கம், நாட்டியக்கிரமம், வாத்தியங்கள் முதலிய பலவும் நடன சாஸ்திரங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

இன்று காணும் நாட்டிய நிகழ்ச்சிகள் அவைகளுக்கு ஒத்து வராவிட்டாலும், தெய்வாம்சம் பொருந்திய கலையின் விழிப்புக்குக் காரணமாயிருப்பதற்காகவாவது நாம் போற்றத்தான் வேண்டும்!

வேதங்கள், கலைகள் மலிந்த நாட்டிலே, வேதங்களின் சாரமாக எழுந்த இந்த அரும் பெரும் கலை வளர, ஆடும் அம்பலவாணனின் அருள் என்றும் நிலவுவதாகுக! ★

ஜப்பானில் திருமணம்

குமாரதாசன்

உலகத்தில் உழைப்பிலே உயர்வு பெற்றும் விளங்கும் நாடுகளில் ஜப்பானும் ஒன்று. அதன்கண் வாழும் மக்கள் சோர்விலா இதயம் படைத்தவர்கள். உழைப்பினால் வாழ்க்கைத்தரம் உயரமுடியும் என்றநிலை ஜப்பானில். சாகாவரம் பெற்று வாழ்கிறது. எனவேதான் குமுறும் எரிமலைகளிடையேயும் அம்மக்கள் அமைதியுடன் வாழ்வு நடத்துகின்றனர். அத்தகைய உயர்ந்த எண்ணம் படைத்த மக்களது மணவிழாவினைப்பற்றிய சிறு தொகுப்பே இக்கட்டுரை.

ஜப்பானிய மக்களின் திருமணச் சடங்கிற்கு ''யொமெய்ரி'' என்று பெயர். மணமகளை மணமகன் குடும்பத்தில் கொண்டு சேர்ப்பது என்பதே அதன் பொருளாம். பெரும்பாலும் இம்மண விழா இரவிலேதான் நடைபெறுவதுண்டு. ஆயினும் இக்காலத்தில் பெரிய நகரங்களில் வாழ்வோர் காலைகளிலும் மாலைகளிலும் இவ்விழாவை நடத்துகின்றனர் அங்கு திருமணம் சமயச் சார்புடையதெனினும் 'ஷின்ட்டோ'' என்னும் கோயில்களிலும் மூதாதைகளின் கல்லறைகளின் முன்னிலையிலும் நடைபெறுகின்றன. திருமணமென்பது அங்கு ஒரே சடங்குதான்; மணப்பெண்ணை அவளது பெற்றோர். மணமகன் இல்லத்திற்கு அழைத்துச் செல்வது.

மணப்பெண் மணத்திற்குரிய அலங்காரங்களுடன் விளங்குவாள் அவளது தலையில் ஒரு வெள்ளை பட்டுத்துணியைச் சுற்றியிருப்பர். அதன் கருத்து அழுக்காறு கொண்டவர்கள் என்பதும், அவ்வழுக்காற்றினை மணவிழாவின்போது கட்டுக்கட்டி ஒளித்து வைக்க வேண்டுமென்பதேயாகும்

திருமண அறையில் மணமகனுக்கு எதிரில் மணமகள் அமர்வாள். பெண்ணின் பெற்றோர், மணமகனின் தோழன், மணப்பெண்ணின் தோழி, பணிப்பெண்கள் முதலான சிலரே ஆங்கே இருப்பர்.

மணமக்களது எதிரில் மூன்று கிண்ணங்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைத்திருப்பார்கள். முதலில், மேலுள்ள கிண்ணத்தை மணமகன் எடுப்பான். அதில் பணிப்பெண்களில் ஒருத்தி அரிசியிலிருந்து இறக்கப்பட்ட 'சாக்கே'' எனப்படும் மதுவை மும்முறை ஊற்றுவாள். மணமகன் அதை மூன்று முறை பருகிய பின்னர், பணிப்பெண் அதே கிண்ணத்தில் மீண்டும் மும்முறை அம்மதுவை ஊற்றுவாள். மணப்பெண்ணும் அதை மும்முறை அருந்துவாள். அதன் பின்னர் இரண்டாவது கிண்ணத்தில் பணிப்பெண் மும்முறை மதுவை ஊற்றுவாள். அதை முதலில் மணப்பெண்ணும் பிறகு மணமகனும் முன் போலவே அருந்துவர். இறுதியில் மூன்றாம் கிண்ணத்தை எடுத்து, முதலில் மணமகனும் மணமகள் ஈற்றிலுமாக அதில் ஊற்றப்படும் மதுவை முன் போலவே அருந்துவார்கள். இத்துடன் மணவிழா முடிவுபெறும். இச்சடங்கினை ''சான் – சான் – குடோ'' என அழைக்கின்றனர்.

மேலே கூறப்பட்ட சடங்கு முடிவுற்றதும் மணப்பெண் வேற்றுடைகளை அணிந்து கொள்வாள். பின் சிறந்த முறையில் விருந்து நடைபெறும் மணமக்களுடைய குடும்பத்துக்கிடையில் உறவைப் பிணிப்பதற்கு ஓர் சடங்கு நடைபெறுதல் வழக்கம். அதிலும் முன்னே சொல்லப்பட்ட அரிசி மதுவே சிறப்பிடம் பெறும். இக்குடும்பத்தினரும் எதிரெதிராக வரிசையாக உட்கார்ந்து கொள்வார்கள். ஒவ்வொரு வரிசையிலும் சுற்று

உயர்ந்த பீடத்தில் அந்தந்த குடும்பத்தின் தலைவர், தம் மனைவியுடன் அமர்ந்திருப்பர். வரிசையின் கோடியில் எதிரெதிராக மணமக்கள் அமர்ந்து கொள்வார்கள். அவ்விரு குடும்பத்தினரும் அரிசி மதுவை ஒன்றன்பின் ஒன்றாக மூன்று கிண்ணங்களிலும் நிரப்பி, பெண் இல்லத்தினர் அருந்தியதை மணமகன் இல்லத்தினரும் மணமகன் இல்லத்தினர் அருந்தியதை பெண் இல்லத்தினரும் பருகிப் பரவசமடைவார்கள். இவ்வாறு மாற்றி அருந்துதல் முறை குடும்பத்தலைவர்களிடம் தொடங்கி, இறுதியில் மணமக்களிடம் வந்து முடியும். இம்முறையால் இரு குடும்பங்களிடையேயும் உறவுமுறை ஒன்றுபடுகிறதெனக் கருதுகிறார்கள். அதன் பின்னர் மணமகள் மணமகன் இல்லம் செல்வதும், திரும்பவும் தாயில்லம் வருவதுமாக மும்முறை இங்கும் அங்கும் செல்வாள். அதனால்தான் மணப்பெண் கணவன் உறவினர்களுக்கும் மணமகன் மனைவியினது உறவினர்களுக்கும் அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றனர். அதற்குமேல் இரு குடும்பத்தாரும் மாறி மாறி ஒன்றிரண்டு விருந்துகள் நடத்துவது பழங்கால வழக்கம். ஆனால் இக்காலத்து மேனாட்டு முறையினைப் பின்பற்றி மணவினைகள் முடிந்த மறுநாள் அல்லது மூன்றாம் நாள் மணமக்கள் எங்காகிலும் ஓர் ஊருக்குச் சென்று, இன்பச் செலவு செய்து களிப்புறுகின்றனர். ★

நெய் கெடாமலிருப்பது எப்படி ?

பாலிலிருந்து தயாரிக்கப்படுகிற பொருள்களில் நெய் அதிக ஸ்திரமான வஸ்துவாக இருந்தாலும், உஷ்ண மண்டல நாடுகளில் அதிக வெப்பம், காற்று, வெளிச்சம் முதலியவைகளின் தாக்குதல், இதர சூழ்நிலைகள் ஆகியவைகளால் நெய்யிலுள்ள போஷணைச்சத்தும் அதன் தரமும் குறைந்து விடுகின்றன.

கோயம்புத்தூர் விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சிகளிலிருந்து, க்ரீமிலிருந்து நெய்யை நேரடியாகவே தயாரித்துவிடலாமென்று தெரியவந்திருக்கிறது. அந்த நெய் வெகுநாள் கெடாமலிருக்கும். க்ரீமோடு ஐந்து பங்கு எடை தண்ணீரைச் சேர்த்து இனிப்பு க்ரீமைப் பிரித்து எடுத்து. அதைப் புளிக்கவைத்து, பிறகு இளக்கி நெய் தயாரிக்கவேண்டும். உச்ச உஷ்ணத்தில் க்ரீமை உருக்கவேண்டும்.

கருவேப்பிலையை நெய்யோடு சேர்த்தால், நெய் கெடாமலிருக்குமென்று தெரியவந்திருக்கிறது. கருவேப்பிலையை ஆல்கஹாலில் கரைத்தால், கிடைக்கக்கூடிய ஒரு சத்துப் பொருளிலிருந்து நெய்யைப் பாதுகாக்கும் பண்பு அதற்கு ஏற்படுகிறது. கரும்பு, பனை வெல்லம், தென்னை வெல்லம் முதலியவைகளை நெய்யோடு சேர்த்தால், நெய்யின் தரம் உயருமென்றும் தெரியவந்திருக்கிறது.

நெய்யைக் காற்றுப்புகாத முறையில் டப்பிகளிலோ, புட்டிகளிலோ அடைத்தால், வெகுகாலம் கெடாமலிருக்கும்.

தேகாப்பியாசம்

லக்ஷ்மண ஸாண்டோ

1-வது பயிற்சி

ஆரோக்கியமொன்றே அனைவரும் விரும்பும் வஸ்து. அதுவே நாட்டின் ஜீவநாடி. அதை விரும்பாதவர் எவருமில்லை, ஏகோபித்து எல்லோரும் விரும்பும் அது அகில உலகிலும் அக்கிரஸ்தானம் வகிக்கிறது. உயிர் வாழ்வன யாவற்றிற்கும் இன்றியமையாத இதனை மனித சமூகம் மதிப்புடன் உயர்த்த வேண்டும். ஏன்? உடல் நலங்குறைந்தவர்கள் உலகை விட்டேக விரும்புகின்றனர் கஷ்டமான வாழ்க்கைத் துயரால் துஷ்டனை காலனை வரவேற்கின்றனர். இதனாலன்றோ ஆசிரம வாசிகள் கூட ஆரோக்கியத்தை வரவேற்றனர், வடலூர் இராமலிங்க சுவாமிகளும் கூட ''நான்நோயற்ற வாழ்வினால் வாழ வேண்டுமென்று'' பாடினார்.

அரோகமற்ற மக்களிடையே நோய், பலஹீனம், சோர்வு, ஆண்மை இன்மை, அழகின்மை முதலியவைகளே தோன்றும். அவர்களிடை ''ஜெயம், ஜெயம்'' என்ற சொல்லுக்குப் பதில் ''பயம், பயம்'' என்ற சொல்லே தாண்டவமாடும்.

அவர்களுடைய சந்ததிகளைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? நோயே குத்தகையாகவும், மருந்தே உணவாகவும், வைத்திய சாலைகளே வசிக்குமிடமாயுமுள்ள இவர்களுடைய சிருஷ்டியினால் நாடு நாசமாகிறது. எங்கு பார்த்தாலும் சோனியும் சோக்கானுமான மக்கள், கன்ன மொட்டிய மக்கள், குறுகிய மார்புள்ள மக்கள், பெரிய தொந்தி மக்கள், யானைக்கால் யானைக்கை மக்கள், அண்டம் பெருத்த மக்கள், காசம், க்ஷயம் முதலியவற்றால் எண்ணற்ற மக்கள் அவதியுறுவது உண்மை.

இதனால் நாட்டில் அகால மரணம், சிசு மரணம், பிரசவ மரணம்



2-ம் பயிற்சி - முதல் நிலை



2-ம் பயிற்சி-2-ம் நிலை

ஆகியவை பெருகுகின்றன. வைத்தியசாலைகளின் பெருக்கும், வைத்தியர்களின் எண்ணிக்கையும் மருந்துகளின் விளம்பரங்களும் எங்குங் காணப்படுகின்றன. இந்திய மக்களின் சராசரி ஆயுளை அளந்தால் 25க்கும் இறங்கி விட்டது.

ஆரோக்கியமில்லாத மக்களையுடைய தேசமெதுவும் அடிமைத் தளை அறுத்து ஆட்சி புரிய முடியாது. அப்படிப்பட்ட நாடுகள் எவ்வளவு செல்வம் நிறையப் பெற்றிருந்தாலும், உலக சரித்திரத்தில் உயர்ந்து முன்னணியிலிருக்க முடியாது. ஆரோக்கியமுள்ள ஒரு கூலிக்காரன் எவ்வளவு ஏழையாயிருப்பினும் அவனுக்குள்ள தேக சுகம் ஆரோக்கியமற்ற ஒரு சக்கிரவர்த்திக்குமுண்டோ? "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமன்றோ?".

அஸ்தியைக் காட்டும் நோயாளி ஆஸ்தியைக் கட்டிக்கொண்டு என்ன செய்கிறது?. ஆஸ்தியிருந்தும் ஜீர்ணஸ்தி இல்லாமல் தவிக்கிறான். ஜீர்ணிக்கச் சோடாவும், மலங்கழிகக மருந்தும் உண்டு கொண்டே உள்ளவர்கள் உயர் தனிகராயினும் உலக சுகத்தை ஒருபோதும் உணர்வதில்லை.

உழைப்பாளிகளின் உடல் உறுதி பெறும். அவர்களுடைய எலும்புகளும், ரத்தநாளங்களும், தளர்ந்த தசைகளும், நலிந்த நரம்புகளும் வளர்ந்து வளம் பெற்று வசீகரமாய்த் தோன்றும். திரண்ட மார்பையும், உயர்ந்த தோள்களையும், உறம் பெற்ற உடலையும், பாரந்தூக்கும் பலத்தையும், பகைவரை வெல்லும் பராக்கிரமத்தையும், கண்ணைக் கவரும் கட்டழகையும் உடற் பயிற்சி ஒன்றே தரும்.

அரசியல் நிலையை ஆராய்வோருக்கு இன்றைய உலகம் இன்பந் தராது. வல்லரசுகள் பொறாமைக் கண்கொண்டு பார்க்கின்றன. அவைகளின் பேச்சு சர்க்கரை பூசிய விஷம் போலிருக்கிறது. உள்ளத்தில் கள்ளமும் உதட்டில் வெல்லமுமாய் விளங்குகின்றன. உள்ளே துவேஷமும், வெளியே வேஷமுங் காட்டுகின்றன. ஆள் பலத்தையும் ஆயுத பலத்தையும் பெருக்கிக் கொண்டே வருகின்றன. ஒன்றையொன்று பயமுறுத்தி வருகிறது. இதனால் யுத்த மேகம் காட்சியளிக்கிறது. போர் மழை பொழியும் நாள் வந்து விட்



3-ம் பயிற்சி-முதல் நிலை

டால், பலஹீனநாடுகளின் சுதந்திரம் பறிபோய் விடும்.

1–வது பயிற்சி

இப்பயிற்சியினுல் மார்பு, தோள்கள், விலாத் தசைகளுக்கு பலமும் பார்வையு முண்டாகும் முதலில் குறைந்த எண்ணிக்கையில் பழக வேண்டும். உடல் வளம் உள்ளவர்கள் ஆரம்பத்திலேயே இருபது தடவைகள் செய்யலாம். பிறகு வாரத்திற்குப் பத்துவீதம் அதிகப்படுத்தவும் சாதாரணமானவர்கள் ஆரம்பத்தில் 10 செய்து வாரத்திற்கு ஒரு தடவை 4 வீதம் அதிகப்படுத்தவும். ஒழுக்கம், கட்டுப்பாடு, உணவு மேன்மை உள்ளவர்களுக்கு உடலின் உயர்வு ஆறுவாரத்தில் அழகாய்த் தெரியும்

படத்திற் காட்டியபடி முழங்கைகளை வளையாமல் வைத்து கைவிரல்களை இறுகமூடிக்கொண்டு நிற்கவும். ஆரம்பிக்கும் போது வலது கையை மேலே தூக்கியிருந்தால் அதை முன்புறமாய் வேகமாய் வலது துடைப்புறங்கொண்டு வரவும். அந்த சமயத்தில் இடது கையை முன்புறமாய்த் தூக்கி மேலே கொண்டு போய் இடது காதுப்புறம் நிறுத்தவும். கடைசி வரை முழங்கால்கள் முழங்கைகள் வளையவே கூடாது. வலது கை மேலே போவதும் இடது கை கீழே வருவதும் சேர்ந்தாற்போலிருக்க வேண்டும்' இப்படி மாறிமாறிக் கைகளை மேலுங் கீழுமாகக் கொண்டுபோய் சுறுசுறுப்பாய் அப்யசிக்கவும். மூச்சு அடக்க வேண்டியதில்லை. வாய்சுவாசங் கூடாது.

இரண்டாவது பயிற்சியில் முதல் நிலை

படத்திற் காட்டியபடி முழங்கை முழங்கால்களை வளையாமல் வைத்து நிற்கவும்.

இரண்டாவது பயிற்சியில் 2–வது நிலை

மேலே காட்டிய முதல் நிலையிலிருந்து கைகளை வேகமாய் இந்



3-ம் பயிற்சி - 2வது நிலை

நிலைக்குக் கொண்டுவரவும். கொண்டுவந்ததும் நிறுத்தாமல் சுறுசுறுப்பாய்க் கைகளைப் பிரித்து முதல் நிலையை அடையவும். ஒரு தடவை கைகள் 2-வது நிலையை அடையும்போது வலதுகை மேலே இருந்தால், அடுத்த தடவை இடது கையை மேலே கொண்டு வரவும். இப்படி மாறி மாறிச் சுறு சுறுப்பாய்ச் செய்யவும். (முன் போலவே மூச்சின் நிலை) கடைசி வரை கால்கள், கைகள் வளையக் கூடாது. இதற்கும் 1–வது பயிற்சிக்குச் சொல்லிய எண்ணிக்கையே செய்யவும்.

மூன்ருவது பயிற்சி -வதுநிலை, 2-வது நிலைகள்

இதனுல் இடுப்பு கால்களுக்கு அதிக பலம் முதல் நிலையில் நின்று இரண்டாவது நிலையில் உட்கார்ந்து திரும்பவும், முதல் நிலைக்கு வரவும். இப்படி முதலில் 5 செய்து வாரம் 2 அதிகப்படுத்தவும். உடல் நிலைக்கு உகந்தவாறு சுறு சுறுப்பாய்ச் செய்யவும். முன் போல மூச்சின் நிலை அனுசரிக்கவும். ★

மரணமும் மனிதனும்

'மலர்மன்னன்'

டயோனிஸ் என்ற மேதை ஒரு தடவை தனக்கெதிரில் எலும்பு மூட்டை யொன்றைப் பிரித்து வைத்துக்கொண்டு, ஒவ்வொரு எலும்பாக எடுத்துப் பார்ப்பதும் வைப்பதுமாக இருந்தாராம். அப்போது அவரது சீடனும் உலகப் புகழ் பெற்றவனுமான மாவீரன் அலெக்ஸாண்டர் அவரருகில் வந்து, "என்ன தேடுகிறீர்கள்?" என்று வினவினனும். அதற்கு அந்த மேதை, "உனது தந்தையாரின் எலும்புகளுக்கும் உன் தந்தையாரின் அடிமைகளின் எலும்புகளுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது என்று ஆராய்ந்து ஆராய்ந்து பார்க்கிறேன். இது வரை ஒரு வேறுபாட்டையும் கண்டுபிடித்தாக வில்லை!" என்று வருத்தத்துடன் கூறினர்.

ஆண்டானுக்கும் அடிமைக்கும், அரசனுக்கும் ஆண்டிக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை என்பதை சாவால்தான் நன்ருக—தெள்ளத் தெளிய எடுத்துக் காட்ட முடிகிறது என்று அறிந்த அறிஞர், அலெக்ஸாண்டருக்கு உண்மைத் தத்துவத்தை—'அனைவரும் ஒன்றே' என்ற மெய்ப் பொருளை—உணர்த்துவதற்கு எவ்வளவு சிறந்த உபாயத்தைக் கையாண்டிருக்கிருர்!

சாவு—'உறங்குவது போலும் சாக்காடு' என்று கூறும் வள்ளுவர், 'வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் உடம்பிலிருந்து உயிரை அறுத்துப் பிரிக்கும் கூரியவாளாகும்' என்று குறிப்பிட்டு, சாவானது மனிதனை நோக்கி வெகு விரைவாய் முன்னேறிய வண்ணம் இருக்கிறது என்ற உண்மையை விளக்குகிருர்.

முகமது நபி மருமகனும் சிறந்த வீரரும் அறிஞருமான அலி என்பவர் சாவைப்பற்றி பின் வருமாறு கூறுகிருர்.

"ஒவ்வொரு மணிநேரத்திலும் குறுகிக்கொண்டே வருகின்ற வாழ்க்கையில், நீ எப்படி மகிழ்வடைய இயலும்?"

'மனிதனுடைய ஒவ்வொரு மூச்சும் சாவிற்கருகில் ஒரு அடி நெருங்குவதாகும்."

"சாவு நம்மைத்தான் வேட்டையாட விரும்புகிறது. நாம் நின்ருலும் அது நம்மைப்பற்றிக் கொள்ளும். ஓடி ஒளிந்தாலும் துரத்திக் கொண்டுவந்து பிடித்துக்கொண்டு விடும்".

"நீ வாழும்போதே இறக்கிருய்" மனிதன் தன் வாழ்நாளில் எத்தனையோ முறை அச்சத்தால் நடு நடுங்கிச் செத்துப் பிழைக்கிருன்.

அழைத்தான், அவி, 'நீ வாழும் போதே இறக்கிறாய்' என்று குறிப்பிடுகிறாரோ, ஒரு வேளை?

ஆஸாண்டி ஜான்ஸல் என்ற மேதை, "நாம் வருகிறோம், அழுகிறோம், அதுதான் வாழ்க்கை; நாம் அலறுகிறோம், போகிறோம் அதுதான் மரணம்" என்று சாவிற்கும் வாழ்விற்கும் உள்ள தொடர்பைப் பற்றி கூறுகிறார்.

மகாகவி பைரன் "மரணமா? வருகிறதா? வரட்டுமே! நான்தான் வாழ்ந்தாகி விட்டதே! வாழாதவனுக்கு அல்லவா அதைப்பற்றி அச்சம்?" என்று அலட்சியமாகக் கூறுகிறார்.

பேரனுக்குப் பேரனெடுத்து, படுக்கையை வீடாகக்கொண்டு, பலவித நோய்களோடு உறவாடிய வண்ணம் 'கடைசி பேரனுக்கும் கல்யாணமாவதைக் கண் நிறைய பார்த்துவிட்ட பிறகு வேண்டுமானால் செத்துப் போகிறேன்" என்று பேராசையுடன் கூறும் மூதுபெரும் கிழவிகளை சர்வ சாதாரணமாகப் பார்க்கும் நமக்கு, பைரனின் சொற்கள் வியப்பைத் தருவதில் வியப்பில்லைதான்.

"செயற்கரிய செயல்களைச் செய்த பெரியோர்களை மரணம் எப்போதாவது வென்றதுண்டா? இல்லை! அவர்கள்தான் மரணத்தைச் சாகடித்து விடுகிறார்கள்!" என்கிறார் எட்மண்ட் ஸ்பென்ஸர் என்பவர். உண்மைதானே, வள்ளுவரும், காந்தியடிகளும், ஏசுநாதரும், ஸாக்ரெட்டீஸ், ரூஸ்ஸோ போன்ற மேதைகளும் இன்னபிற சிந்தனையாளர்களும் இறந்தா விட்டார்கள்?

ஜேம்ஸ் ஷெர்லி என்ற சிந்தனையாளர், "மரணத்தின் சக்தி மிகப் பெரியது. ஏழை—பணக்காரன், அரசன்—ஆண்டி அனைவரையும் அது ஒன்றாக்கி விடுகிறது!" என்கிறார்.

எல்லோருக்கும் இறுதியில் ஒரே முடிவுதான். ஆனாலும் அதற்குள் எத்தனை ஏற்றத்தாழ்வுகள்? நான் உயர்ந்தவன், நீ தாழ்ந்தவன் என்ற சச்சரவுகள்?

மாந்தர்களின் இந்த மடமையையும் சாவிற்கிருக்கும் சக்தியையும் எண்ணித்தான் நம் பேரறிஞன், "உயர்வு, தாழ்வு என்பது ஏற்பாட்டில் மட்டுமல்ல, எண்ணத்திலும் இருக்கக்கூடாது!" என்று முழங்கினான் போலும்!

"தாய்நாட்டின் தன்மானத்தை நிலைநாட்டுவதற்காக, நாம் ஒவ்வொருவரும் ஒரே ஒரு முறைதானே சாக முடியும்! விடுதலை வீரர்கட்கு இதைவிட வேதனைதரத்தக்க துன்பம் வேறென்ன இருக்க முடியும்?" என்று விடுதலை வேட்கை நிரம்பிய துடிப்புள்ள இளைஞர்களிடம் ஜோஸப் அடிசன் கூறுகிறார்.

சாவு வரக்கூடாதே என்று அல்லும் பகலும் அனவரதமும் பலர் வேண்டிக்கொள்ளும்போது, இந்த விடுதலை வீரர்களோ, 'சாவு ஒரு முறைதானே வருகிறது. பல முறை வரக்கூடாதா, இந்தப் பாழாய்ப்போன சாக்காடு!' என்று வருந்துகிறார்கள்!

தாய்நாட்டின் விடுதலைக்காகப் பல முறை உயிர்த்தியாகம் செய்வது கிடைத்தற்கரிய வாய்ப்புதான்; ஆனால் அது முடிவதில்லையே, என்ன செய்ய?

வில்லியம் ஜோன்ஸ் என்பார் அறிவுரையொன்றை நகைச்சுவையால் மூடித்தருகிறார். கசப்பான மருந்தை சர்க்கரைப் பாகு தடவித்தருவாரே, வைத்தியர், அதுபோல.

"நம்மைச் சுற்றியுள்ளவர்கள் எல்லோரும் சிரித்து மகிழ, நாம் அழுதுகொண்டே பிறக்கிறோம்—பிறக்கும்போது. இறக்கும்போது, நிலை வேறாக இருக்கட்டும்; நம்மைச் சுற்றியுள்ளவர்கள் அழ அழ நாம் சிரித்துக்கொண்டே இறப்போமாக!"

சாவைக் கண்டு அஞ்சாமல் மகிழ்வுடன் இறப்போம் என்பதுடன், நம் பிரிவு நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு மகத்தானதொரு நஷ்டமாக இருக்கவேண்டும் என்ற நற்கருத்தும் மிளிர்கிறதல்லவா இப்பொன்மொழியில்?

சிந்தனையாளர் ஷெரிடன், "மரணம் என்பது ஒரு கடன் அக்கடனை நாமெல்லோருமே கொடுத்தாக வேண்டும். பிறகொரு நாள் கொடுத்து விடுகிறேனென்றோ, தரமாட்டேன் என்றோ கூறிவிட முடியாது!' என்று சாவைப் பற்றிய தனது எண்ணத்தை வெளியிடுகிறார்.

மாண்டெயின், "என்னைப் பயமுறுத்துவது சாவல்ல' சாவைப் பற்றிய சிந்தனை தான் என்று கூறுகிறார். மகாகவி மில்டன், 'சாவு என்பது நித்தியத்துவம் என்ற அரண்மனையைத் திறப்பதற்கான சாவியாகும்" என்கிறார். தத்துவ ஞானிகள், 'சாவு வாழ்வின் இறுதியன்று; நிரந்தரமான வாழ்க்கைக்கு அது ஒரு வழி' என்று கூறுவதைத்தான் மில்டன் இவ்வாறு கூறுகின்றார்.

"பிறப்பும் இறப்பும் மனிதனுக்கு இயற்கையானது; சின்னஞ்சிறார்கட்கு இவை இரண்டுமே துயரமாக இருக்கும்" என்கிறார் பேகன்.

ஷெரிடன், மரணத்தை ஒரு கடன் என்று குறிப்பிட்டாரல்லவா? ஜான்பாஸ்டர் அதை மறுக்கிறார். "மரணம் என்பது இயற்கைக்கு நாம் செலுத்த வேண்டிய கடன் என்று கருதுவது தவறு. மரணம் என்பது ஒரு உண்டியலை பாங்கில் கொண்டு போய் கட்டிவிட்டு, அதற்கீடாக பொன்னைப் பெற்று வருவதைப் போன்றதாகும். பிணி, மூப்பு முதலியன நிரந்தரமாகத் தங்கியிருக்கும் இந்தக் கேவலமான உடலைக் கொடுத்துவிட்டு, நிரந்தரமான சுதந்திரம், வெற்றி, பரமஞானம், மகிழ்ச்சி முதலியவற்றை வாங்கிக் கொள்கிறோம்" என்கிறார் அவர்!

சிந்திக்கக் கற்றுக் கொடுத்த கிரேக்க மேதை ஸாக்ரெட்டீஸ், சாவை துச்சமென மதித்தான். "என் உள்ளத்தே உருவான கருத்தை மாற்றிக் கொள்வது என்னால் இயலாத காரியம்; அதை விட நான் செத்துப் போய் விடுகிறேன்" என்று கூறி, நச்சுக்கோப்பையைக் காலி செய்தான் அந்த இலட்சியவாதி.

ஸாக்ரடீஸிடம் விஷக்கோப்பையைக் கொடுக்கும்போது கிரிடோ என்பவன், "உன்னை எவ்வாறு புதைக்கவேண்டுமென விரும்புகிறாய், ஸாக்ரடீஸ்?" என்று கேட்டான். ஸாக்ரடீஸ் இக் கேள்வியைக் கேட்டு வாய்விட்டுச் சிரித்து விட்டு, "கிரிடோ! என்னை உன்னால் புதைக்கவே முடியாது! என் அழியப்போகும் உடலைத்தான் நீ புதைக்க விருக்கிறாய்! முதலில் உன் கேள்வியைத் திருத்திக்கொள்!" என்றான். சாவின் அணைப்பிலும் கூட அதைப்பற்றி எவ்வளவு அலட்சியம் அவனுக்கு!

மரணம் மனிதனை நோக்கி வருகிறதா, அல்லது மனிதர் மரணத்தை நோக்கிச் செல்கிறார்களா என்று ஒரு அறிஞரிடம் வினவிய பொழுது, அவர் பின்வருமாறு விளம்பினாராம்:

"முதியோர் மரணத்திடம் போகின்றனர். மரணம் இளைஞரிடம் வருகிறது".

சாவை உலகப் பெரியார்கள் யாவருமே சாதாரணமாகத்தான் கருதியிருக்கிறார்கள். சாவை அவர்கள் மதித்தார்களில்லை. அதைப் பற்றிய நினைப்பில் காலத்தை விரயமாக்காமல், தங்கள் பணியைச் சரிவரச் செய்து வந்திருக்கிறார்கள். தமது உள்ளத்திலெழுந்த கொள்கைகளை சாவே தான் எதிர்ப்பட்ட போதிலும் துணிந்து எடுத்தியம்பியிருக்கிறார்கள். ★

ஆண்டி, அரசன் என்ற வேறுபாட்டிற்கிடமின்றி
சமரஸம் நிலவும் இடம் மயான பூமிதான்!

— அரிஸ்டாடில்.



கப்பல் செப்பனிடும் சாலை

வெ. குஹானந்தன்

இயங்கும் இயந்திரத்திற்கு தேய்வு ஏற்படுவது சகஜம். தேய்வு உடனுக்குடன் பழுது பார்க்கப்படாவிட்டால், இயந்திரம்வேலை செய்யாது! இரயில்வே என்ஜின்கள், மோட்டார்கள், சைக்கிள்கள்—முதலியவற்றைப் பழுது பார்க்க பிரத்யேகமான (ஒர்க் ஷாப்) பட்டறைகள் இருக்கின்றன. அதேவிதம் கடலில் மிதக்கும் கப்பல்களைப் பழுது பார்க்க, செப்பனிடும் துறை(டாக்)கள் அவசியம்!

பொதுவாக 'டாக்'கள் துறைமுகத்தை யொட்டி அமைக்கப்படுகின்றன. துறைமுகங்கள் இல்லா இடங்களில் கடலில் கடற்கரையோரமாக பலமான சுவர்களை எழுப்பி, மடுபோல் அமைக்கப்படுகின்றன. இதற்கு 'பேஸின்' என்று பெயர். இந்த 'பேஸினை' யொட்டியும் 'டாக்' அமைக்கப் படுவதுண்டு.

'டாக்'களுள் முக்கியமானவை (1) ட்ரைடாக். (2) ப்ளோடிங் டாக். இவை இரண்டும் கப்பல் பழுது பார்க்க உபயோகிக்கப்படும் துறைகள் தான்.

1. ட்ரைடாக் துறைமுகத்திற்கும் அல்லது 'பேஸி'னுக்கும் நடுவே பலமான அடைப்பு (ஷட்டர்) இருக்கும். இல்லாவிடில் துறைமுகத்தினின்று கடல் நீர் 'டாக்'கிற்குள் புகுந்து விடுமல்லவா? பழுது பார்க்கப்பட வேண்டிய கப்பல், துறைமுகத்திற்கு வந்ததும் இந்த அடைப்பைத்திறந்து விடுவார்கள். அப்பொழுது துறைமுகத்தினின்று கடல்நீர்'டாக்'கிற்கிகுள் பிரவேசிக்கிறது. கப்பல் தங்குவதற்கு போதுமான கடல் நீர் 'டாக்'கிற்குள் வந்த உடன், கப்பலை 'டாக்'கிற்குள்செலுத்தி, கட்டிவிடுகிறுர்கள். பிறகு அடைப்பைப் போட்டு விடுகிறுர்கள்.

'டாக்'கின் அடிபாகத்தில் வரிசையாக கட்டைகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு 'கீல் பிளாக்ஸ்' என்று பெயர். இந்தக் 'கீல் பிளாக்ஸ்'மேல் தான் கப்பல் நிற்கிறது. 'டாக்கி'ல் உள்ள நீரை இறைத்து விடுகிறுர்கள்.

இதன் பின்பே கப்பல் பழுது பார்க்கப்படுகிறது.

பழுது பார்க்கப்பட்டபின் மறுபடியும் அடைப்பைத் திறந்து கடல் நீரை 'டாக்கி'ல் விட்டு, கட்டுகளை அவிழ்த்து, கப்பலை துறைமுகத்தின் வழியாக கடலில் மிதக்க விடுகிறுர்கள்.

2. ப்ளோடிங் டாக்: இதுகடலில் மிதக்கும். பழுது பார்க்கப் பட வேண்டிய கப்பல், துறை முகத்

திற்கு வரவேண்டிய அவசிய மில்லை. கப்பல் மிதக்கும் இடத்திற்கு இந்த 'டாக்'கை கொண்டு போகிறார்கள். அடைப்பை திறந்து, கப்பலை 'டாக்கிற்குள் இழுத்து கட்டி விடுகிறார்கள். கப்பலைச் சுமந்து கொண்டு டாக்' கடலில் மிதக்கின்றது! கப்பல் பழுது பார்க்கப்பட்ட பிறகு, கப்பலை கடலில் மிதக்க விட்டு விட்டு 'டாக்' கரைக்குத் திரும்பி விடுகிறது.

கடல் மார்க்கப்போக்கு வரத்தை ஜீவநாடியாகக் கொண்ட இங்கிலாந்து போன்ற நாடுகளில் 'டாக்' குகளுக்கு பஞ்சமேயில்லை? ஒரு துறைமுகத்தை யொட்டி பல 'டாக்'குகள் இருக்கும். எண்ணை, நிலக்கரி, வியாபாரப்பொருள்கள், யுத்த தளவாடங்கள் இவைகளை ஏற்றிச் செல்லும் கப்பல்களைப் பழுதுபார்க்க பிரத்யேகமான வசதிகளோடு ஒவ்வொன்றிற்கும் தனித்தனி 'டாக்' இருக்கும். கப்பல் 'டாக்கி'ல் இருக்கும்போதே கப்பலிலிருந்து சாமான்களை இறக்கவும் கப்பலில் சாமான்களை ஏற்றவும்வசதிகள் உண்டு. கப்பலிலிருந்து இறக்கிய சாமான்களை பத்திரப் படுத்திவைக்க பண்டகசாலைகளும் உண்டு.

நம் நாட்டில் துறைமுகங்கள் குறைவு. ஆகவே 'டாக்கு'களும் அதிகமில்லை. ஏன்? கடல் மார்க்கப் போக்குவரத்தே நம் நாட்டில் மிகக் குறைவுதானே! நாடு சுதந்திரம் அடைந்த பிறகுதான் கடல் மார்க்கப் போக்கு வரத்தை அபிவிருத்தி செய்வதில் நம் கவனம் திரும்பிற்று துறை முகங்களின் அபிவிருத்திக்காக பல கோடிகள் ஒதுக்கப்பட்டன. விசாகையில் ஒரு கப்பல் கட்டும் தொழிற்சாலையும் துவக்கப்பட்டது. விசாகையில் 'கட்டை டாக்கு'ம் 'ப்ளோடிங் டாக்கு'ம் உள்ளன கப்பல்கள் அதிகரித்தால் 'டாக்கு'களும் அதிகரிக்கத்தானே வேண்டும்? ★

அராஜகத்தின் பயங்கரம்!

சீன ஞானி கன்பூஷியஸ் ஒரு முறை ஒரு பெருங்காட்டைக் கடந்து கொண்டிருந்தார். அப்போது நடு காட்டில் ஒரு கிழவி ஓலமிட்டழுவதைக் கண்டதும், தன் பல்லக்கு தூக்கும் ஆட்களையனுப்பி காரணம் விசாரித்து வரச் சொன்னார். அவர்கள் கிழவியை நெருங்கி காரணங்கேட்டுத் திரும்பினர். "இக்கிழவி முப்பது ஆண்டுகளாக இங்கு வசிக்கிறாளாம். இங்கு வந்த ஓராண்டிற்குள் இவள் கணவனை ஒரு புலி அடித்துக் கொன்றதாம். ஐந்து ஆண்டுகளுக்குப் பின் இவளது மூத்த பிள்ளைக்கும் அதே கதி நேர்ந்தாம். சமீபத்தில் அவளது இரண்டாவது பிள்ளையைப் புலி அடித்துக்கொன்று விட்டதாம்! இக்கொடுமையைத் தாங்க முடியாமல் கதறுகிறாள் அவள்!" என்று ஒரு பல்லக்கு தூக்கி சொன்னவுடன், சீன ஞானி தானே கீழிறங்கி கிழவியிடம் சென்றார்.

"அம்மா! புலியின் கொடுமையை நன்கு தெரிந்திருந்தும் நீ ஏன் இங்கேயே தங்கி இருக்கிறாய்?" என்று கேட்டார்.

கிழவி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "நாட்டில் நடக்கும் அராஜகம் என்னை இவ்விடத்தையே மேலாக நினைக்கத் தூண்டுகிறது" என்றாள்.

சீன ஞானி அதைக் கேட்டு, "கடும்புலி வாழும் காட்டின் கொடுமைகளை விட, நாட்டின் அராஜகம் மிகவும் பயங்கரமானது என்ற உண்மை தெளிவாகி விட்டது!" என்றார்.

விக்டர் யூகோவின் காதல்

டர்பன் சண்முகம் பிள்ளை

விக்டர் யூகோ எழுதியுள்ள 'லே மிஸராபிள்ஸ்' என்ற நவீனம் உலகத்திலுள்ள எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பிரஞ்சு பாஷையில் விக்டர் யூகோவைப் போன்று கற்பனைக் கதைகளை வெளியிட்டவர்கள் மிகவும் குறைவே.

இவர் எவ்வளவு பெரிய மேதாவியாய் இருப்பினும், காதல் என்னும் உணர்ச்சிக்குத் தப்பியவரன்று. தன் இளம் பிராயத்திலேயே அடிவி போச்சர் என்னும் ஒரு சிறுமி மீது அன்பு பாராட்டி வந்தார். குழந்தைப் பருவ நேசம், வயது வளர வளர, காதலாய் முற்றியது. அடிவி போச்சர் மீது வைத்துள்ள அன்பு பற்றி யூகோ, போச்சரை மணம் புரியும் வரையில், வேறு மாதர்களை ஏறிட்டு நோக்கினவரன்று போச்சர் என்பவள் தன்னிடம் எவ்வாறு தூய உடம்போடு தூய மனத்தோடு மனைவியாக வருதல் வேண்டுமென யூகோ கருதினரோ, அவ்வாறே தானும் மண நாளன்று போச்சரிடம் மாசற்ற உள்ளத்தோடும், உடலோடும் பழகுதல் கடனெனக் கருதி ஆண் கற்பைக் காப்பாற்றி வந்தார்.

போச்சரை மணம் புரியும் நாளன்று காலையிற்கூட, 'எந்த ஒரு பெண் தன்னை மணக்கும் மணமகன் கற்புடையவனல்ல என்றறிந்திருந்தும், அவனைத் தன் கணவனாக ஏற்க உடன்படுகின்ருளோ, அந்தப் பெண் வெறுப்பிற்கு இலக்கானவள்' என்று போச்சருக்கு விக்டர் யூகோ எழுதியிருக்கின்ருர். இக்கடிதம் இவரது உயர்வான கற்பையே வலியுறுத்திக் காண்பிக்கிறது. போச்சருக்கும் விக்டர் யூகோவுக்கும் மணம் முடிந்தது.

உலகத்தில் மணம் புரியுமுன், காதலர்கள் தங்கள் மணவாழ்க்கையில் அனுபவிக்கப் போகும் இன்பங்களையெல்லாம் எண்ணி எண்ணி அக மகிழ்வார்கள். மனக்கோட்டை கட்டுவார்கள். ஆனல் கண்ணுக்காகப் பழுத்து பலவித நிறங்களுடன் தொங்குகின்ற எட்டிக் கனியானது, கைக்கு அகப்பட்ட பின்பு. கசப்பது போன்று, தாங்கள் எண்ணிய எண்ணங்கள் எல்லாம் வீண் கனவுகள் போன்று முடிவது போலவே, மணவாழ்க்கையும் அநேக சம்பவங்களில் எட்டிக் கனியாயின்றன வென்பது பலரின் அநுபவம்.

அது போலவே விக்டர் யூகோவின் காதல் மணமும் பின்னர் எட்டிக்கனியாய் கசக்கலானது. யூகோவிற்கும் போச்சருக்கும் நான்கு குழந்தைகள் பிறந்துவிட்டனவென்ருலும். போச்சருக்கு யூகோவின் மீதிருந்த காதலின் தீவிரம் வர வர மட்டுப்பட்டுக் கொண்டு வந்தது. யூகோ

வின் நெருங்கிய நண்பனுகிய செண்ட் பியூ என்பவன் மீது, போச்சரின் பிரியம் வழிமாறிப் பாய ஆரம்பித்தது. அதனுல் யூகோவின் இல்லற சுகத்திற்குப் பங்கமேற்பட்டது. இந்நிலையில் மேலும் தவறுதல்கள் ஏற்படா வண்ணம் தடுத்துப் பார்த்தார் முடியவில்லை. ஆதலின், யூகோவின் மனதில் தன் நெருங்கிய நண்பனும், மனைவியும் செய்து வந்த வஞ்சகமானது. வாளிட்டறுத்தது. மிகவும் துயரத்திலாழ்ந்தார் அவர்.

யூகோ இவ்வாறு சிந்தை கலங்கி ஏக்கமுற்றிருக்கும் சமயத்தில், ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

பாரிஸ் நகரத்திலேயே, மிகச் சிறந்த அழகி எனப் பேரெடுத்த துருவோ என்பவள் யூகோவிற்கு அறிமுகமானுள். துருவோ ஒரு நாடக மங்கை. இளவயதில் வறுமை வாய்ப்பட்டு, கன்னிகா மாடத்தின் ஆதரவில் வளர்ந்தவள். கன்னிகா மாடத்திலும் நாடக மேடையே சிறந்ததெனத் துணிந்து, இறுதியாய் நாடக மேடையில் தொழில் செய்யலானுள். அதனுல் மிகுந்த செல்வத்தையும் பெற்ருள். உயர்ந்த சுக போகங்களை அநுபவிக்கலானுள். பிரான்சு தேசமெங்கும் துருவோவின் கீர்த்தி ஓங்கலாயிற்று.

இந்நிலையில் தான், துருவோ கவியாசிரியரும் இயலாசிரியருமான யூகோவைச் சந்திக்கும் சந்தர்ப்பம் உண்டாயிற்று. யூகோவைச் சந்தித்ததும் துருவோவிற்கு ஒரு புதிய உணர்ச்சி உண்டாயிற்று. இருவருடைய நேசமும் நாளுக்கு நாள் முற்றியது. பின்னர் துருவோவும் யூகோவும் மனைவி-புருஷனுக வாழலானுர்கள். ஏற்கனவே தன் கணவனைப் புறக்கணித்த போச்சருக்கு, இப்போது குறைகூறவும் வழியில்லாமற் போய்விட்டது.

துருவோ, யூகோவுடன் வாழ்க்கை புரியத் தொடங்கியதும் தனது பழைய வாழ்க்கைகையை அடியோடு மாற்றிக் கொண்டாள். ஆடம்பரமும், நாடகப் பழக்க வழக்கங்களும் எங்கேயோ ஓடி மறைந்தன. சகல சுக போகங்களும் யூகோவின் பேரன்புக்கு ஒரு தூசி என்று மதிக்கலானுள்.

பிரஞ்சு தேசவாசிகள் எல்லோரும் இவ்விரு காதலர்களையும் பார்த்து வியந்தார்கள். துருவோவின் உண்மையினையும், கற்பையும் கண்டு புகழ்ந்து,மகிழ்ந்து பேசினுர்கள். விக்டர் யூகோவின் உயர்வான எண்ணங்களும் பெருந்தன்மையும் துருவோ என்னும் நடனமாதை அவருடைய நிலைமைக்கே உயர்த்திவிட்டது என்றுங் கூறத் தொடங்கினுர்கள். ஒரு காலத்தில் யூகோவின் உயிருக்கே ஆபத்து நேர்ந்த பொழுது, யூகோவைப் போலிசார் அறியாதபடி, தன்னுயிரினும் மேலாக எண்ணிக் காப்பாற்றியவள் துருவோவே.

பிற்காலத்தில் போச்சருக்கும் துருவோவின் மீது பிரியமிருந்து வந்தது. யூகோ, துருவோவுக்கு தனியாக ஒரு சிறு வீட்டை அமர்த்திக் கொடுத்தார். அதில்தான் அவள் காலமெல்லாம் வசித்து வந்தாள். சிற்சில சமயங்களில் போச்சர் துருவோவைத் தன் வீட்டிற் கழைத்தாளெனினும், யூகோவைப் பலர் ஏளனஞ் செய்யலாமென்றும், அவருக்கு அதனுல் மனம் வேறுபடலாமென்றும் எண்ணி, அழைப்பிற்கு இணங்காமலிருந்துவிட்டார்.

போச்சர் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்ட பின்பு, யூகோ துருவோவை வெளிப்படையாக மணந்துகொண்டார். துருவோ யூகோவினிடம் ஐம்பது வருடங்கட்குமேல் மனைவியிலும் அன்பு மிக்கவளாய் இருந்து, இறுதியில் இறந்துபோனுள். துருவோ இறந்த மறு ஆண்டில் யூகோவும் காலமானுர்.

வாலிபத்தில் அவர் காதலித்த போச்சர், அவரை நிராகரித்து விட்டாள். அந்த மனோவேதனையை ஈடு செய்ய வயோதிகத்தின் இறுதிக்காலம்வரை அவர் இதயஜோதியாய் விளங்கினுள் நடனமாது துருவோ. ★

அற்புத மூலிகைகள்

பி. ஜி. கிரிஜா

கீரை என்று அலட்சியப்படுத்தும் இந்த எளிய தாவர வர்க்கம் வளரும் மனித வர்க்கத்தின் 'அற்புத மூலிகை' என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

பச்சைக் கீரைகளில் இயற்கையானது தனது முக்கிய மருந்துகளைச் சேகரித்து வைத்து மானிடரின் உடல்நலத்திற்கு உதவுகிறது. அவைகளில் பலவித சத்துப் பொருள்களும், சரீர வளர்ச்சிக்கானவைகளும் அடங்கியிருக்கின்றன. உடலுக்கு நன்மை விளைவிக்கக்கூடிய உலோகப் பொருள்கள் பல, கீரைகளில் நிறைந்திருக்கின்றன. கீரையில் ஒருவித உப்பு பதார்த்தம் இருக்கின்றது அதற்கு உணவுகளிலும், ஆகாரப் பண்டங்களிலும் உள்ள புளிப்பை மாற்றி இரத்தம் சரியாக இருக்க வேண்டிய நிலைக்கு கொண்டுவரும் சக்தி இருக்கின்றது. இந்தக் குணத்தினால் குடல், சுவாசாசயம் முதலிய உறுப்புகளுக்கு ஏற்படும் வியாதிகள் நீக்கப்படுகின்றன.

கீரைகள் விலை மலிவாக எளிதில் கிடைக்கக் கூடியவைகளாக இருப்பதினால், அவைகளை அற்பமாக மதிக்கிறோம். அன்று காலையில் பறித்த பசுமையான பச்சைக் கீரையைப் பார்த்து, 'ஹும்! என்ன கீரைவேண்டி இருக்கிறது' என்று சொல்லிவிட்டு, வெகு தூரத்திலிருந்து வந்ததும், சத்தெல்லாம் செத்திருக்கும் முட்டைக்கோசை மார்க்கெட்டிலிருந்து வாங்கி வருகிறோம். பணமும் செலவு. குணமோ மிக மிகக் குறைவு. கீரைகளை பகிரங்கமாக மார்க்கெட்டில் வாங்குவது தமக்கு உகந்ததல்ல என்றுகூட நாகரீக மனிதர்கள் எண்ணி கீரைகளை உபயோகிக்காமல் இருக்கிறார்கள்!

கீரையிலே சர்க்கரைச் சத்துக் கிடையாது நீரழிவு வியாதியுள்ளவர்கள் கூடத் தாராளமாகப் பயமின்றித் தங்கள் ஆகாரத்துடன் சேர்த்து உண்ணலாம். கீரைகளை ஒழுங்காகச் சாப்பிடுவோருக்கு மூத்திர ரோகங்கள் வருவதில்லை. ஆரோக்கியத்துக்கு அவசியமான உயிர்ச் சத்துக்கள் (வைட்டமின்) கீரைகளில் மிகுதியாக இருக்கின்றன.

சாத்வீக உணவு

கீரை வகைகளை சாத்வீக உணவாக மதித்து, யோகிகளும் உபயோகித்திருக்கின்றனர். சிவஞான முனிவர் தம் சமையற்காரப் பிள்ளைக்கு இடும் கட்டளையைப் பாருங்கள்!

''சற்றே துவையல் அரை
  தம்பி ஒரு பச்சடிவை;
வற்றலேதேனும் வறுத்துவை
  குற்றமில்லை
காயமிட்டுக் கீரை கடை
  கம்மெனவே மிளகு
காயுறைக்க வைப்பாய்
  கறியே''

பெருங்காய மிட்டுக் கீரையை கடைந்துவை என்று கூறுகிறார். கீரையின் மகிமைதான் என்னே!

அற்புத மூலிகை

வெந்தயத்தையும் வெந்தயக் கீரையையும் இருபதாம் நூற்றாண்டில் உணவுப் பதார்த்த நிபுணர்கள் சாஸ்திர ஆராய்ச்சிகள் செய்து, வெந்தயத்தை சஞ்சீவி போன்ற ஓர் அபூர்வ மூலிகை என்று கூறியிருக்கின்றனர். வெந்தயமும், வெந்தயக்கீரையும் உயர்ந்த 'காட்லீவர்' ஆயிலுக்குச் சமமானதாகும். காட்லீவர் ஆயிலில் உள்ள 'மீதைல் ஏமைன்'' முதலிய சஞ்சீவி மருந்துக் கொம்

யாயே ''ஆல்கலாயிட்'' சத்துக்கள் வெந்தயத்தில் இருக்கின்றன. எலும்பை உறுதியாக்கி வளர்க்கும் ''பாஸ்பரஸ்' உப்புகளும் 'நைட்ரோஜன்' நிறைந்து சதையை வளர்க்கும் 'பேசிதி'னும் முட்டைச் சத்து போன்ற ''நூக்ளியோ ஆல்பூம'னும் காட்லிவர் ஆயிலில் இருப்பதுபோல இதிலும் இருக்கின்றன. ரத்தம் உண்டாவதற்கு ஒரு முக்கிய தாதுவாகிய இரும்பும் வெந்தயத்திலும், வெந்தயக்கீரையிலும் அதிகமிருக்கின்றன.

வெந்தயக் கீரையிலே...!

வெந்தயக் கீரை உடம்புக்கு குளிர்ச்சி தரும். மலக்கட்டை நீக்கும் தக்காளிப்பழம், வசலேக் கீரை போன்று இதிலும் ஏ, பி, சி, வைடமின்கள் இருக்கின்றன. கால்சியம், சோடியம் குளோரைன் என்னும் தாதுப் பொருள்கள் வெந்தயக் கீரையில் போதியயளவு இருக்கின்றன தேக வளர்ச்சிக்கு இந்த தாதுப் பொருள்கள் அவசியம் தேவை. ஆகவே தினந்தோறும் அல்லது வாரத்தில் மூன்று நாட்களாவது வெந்தயக் கீரையை அன்னத்துடன் உண்ண வேண்டும்.

மாதவிடாய் கிரமமாக ஆகாமலும், மாதவிடாய் ஆகும் போது அதிக நோவும் உண்டாகும் பெண்கள், வெந்தயக் கீரையும், வெந்தயத்தையும் அவசியம் உண்ண வேண்டும். தேக நலம் தேடும் ஒவ்வொருவரும் வெந்தயக் கீரையை தினசரி உணவுப் பதார்த்தங்களில் சேர்த்து புசிக்க வேண்டுவது அவசிம்.

ரசாயனப் பரீட்சை

வெந்தயத்தை ரசாயனப் பரிட்சை செய்ததில், இதில் நூறில் ஆறு பங்கு ஓர் கசப்பு எண்ணெயும், இருபத்தெட்டுப் பங்கு''மியூசிலாஜ்'' என்னும் பிசின் போன்ற வஸ்துவும், இருபத்துமூன்று பங்கு 'ஆல்பூமன்' என்னும் முட்டைச் சத்தும், மற்ற சரக்குகளுடன் இருப்பதாகத் தெரிகிறது.

முழு வெந்தயத்தை எரித்தால், நூறு பலம் வெந்தயத்திற்கு எட்டு பலம் சாம்பல் கிடைக்கும். இந்த எட்டு பலம் சாம்பலில், சரீரத்தை வளர்க்கும் 'பாஸ்பரஸ்' நாலில் ஒரு பாகம், அதாவது கால்வாசி இருக்கிறது. சாம்பலில் கால்சியம் என்னும் சுண்ணாம்பு கலந்த உப்பும் உண்டு.

வெந்தயம், வயுற்றுக்கட்டிகள், 'டிராப்ஸி' என்னும் உடம்பு விக்கம், சீதபேதி, விடா இருமல், கடுமையான வயிற்றுவலி முதலியவைகளுக்கு மிகவும் நல்ல கைகண்ட திவ்ய ஔஷதம். பசியை உண்டாக்கி. உணவை ஜீரணிக்கச் செய்து, நரம்புகளைப் பலப்படுத்துகிறது மூளைக்கு குளிர்ச்சியைத் தருகிறது. மூத்திரக்கட்டை நீக்குகிறது.

நூதன உபயோகங்கள்

வெந்தயத்தை வறுத்து. காப்பி போட்டு பருகலாம், வெந்தயக் காப்பி தேகத்திற்குப் புஷ்டியைத் தந்து, உஷ்ணத்தைப் போக்கும். வெந்தயம் ஒரு பலமும், வறுத்த முழுக் கோதுமை ஒரு பலமும் சேர்த்துப் பொடி செய்து, இந்தப் பொடியைக் காப்பி பொடிக்குப் பதில் போட்டு, பாலும் சர்க்கரையும் கலந்து பருக வேண்டும். ருசியாக இருக்கும். ஆரோக்கியமான பானமுமாகும். வெந்தயத்தை அரைத்து ''ஆரோரூட்'' முதலியவைகளுடன் கலந்து கஞ்சி செய்து உட்கொள்ளலாம். இந்தக் கஞ்சியை உட்கொள்ளுவதால், தாய்ப்பால் அதிகரிக்கும். கேரளத்திலே தாய்மார்கள் இந்த வழக்கத்தை அனுசரித்துப் பயன் பெறுகின்றனர்.

டாக்டர் புளூம் ஆராய்ச்சி

பிரசித்தி பெற்ற டாக்டர் புளூம் காட்லீவர் ஆயிலுக்குப் பதிலாக, இதை'டையாபிடீஸ்'என்னும் மதுமேகம், அதிமூத்திரம், யானைக்கால் முதலிய வாதநோய்கள், கண்டமாலே, இரத்தம் குறைந்து வெளுத்துப் போதல், மூளை முதலிய நரம்புகளின் பலஹீனம்,

ஆகிய முக்கிய நோய்களுக்கு தினம் அதிகாலையிலே சுமார் கால் பலம் வெந்தயப் பொடியைக் கஞ்சி செய்தாவது பசுவின் பாலுடன் கலந்து பருக வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

முகப்பவுடராக...

வெந்தயத்தை அரைத்துத் தலையில் தேய்த்துக் கொண்டால், மயிர் உதிர்ந்து போகாமலிருக்கும். கருப்பாயும், பளபளப்பாயும், மிருதுவாயும், அழகாயுமிருக்கும். நன்றாக வளரும். வெந்தயத்தை மாவாக்கி வைத்துக் கொண்டு முகத்தில் பவுடராகப் பூசிக் கொண்டு வந்தால் முகத்தில் பருக்கள் நீங்கி, தோல் வழவழப்பாகி, தேஜசுடன் ஜொலிக்கும்!

வெந்தய அல்வா!

வெந்தயத்தை அல்வா செய்து காலை, மாலை உண்பது நல்லது. வெந்தய அல்வா செய்வதற்கு கல் முதலியவை நீக்கி நன்றாய்ச் சுத்தப்படுத்தின 12 பலம் வெந்தயம், 48 பலம் அஸ்க்கா சர்க்கரை, பத்து பலம் பசு நெய்யும் போதுமானவை.

வெந்தயத்தை சுத்தமான குளிர்ந்த ஜலத்திலே ஒரு பாத்திரத்தில் போட்டு, நன்றாய் சாதத்திற்கு அரிசியைக் களைந்து கழுவுவது போல கழுவ வேண்டும். பிறகு அந்த ஜலத்தை வடித்துவிட்டுப் புதிதாக ஜலம் விட்டு இரண்டு மணி நேரம் வெந்தயத்தை ஊற வைக்க வேண்டும். ஊறின வெந்தயத்தை கைக்கு மிருதுவாக ஆகும் வரையில் அடுப்பிலேற்றி வேக வைக்க வேண்டும். நன்றாக வெந்ததும் அடுப்பை விட்டிறக்கி, சூடாறிக் குளிர்ந்த பிறகு அதை ஒரு கனத்த துப்பட்டிபோன்ற சவுக்கத்திலாகிலும், அழுக்கில்லாத கெட்டித் துணியிலாகிலும் போட்டு முடிச்சு கட்டவேண்டும்.

வாயகன்ற கலாய் பூசிய ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் ஜலத்தில் அமிழும்படி வைத்து, கையால் வெந்தயத்தை நன்றாய்க் கசக்கிக் கொண்டே வந்தால், வெந்தயத்திலுள்ள பிசின் போன்ற சத்தெல்லாம் பாத்திரத்திலுள்ள நீரில் இறங்கும். நீரில் மேல்கண்ட வெந்தயப்பிசின் அதிகமாகி கொஞ்சம் மொத்தை கட்டினால், பிசின் நிறைந்த ஜலத்தை இன்னொரு பாத்திரத்தில் கொட்டி விட்டு, மறுபடியும் புதிய ஜலத்தை விட்டு, முன்போலவே வெந்தயத்தில் உள்ள பிசின்போன்ற சத்தெல்லாம் வெளியே வந்து ஜலத்தில் சேரும் வரையில் முடிச்சில் உள்ள வெந்தயத்தை ஜலத்தில் கசக்கி வர வேண்டும்.

மொத்தத்தில் சுமார் 12 பலம் வெந்தயத்தை மேல் சொன்னவாறு ஜலத்தில் கசக்கிப் பிழிந்தால், சுமார் காலே அரைக்கால்படி வெந்தயச் சத்து கலந்த ஜலம் கிடைக்கும். இந்தச் சத்தான ஜலத்தில் 48 பலம் சர்க்கரையையும் போட்டுக் கலக்கி அடுப்பின்மேல் வைத்து மெள்ள குறைந்த தீயில் பாகுபோல காய்ச்ச வேண்டும். காயும்போது அடிக்கடி ஒரு கரண்டியினால் இந்தச் சர்க்கரை கலந்த வெந்தயச் சத்து, உருண்டை உருண்டையாய்க் கட்டிப்போகும். அடிப்பிடித்துக் காந்தியும் போகும் இப்படிக் கிளறிக்கொண்டு வந்தால் சுமார் ஒரு மணி நேரத்திற்குள்ளேயே அல்வா பதமாக ஒரே தளர்ந்த மொத்தையாகிக் கொண்டுவரும் அப்போது பத்து பலம் பசு நெய்யைக் கொஞ்சம், கொஞ்சமாக இந்தப் பாகில் விட்டுக் கிளறிவிட வேண்டும். நெய்யெல்லாம் பாகுடன் நன்றாய்க் கலந்து வெந்தயச் சத்து தளர்ந்த மொத்தையாகும். அப்பாகை ஆறியபின் வில்லைகளாக நறுக்கிக் கொள்ளலாம்.

இந்த வெந்தய அல்வா கொஞ்சம் கசப்பாக, வெந்தய வாசனை சிறிதுடனிருக்கும். ஆனால் இது மிகவும் ருசியாயில்லாவிடினும் தேகத்தின் கணச்சூடு முதலிய உஷ்ண வாயு நோய்களைப்போக்கி, அதிக பலத்தைத் தந்து, தாது புஷ்டியை வளர்க்கும். ★

பூச்சியைத் தின்று வளரும் பூண்டுகள்

எம். கே. ஸ்ரீனிவாஸ்

ஆயுமலர்த்தேன் வண்டு அருந்துவதும் தூய இளம் பச்சிலையைக்கீடம் அறப்பற்றி அரிப்பதும், கறையான், வெட்டுக்கிளி, பட்டுப்பூச்சி, முசுக்கட்டை முதலியன காய், கனி கந்த மூலாதிகளை அழித்து உண்பதும் பலரும் அறிந்த விஷயமாகும். ஆனால் சில பூண்டுகள் பூச்சிகளைத்தின்று வளர்கின்றன எனக் கூறுங்கால் பலருக்கு அதிசயமாகத்தான் தோன்றும். எப்படி மனிதர்களில் தமோ குணப்பிரகிருதியுள்ளவர்கள் சாக பக்ஷணிகளாகவும், மாமிச பக்ஷணிகளாகவும் இருப்பது போலவே, பின் கூறப்படும் பூண்டுகளும், விஷயவாயு, தாதுப் பொருள்கள் முதலியனவற்றை உட்கொள்வதோடு இல்லாமல் பெரும்பாலும் பூச்சி புழுக்களைத் தின்றும் கொழுத்து வளர்கின்றன.

இத்தகைய பூண்டுகள் விசேஷமாக சதுப்பு நிலங்களிலும், ஆம்பலும் நெய்தலும் போன்று குளக்கரையிலும் நீரிலுமே முளைப்பன. இவை மாமிச பக்ஷணிகளாகையால், வேறு இடங்களில் முளைக்குமாயின் அங்கு இவைகள் பிடித்துத் தின்ன, பூச்சி முதலியன கிடைக்குமா என நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. சதுப்பு நிலங்களிலும் நீர் நிலைகளிலும் கொசுகு, விட்டில், ஈ, புழு முதலிய சிறு ஜந்துக்களும், மச்சமாகிய நீர் வாழும் பிராணிகளும் ஏராளமாய்க் கிடைக்கும். இப்பூண்டுகளில் சிலவற்றை கீழே ஆராய்வோம்.

★ தாவரங்களில் கூட மாமிச பக்ஷிணி, சாகபக்ஷிணி என்ற இருவகைத் தாவரங்கள் உள்ளனவாம்! பூசாரத்தை உண்பதோடு திருப்தி கொள்ளாத இந்த ராக்ஷஸச்செடிகள், பூச்சி இனங்களை விழுங்கி உயிர் வாழும் விந்தையை, சில தாவரங்களை உதாரணங் கூறி விளக்குகிறார் இக்கட்டுரையாசிரியர். இந்த அதிசயத் தாவரங்களின் அகோரப்பசியை என்னவென்பது?

வெண்ணைப் பூண்டு : இதன் பெயருக்கு ஏற்ப கொழுப்பும், நெய்ப் பற்றும் உள்ள ஒரு பூண்டு. இதன் இலை பிசுபிசுக்கான ஒட்டுந் தன்மையுள்ள ஒரு வகைத்திரவம் கசியம் பெற்றது. இலைகளின் மேல் உட்காரும் பூச்சிகள் உடலில் இத்திரவம் ஒட்டிக்கொள்கிறது. அந்த திரவம் அவைகளின் மேல் பட்ட உடன் அவைகள் விடுவித்துக் கொள்ள முயல்கின்றன. பின்னும் அப்பூண்டுகள் அதிவிரைவாகவும் கெட்டியாகவும் திரவத்தை வெளிப்படுத்தி, பூச்சிகள் சிக்கிக் கொள்ளுமாறு செய்கின்றன. பூச்சிகள் தத்தளித்து சிறிது நேரம் கழித்து மூச்சடைத்து சாகும். பிறகு இப்பூண்டுகள் தங்களது சரீரத்தினின்று, ஜீரணிக்கத்தக்க ஒரு வகை திராவகத்தை வெளிப்படுத்தி தான் சிறைப்படுத்திய பூச்சியின் இறகு, எலும்பு இவைகளைத் தவிர, எஞ்சிய பாகங்களைக் கரைத்து பின்னர் அதனை உறிஞ்சி உட்கொள்ளும்.

கதிர்ப் பனிப்பூண்டு : இப்பூண்டின் மலர் வெள்ளை நிறமாக இருக்கும். இதன் இலைகள் செம்மயிரால் மூடப்பட்டிருக்கும். இம்மயிர்களை இலையின் கரங்கள் என்று கூறலாம். ஒவ்வொரு மயிரும் நுனியில் பனித்துளி போன்றதும் பிசுபிசுப்பானதுமான உருண்டை வடிவமுள்ள திரவம் கொண்டது. இத்திரவம் சூரிய வெப்பத்தில்

ஜொலிக்கும். இச்செடியின் நிறத்தையும் மலரின் வனப்பையும் கண்டு மயங்கியோ அல்லது நீர் வேட்கையிலோ, யாதேனும் ஒரு பூச்சி சென்று அத்திரவத்தின் மேல் உட்காரும். உட்கார்ந்தவுடன் இக்கரம் சுருண்டு கொடுத்து கிடைத்த இரையை மற்றொரு கரத்தினிடை கொடுக்க, அஃது அதனைப் பெற்றுத் தன் பக்கத்துள்ள வேறொன்றின்பால் கொடுக்கும். இவ்வாறு அதனதன் அருகில் உள்ள கரங்களிடம் சேர்ப்பிக்கக் கடைசியில் இரையானது இலையின் மத்தியில் போய்ச் சேரும். இலை கிண்ணம் போல் குழிந்து கொடுத்து, ஜீரணம் செய்யும் திராவகத்தை முதலில் கூறியது போல் வெளிப்படுத்தி, பூச்சிகளைக் கரைத்து எலும்பு, இறகு தவிர எஞ்சியவற்றை உண்டு விடும்.

துருத்திப்பூண்டு : இதற்கு வேர் கிடையாது. இஃதொரு நீர்ப் பூண்டு. இது கார் காலத்துக் கடுங் குளிரில் நீரில் அமிழ்ந்து தூங்கா நிற்கும். கோடை காலப் பொழுதினில் அது நித்திரை நீங்கி மேற்கிளம்பி, மிதந்து மீனையும் ஏனைய நீர் வாழும் ஜந்துக்களையும் கண்ணி வைத்துப் பிடித்துச் சம்பிரமமாக சாப்பிடும். இச்செடியை யொட்டிச் சிறு சுரைக் குடுக்கைகள் போன்று பைகள் பல இருக்கும்.

இப்பைகளின் வாயில்திறந்திருத்தலைக் கண்டு தமக்கு நேரிடப் போகும் பிராண சங்கடத்தைப் பற்றி கனவுகூடக் காணாத சிறுமீன் முதலிய ஜலசரங்கள் அதனுட்புகும். அப்படிச் சென்ற ஜந்துக்கள் மீண்டும் திரும்புவதில்லை! பூண்டுக்கு சரியான வேட்டைதான் !

சப்பொறிப்பூண்டு : இதன் இலைகள் கதிர்ப்பனிபூண்டின் இலைகளைப் போன்று ஒன்றை ஒன்று அடுத்து இருக்கும். இலை ஒவ்வொன்றும் இரண்டிரண்டு வட்ட மடல்களாலானவை. இவ்விரண்டு மடல்களும் முதுகு குப்புறவைத்து விரிந்து கிடக்கும் புத்தகங்கள் போன்று இருக்கும். எலி இடுக்கி போன்றே இதழ் ஒவ்வொன்றிலும் ஓரங்களில் ரம்பம் போன்ற பல பற்கள் கொண்டவை. இதழ்களின் மத்தியில் மெல்லிய மயிர்கள் முளைத்திருக்கும். இவைகளுக்குச் சுணை யென்று பெயர். இச்சுணைகள் தான் இலையின் தும்பிகளாகும். இவைகளுக்கு பரிச உணர்ச்சி அதிகம். யாதேனும் ஒரு பூச்சி இச்சுணையின் பேரில் உட்கார்ந்தால், திறந்த புத்தகம் போன்ற இலையின் இதழ்கள் அதிவிரைவில் மூட ஆரம்பிக்கும். உடனே எலியிடுக்கி போலவே இவற்றின் பற்கள் ஒன்றையொன்றை இறுக்கி நெருக்கிக் கொள்ளும். பின்னர் இதழ்களுக் கிடுக்கிலும் அவற்றினுள் அகப்பட்டுக் கொண்ட சிற்றுயிர்ப் பிராணிகளின் கடின பாகங்கள் தவிர, எஞ்சிய பாகங்கள் கரைத்து உண்ணப்பட்டதன் பின்பே, இலை மீண்டும் இரைபெற விரிந்து கொள்கின்றது.

கமண்டலப் பூண்டு : இது விசேஷமாய் உஷ்ண தேசங்களிலே தான் உற்பத்தியாவது. இதன் இலைகள் கமண்டலம் போன்று வளர்வதால் இவற்றைக் கொண்ட செடிக்கு கமண்டலப் பூண்டு எனப் பெயர் வந்தது. சில செடிகளின் கமண்டலங்கள் திருகி வளைந்திருக்கும். வேறு சிலவற்றின் கமண்டலங்கள் படர்கொடி பந்தல் போன்றுள்ள நுண்ணிய கொடியினின்றும் தொங்கி நிற்கும். இக்கமண்டலங்கள் சுமார் 9 அங்குலம் ஆழமுள்ளவையாயிருக்கும். கமண்டலம் ஒவ்வொன்றும் கொஞ்சம் குறைய நீர் கொண்டது. அதற்கு கனத்துத் தடித்த விளிம்புண்டு. அவ்விளிம்பு தேன் ததும்பப் பெற்றது. கமண்டலத்தின் உட்புறம் சிறிதும் கரடுமுரடின்றிச் சமமாக இருப்பதுடன் வழுக்கக் கூடியதாகவும் இருக்கும்.

தேனை உண்ண வரும் பூச்சிகள், இக்கமண்டலத்தில் வழுக்கி விழுந்தவுடன், கட்டைமயிர்கள் அவற்றை மூச்சடைத்துச் சாக தண்ணீரில் மூழ்த்தும். பூச்சிகள் செத்தவுடன் திரவத்தில் கரைந்து, உருமாறி செடிக்கு இரையாகும். ★

மணங்கமழ் கஸ்தூரி

தென்காசி ரஷீத்

நம் நாட்டிலுள்ள சமயநூல்கள் பலவற்றிலும் வரலாற்று ஏடுகளிலும் 'கஸ்தூரி மணங் கமழ' என்ற வார்த்தைகளைக் காணலாம். இந்நூல்களெல்லாம் பொதுவாக கஸ்தூரியைப் பற்றி பெருமையாகவே கூறுகின்றன. மருந்தாகவும் வாசனைத் திரவியமாகவும் பயன்படும் கஸ்தூரியின் வரலாற்றைக் கேட்டால் நாம் ஆச்சரியப்படுவதோடு மட்டுமல்லாமல் அசுத்தம் என்று ஒதுக்கித் தள்ளவும் துணிவோம்.

கஸ்தூரியைத் தரும் மான்கள் சந்தனம் போன்ற வாசனைத் திரவிய மரங்களின் பட்டைகளைத் தின்பதால்தான் வாசனை மிக்க கஸ்தூரி உருவாகின்றது என்று முன்னுள் பலர் கூறக் கேட்டிருக்கின்ருேம். ஆனல் இப்பொழுது அக்கூற்று நம்பிக்கைக்குப் புறம்பானது ஏனெனில் ஆண்மானிடம் மட்டுமே கஸதூரி உருவாகின்றது. பெண்மானிடம் கஸ்தூரி உருவாவதில்லே. இரண்டுமே அதே பட்டைகளைத் தின்னும்போது ஆண் மானிடம் மட்டும் அந்த வாசனைப் பட்டைகள் கஸ்தூரியாய் உருவாகி, பெண்மானிடம் மட்டிலும் அவைகள் உருகாமலிருப்பதேன்? ஆகவேதான் அப்படி நினைப்பது தவறு என்ற முடிவுக்கு வரவேண்டியதாயிற்று. இக்கஸதூரி மான்கள் நாம் நம் வீடுகளிலே வளர்க்கும் அல்லது காடுகளிலே காணும் மான்களைப் போன்றதல்ல. கனத்த தோல்களுடன் கூடிய இம்மான்கள் பார்வைக்கு சாம்பல் நிறமாகத் தென்படும். பெரும்பாலும் இவை மனித சஞ்சார மற்ற இடங்களில் வசிக்கின்றன. இவைகள் இரவிலேயே இரை தேட வருகின்றன. ஆதலால் இவைகளைப் பிடிப்பது கடினம்.

ஆண் மான்களின் பீஜகோசத்திலேயே கஸ்தூரி உருவாகின்றது. இக் கஸ்தூரி மானின் வீரியத்தை அதிகப்படுத்துகின்றது. அதன் வாசனையால் பெண்மான்களை வசீகரிக்கவும் உதவுகின்றது. கஸ்தூரிப் பையில் கஸ்தூரிக் கூழ் நிறைந்ததும் அது இறுகிப் பொடியாகின்றது. இந்தச் சமயம் மானுக்கு வேதனை அதிகமாகும். காடெங்கும் கமகமவென மணங் கமழும். இச் சமயங்களில் மான் தன் உடம்பை மரங்களில் தேய்க்க, தூளாக இருக்கும் கஸ்தூரி வெளிப்பட்டு வேதனை குறையும். இப்படி வெளியே விழும் கஸ்தூரிப் பொடியை சேகரிப்பது கடினம். அப்படிச் சேகரித்தாலும் அதிகமாகக் கிடைக்காது. ஆகவே மானை வேட்டையாடியோ அல்லது உயிருடன் பிடித்துக் கொன்ருே கஸ்தூரிப்பையை வெட்டி எடுக்கின்ருர்கள். அப்படி வெட்டி எடுக்கும் கஸ்தூரிப் பையை நன்ருக உலர வைத்து விற்பனைக்கனுப்புகின்ருர்கள்.

கஸ்தூரியை நாம் வாங்கும் பொழுது கவனித்துப் பார்த்து வாங்கவேண்டும். ஏனெனில் அளவைக் கூட்ட வேண்டும் என்பதற்காக நறுமண அத்தரிலே நல்லெண்ணை, காப்பிக் கொட்டையில் புளியங்கொட்டை, பாலில் தண்ணீர், என்று கலப்படம் செய்வதை போல. கஸ்தூரியுடன் களிமண்ணை கலப்படம் செய்து, அளவைக் கூட்டிவிடுவார்கள். விலை அதிகமானுலும் கலப்படமற்ற கஸ்தூரியைக் கொஞ்சம் வாங்கினுலும் போதும். உலகில் கிடைக்கும் கஸ்தூரியில் முக்கால் பாகம் திபெத், சீன ஆகிய நாடுகளிலிருந்தே கிடைக்கின்றது. இவை தவிர, மங்கோலியா, நேபாளம் ஆகிய இடங்களிலும் நம் நாட்டில் அஸ்ஸாமிலும் மற்றும் சில இடங்களிலும் கஸ்தூரி கிடைக்கின்றது. கஸ்தூரியிலெல்லாம் சிறந்தது நீலத்தோல் கஸ்தூரிதான் என்பது அது சம்பந்தப்பட்ட நிபுணர்களின் தீர்ப்பாகும். மேலே நாடுகளில் கஸ்தூரிக்கு நல்ல கிராக்கியுண்டு. வாசனைத் திரவியங்களுக்காகவும். மருந்துகளுக்காகவும் அதைப் பயன்படுத்துகின்றனர். ★

குமரி தரிசனம்



திருவாங்கூர் ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்து வந்த கன்னியா குமரியும் அதை யொட்டிய அகஸ்தீஸ்வரம், தேவாள், கல்குளம், விளவங்கோடு ஆகிய தாலூக்காக்களும் சென்ற முதல் தேதி முதல் தமிழ் நாட்டுடன் இணைந்து விட்டன. இக்கட்டுரை ஆசிரியர் குமரிமுனைக்கே நேரில் சென்று வந்த பின் இக்கட்டுரையை எழுதியிருக்கிறார்.

எஸ். நடராஜன். பி. ஏ

நவராத்ரி முடிந்த பின்பு வந்த பௌர்ணமி சுக்ரவாரத்தன்று மாலை கன்னியா குமரியில் "நித்தம் தவம் செய்யும் குமரி"யை தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கும் என்று கனவில்கூட நான் நினைக்கவில்லை. இந்தியாவில் கண்ணையும் கருத்தையும் கவரும் இடம் காஷ்மீர் என்று சொல்கிறார்கள். இருக்கலாம். ஆனால் மேற்கு கடற்கரையோரமாக குமரிக்கு விஜயம் செய்தால் போதும். காஷ்மீரில் காணமுடியாத இயற்கை காட்சிகளைக் கண்டு மகிழலாம். மேகம் தவழும் குன்றுகள், பச்சைப் பசேலென்ற தோட்டம் துறவுகள், பயிர்கள் மலிந்த வயல்கள் இவைகள் எல்லாம் நாட்டின் செழுமையை நம் கண்முன் படம் பிடித்துக் காட்டுகின்றன.

கண்கொள்ளாக் காட்சி

சூரிய உதயத்தையும் சூரிய அஸ்தமனத்தையும் ஒரே இடத்தில் காணவேண்டுமென்றால், அதற்கேற்ற இடம் குமரிமுனைதான். சூரிய அஸ்தமனத்தையும் சந்திரன் உதயத்தையும் ஒரே நாளில் காண வேண்டுமென்றால், சித்திரா பௌர்ணமியன்றுதான் அது சாத்தியமாகும். அன்று மாலையில் கிழக்கே சந்திரன் கொஞ்சம் கொஞ்சமாக உதயமாவதும், மேற்கில் சூரியன் மறைவதும், மறுநாள் காலையில் கிழக்கே சூரியன் சிறுகச்சிறுகத் தோன்றுவதும் மேற்கே சந்திரன் மறைவதும் காண வேண்டிய காட்சி. இதைக் காணவே ஏராளமான ஜனங்கள் அச்சமயம் இங்கே கூடுவதுண்டு.

இந்நாட்டை ஆண்ட பரத மன்னன், தன் மக்கள் ஒன்பது பேருக்கும் நாட்டைப் பிரித்துக் கொடுத்து, அரசாள ஏற்பாடு செய்தானாம். அவற்றுள் தென் பாகத்தை குமரி என்ற தன் மகளிடம் ஒப்படைத்தான். அவள் ஆட்சி நடத்திய இடமாதலால் 'குமரிநாடு' என்று பெயர் ஏற்பட்டது.

திருமணம் தடைப்பட்டது

வாணாசுரன் என்கிற அசுரனை சம்ஹரிப்பதற்கு, தேவி அக்னி குண்டத்தில் அவதரித்தாள். இவள்

தென் சமுத்திரக் கரையில் வந்து தவம் செய்யலானுள். தேவிக்கு திருமணமாவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தேவிக்கு திருமணமாகி விட்டால், அவள் சக்தி குறைந்துவிடும் என்றும் வாணுசுரவதம் நடைபெருமல் போய்விடும் என்று கருதி, நாரதர் அம்மங்கையிடம் வந்து, கண்ணில்லாத தேங்காய், கணு இல்லாத கரும்பு, காம்பில்லாத வெற்றிலே இவைகளேக் கொண்டு வரும்படி மணக்க வரும் சிவனேக்கேட்கத் தூண்டினுர். அவ்வாறே தேவியும் கேட்டாள். சிவபெருமான் அதன்படி சாமான்களே சேகரித்துக் கொண்டு வந்துகொண்டிருக்கவே, நாரதர் ஒரு கோழி ரூபம் எடுத்து கூவினுர் பொழுது விடியப் போகிறது. இனி போனுல் திருமணம் நடைபெருது என்று சிவபெருமான் சுசீந்தையிலேயே ஸ்தம்பித்து, தாணு மூர்த்தியாக நின்று விட்டார். கல்யாணம் தடைப்பட்டுவிட்டது. திருமணத்திற்காக சேகரித்து வைத்திருந்த அரிசி. பருப்பு யாவும் பலவகை மணல்களாக மாறிவிட்டன.

குமரியம்மன் மிக சக்திவாய்ந்தவள் என்கிருர்கள். இவள் மூக்கில் உள்ள ஒரு மூக்குத்திபற்றி ஒரு கதையும் கூறப்படுகிறது.

"டால்" அடிக்கும் மூக்குத்தி

பல வருஷங்களுக்கு முன்பு குமரிக்கு 20 மைல் தூரத்தில் நடு ராத்திரி வேளேயில் ஒரு கப்பல் வழி தப்பித் தடுமாறிக் கொண்டிருந்தது. கப்பல் தலேவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லே. அந்தச் சமயத்தில் பளிச்சென்று ஒரு வெளிச்சம் அடித்தது. ஆனந்தம் தாளாமல் அவன் கப்பலே அந்த வெளிச்சம் அடித்த திக்கை நோக்கிச் செலுத்தினுன். ஐயோ பாவம். கப்பல் பாறைகளில் மோதி உடைந்து விட்டது. கப்பலிலிருந்த பலர் மூழ்கி மாண்டனர். சிலர் நீந்திக்கரைசேர்ந்தனர். அவர்கள் தீபஸ்தம்பம் இருந்த இடத்தை தேடினுர்கள். ஆனுல் எதுவும் காணப்படவில்லே. அப்போது ஒருவர் திருஷ்டியில் பளிச்சென்று வெளிச்சம் விழுந்தது. அதோ அந்த வெளிச்சம் என்றுஅவர் கத்தினுராம். குமரியம்மனின் மூக்குத்தியில் அம்மனின் அருகே தொங்கும் விளக்கின் பிரதிபிம்மம் தெரிந்து, பிரகாசித்த வெளிச்சம்தான் அது. இதற்குப் பின் கோவிலின் கீழ்ப்பக்கத்துக் கதவைத் திறந்துவைக்கும் வழக்கமில்லே.

அபார அலங்காரம்

குமரியம்மனுக்கு அன்று சந்தனக் காப்பு அலங்காரம் செய்திருந்தார்கள். அந்த அலங்காரத்தை வைத்த கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன். அம்பிகையின் முகத்தில் அரும்புவது போலுள்ள புன்னகையில்யாரும் உள்ளத்தைப்



குமரிமுனை ஸ்நான கட்டம்.

பறிகொடுக்காமலிருக்க முடியாது. மடி, ஆசாரம் இவைகளுக்கு அங்கு குறைவே இல்லை. குத்துவிளக்குகள் கணக்கில்லாமல் ஏற்றப்பட்டிருக்கின்றன இங்குள்ள சில கோவில்களில் உள்ளதைப் போல குத்துவிளக்குகள் அழுக்கடைந்து இராமல், ஒவ்வொன்றும் பளிச்சென்று காணப்படுகிறது. குருக்கள் மூலஸ்தானப் படியைத்தாண்டி வெளியே வருவதில்லை. குங்குமம், சந்தனம் பிரசாதம் ஒரு சிறு வாழையிலை அல்லது வெற்றிலையில் வைத்து தரப்படுகின்றன. படியில் இருந்து கொண்டு வீசி எறிகிறார். இது எங்களுடன் வந்த சிலருக்கு கோபத்தைக்கூட ஏற்படுத்தியது. இம்மாதிரி எல்லாம் நடந்து கொள்வதால்தான். நாஸ்திகம் தலைகாட்ட ஆரம்பிக்கிறதாக என் நண்பர் மனத்தாங்கல்பட ஆரம்பித்தார். காலம் மாறிவிட்டது, இதை அனுசரித்து கோயில் குருக்கள்களும் நடந்துகொள்ள வேண்டும். பிரசாதத்தை அப்படி வீசி எறிந்த அவர். நம்மிடம் பணம் வாங்கும் போது மிகப் பணிவாக கையை நீட்டுகிறார்!

ஸ்நான கட்டம்

அம்மன் கிழக்கு நோக்கிதான் நிற்கிறாள். கோயிலின் வெகு அருகில் ஸ்நான கட்டம் இருக்கிறது. பாறைகள் கடலில் நடு நடுவே காணப்படுவதால் ஒவ்வொரு ஸ்நான கட்டமும் சிறுசிறு குளங்கள் மாதிரி காணப்படுகிறது. அன்று இங்கு இடுப்பளவு தண்ணீர்கூட இல்லை. ஆனால் சில சமயங்களில் இங்கு தண்ணீர் மிக அதிகமாக இருக்குமாம். அப்போது விபத்துகள் நேரிடாமலிருப்பதற்காக இரும்புக் கம்பிகள் போட்டு சங்கிலிகளையும் பிணைத்திருக்கிறார்கள். கிழக்கு, மேற்கு, தெற்கு இம்மூன்று பகுதிகளிலிருந்தும் ஜலம் தனித்தனியே வந்து, இந்த ஸ்நான கட்டத்தில் சந்திப்பதைப் பார்க்கலாம். வெகு சமீபமாகவுள்ள பெரும்பாறை ஒன்றின்மீது ஏறிப்பார்க்கலாம். அங்கிருந்து இந்தியாவின் தென் கோடியை நன்றாகப் பார்க்கலாம்.

விவேகானந்தா பாறை

இப்பாறைகளுக்கு இரண்டு பர்லாங்கு தூரத்தில் ஒரு பாறைத்தீவு இருக்கிறது. இதற்கு விவேகா

ணத்தா பாறை என்று பெயர். ஸ்வாமி விவேகானந்தர் அமெரிக்கா சென்று திரும்பிய பின் இந்தியா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்தார். குமரி முனைக்கு அவர் வந்தபோது இந்தப் பாறை அவர் கண்ணில் பட்டது. அங்கு சென்று நிம்மதியாக யோக நிஷ்டை இருக்கலாமே என்று அவருக்குத் தோன்றியிருக்கவேண்டும். நீந்திச்சென்று அங்கு அவர் சில காலம் தங்கி இருந்ததாகக் கூறப்படுகிறது. இதை அடைய படகுகள் இருக்கின்றன. உல்லாசமாக இங்கு சிலர் சென்று வருகின்றனர்.

கரையோரமாக நடந்து சென்றால் பல நிற மணல்கள் காணப்படுகின்றன. இங்கிருந்து நிறைய மணல் எடுத்தால் தீர்வை செலுத்த வேண்டுமாம். இம்மணல் தங்கத்திற்கு மெருகு போட உதவுகிறதாம்.

கன்னியாகுமரியில் சர்க்கார் விடுதிகள் கட்டி, பிரயாணிகளுக்கு வசதி செய்திருக்கிறார்கள். அக்கட்டிடங்களைக் காற்றோட்டமாக கட்டியிருக்கலாமே என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

நிலம் முடிவடையும் இடத்தில் காந்தி ஸ்மரக் நிதி ஸ்தாபனத்தினர், மகாத்மா காந்தியின் ஞாபகார்த்த கட்டிடம் ஒன்றைக் கட்டியிருக்கிறார்கள் கட்டிடம் புத்த, ஹிந்து, முஸ்லிம் பாணியில் அமைக்கப்பட்டிருக்கிறது.

கடல் கொண்ட கதை

குமரி ஒரு முனையல்ல; முன் காலத்தில் ஒரு நதி என்கிறார்கள் இளம்பூரணர், பேராசிரியர் முதலான உரையாசிரியர்கள். பாண்டிய நாட்டின் தென் பகுதியில் ஓடிக் கொண்டிருந்த குமரி ஆறு தானும் அது. தமிழ்நாடு முன் காலத்தில் குமரியோடு முடிவு பெறவில்லையாம். இப்போதுள்ள குமரிக்குத் தெற்கே குமரியாறும் அதற்கும் தெற்கே நிலப்பகுதியும் இருந்ததாகத் தெரிகிறது. தொல்காப்பியத்தில் தமிழகத்திற்கு கிழக்கும் மேற்கும் எல்லை கூறப் படவில்லை. பிறநாடுகள் இல்லாமல் அங்கு கடல் இருந்ததுதான் காரணம். தெற்கே வேறுநாடு இருந்ததாம். அதனால்தான் குமரியாறு எல்லையாகக் கூறப்பட்டிருக்கவேண்டும் என்பது இளம்பூரணர் கருத்து. அந்த தமிழ் நாட்டின் பகுதியையும் குமரியாற்றையும் அதற்கு அப்பாலிருந்த பிற நாட்டையும் கடல் கொண்டது. அக்காலத்தில் பாண்டிய மன்னர்களுடைய தலைநகரமாயிருந்த கபாடபுரமும் கடலில் மூழ்கிவிட்டது.

குமரி, பாண்டிய நாட்டைச் சேர்ந்தது

குமரி பாண்டிய நாட்டைச் சேர்ந்ததாக இருந்திருக்கிறது. இந்தக் குமரியம்மனின் தோளில் பின் வரும் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறதாம். அதில் ''ராஜராஜ பாண்டி நாட்டு உத்தம சோழ வளநாட்டு புறத்தாய நாட்டுக் குமரி கன்னிய பகவதியார்'' என்று காணப்படுகிறதாம். புறத்தாயநாடு என்பது வாரண்





வாசி நாடு என்பதை குறிக்கும். இந்தப்பெயர் இரண்டாவது குலோத்துங்க சோழனுடைய பாட்டனர் பெயரால் ஏற்பட்ட பெயராகும்.

குமரியின் கோவிலிலும் சற்று வடக்கிலுள்ள குருநாதேசுவரர் கோவிலிலும் உள்ள கல்வெட்டு



களும் பெரும்பாலும் தமிழில் உள்ளவைகளே. ராஜராஜ சோழன், ராஜேந்திரன் ஆகிய சோழ மன்னர்களின் கல்வெட்டு களும் இங்கு காணப்படுகின்றன.

பராந்திர பாண்டியனின் கல்வெட்டு ஒன்றில், 'மன்னவர் தம் குலதெய்வம்' என்று குமரி யம்மனைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

''குமரிச்சேர்ப்பன் கோப்பாண்டியனே'' என்பது சேந்தன் திவாகரம். இத்திவாகரம் தமிழ் நிகண்டுகளுள் மிகப் பழமையானது. இதன் காலம் கி. பி. எட்டாவது நூற்றுண்டின் நடுப்பகுதி யென்பது அறிஞர்களின் முடிவு.

இந்தக் கல்வெட்டுகளாலும் விளவங்கோட்டு தாலூக்காவிலுள்ள முன்சிறை பார்த்திபசேகரபுரம் செப்பேடுகளாலும் தென் திருவாங்கூரின் இந்த நாறு தாலூக்காக்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்ததாகவே இருந்திருக்கின்றன. என்பது நன்கு வெளியாகிறது. இப்போது அந்தப் பிரதேசம் மீண்டும் தமிழ் நாட்டுடன் இணைந்துவிட்டது.

சுசீந்திரம்

ரஸ்தாவின் மிக அருகிலேயே ஒரு தெப்பக்குளமும் கோவிலும் இருக்கின்றன. அகலிகையை இந்திரன் ஏமாற்றி, அவள் கற்பை சூறையாடியதினுல் ஏற்பட்ட சாபத்தை நீக்கிக்கொண்ட புண்ணிய ஸ்தலம் இந்த சுசீந்திரம் தானும். இந்திரன் இன்றும் அனுதினமும் இரவில் வந்து, பிரும்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவரையும் பூஜித்துச் செல்வதாகச் சொல்லுகிறார்கள்.

அநசூயையின் கற்பின் மகிமையைச் சோதித்த இடமும் இதுவே தானும். நிர்வாணமாக பிக்ஷைபோட வேண்டுமென்று கேட்ட மும்மூர்த்திகளை, பச்சைக் குழந்தைகளாகமாற்றி, ஸ்தன்னிய பானம் அளித்த அனசூயையின்

சரித்திரம் பலரும் அறிந்தது. இந்த ஊரில் பிரும்மாவிற்கு சன்னதி இருக்கிறது இந்தியா முழுவதில் பிரம்மாவுக்குசன்னதி உள்ள இடம் இரண்டு அல்லது மூன்றுதான் ஏனெனில், அடிமுடி தேடியபோது சிவனின் முடியை அலங்கரித்த தாழம்பூவைப் பார்த்துவிட்டதால், தானே முடியைக் கண்டுவிட்டதாக பொய் கூறியதால் ஒரு தலையை பிரும்மா இழக்க நேர்ந்ததுடன், அவருக்காக தனிக் கோவில்களே இல்லாமல் போகவும் நேர்ந்து விட்டது.

பிரும்மாண்ட ஹனுமார் விக்ரகம்

சுசீந்திரம் கோவிலில் பிரும்மாண்ட ஹனுமார் விக்ரகம் இருக்கிறது. சுமார் 20 அடிக்கு மேல் உயரமிருக்கும். இந்த ஊர்கோபுரத்தை முன்பிருந்த திருவாங்கூர் மன்னர் செப்பனிட்டபோது மண்ணுக்குள்ளிருந்து இது அகப்பட்டதாம் மிக அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள் அமைந்தது இந்த விக்ரகம்.

சுசீந்திரத்திலுள்ள ஸ்வாமியின் பெயர் ஸ்தாணுமாலயன். ஸ்தாணு (சிவன்) மால் (விஷ்ணு) அயன் (பிரும்மா).

இந்திரன் இரவில் பூஜை செய்வது காரணமாக, ராத்திரி ஒரு கால பூஜையோடு கோவிலை மூடி விடுகிறார்கள். சுசீந்திரம் கோவில் கோபுரத்தின் மாடியிலுள்ள உட்புறச் சுவர்களில் சித்திரங்கள் தீட்டப்பட்டிருக்கின்றனவாம். அந்த சித்திரங்களின் வர்ணங்கள் இன்னும் மங்காமலேயே இருக்கின்றனவாம். அங்கு ஏறிப்பார்க்க எங்களுக்கு அவகாசமில்லை இப்பிரும்மாண்டமான கோயிலில் எந்தந்த இடங்களைப் பார்க்க வேண்டும் என்பதை காட்டக்கூட ஆட்கள் கிடையாது.

ஸ்திரீ கணேசர் (கணேசனி) இக்கோவிலின் ஒரு தூணில் காட்சி அளிக்கிறார். இம்மாதிரி உருவம் மிகமிக அபூர்வம்.

நாதம் எழுப்பும் கல்தூண்கள்

அம்மன் சன்னிதானத்தில் நான்கு புறங்களிலும் பல அழகான வேலைப்பாடமைந்த கல் தூண்கள் காணப்படுகின்றன. இவைகளில் இருதொகுதிகளில்

அனந்த பத்மநாபஸ்வாமி கோயில்



தலா 33 தூண்களும், மற்ற இரு தொகுதிகளில் தலா 24 தூண் களும் உள்ளன. தூண் அருகில் காதை வைத்துக் கொண்டு ஒரு தட்டுதட்டினுல் என்ன மாதிரி நாதம் எழுகிறது தெரியுமா? ஒன்றில் வீணையின் நாதம், மற் ெறான்றில் மிருதங்க நாதம், சில வற்றைத் தட்டினுல் ஜலதரங்கம் வாசிக்கப் படுவதுபோல கேட் கிறது. இந்த ஜால வித்தைகளைச் செய்த சிற்பிகள் இப்போது இல்லை. அவர்கள் யார் என்பதும் நமக்குத் தெரியாது. இந்த இடத்தில் இம் மாதிரி அபூர்வ தூண்கள் இருக் கின்றன எனருவது ஒரு போர்டு போட்டிருக்கிருர்களா? அதுவும் இல்லை. எங்கேயோ படித்திருந்த தால், எங்கே இருக்கிறது அந்தத் தூண்கள் என்று விசாரித்துக் கண்டு பிடித்தோம்.

ஒவ்வொரு சிற்பமும் நல்ல ஆகிருதியுடன் சுடியாக இருக் கிறது ஒவ்வொரு சிற்பத்திலும் தான் எவ்வளவு நகாசு வேலைகள்! கல், சிற்பி சொன்னபடி யெல்லாம் கேட்டிருக்கிறது. மண்டபங்களின் ஒவ்வொரு தூண்களில் தீப நாச்சி யார் உருவம் காணப்படுகிறது. சுருங்கக்கூறின் அந்தக் கோயிலை விட்டு வெளிவரவே மனசு இல்லை. இக்கோவிலில் அநேக தமிழ் கல் வெட்டுகள் உள்ளன.

போர்த்துகீஸியர் உதைபட்ட வரலாறு

16-வது நூற்றாண்டில் போர்த்து கீஸியர், சுசீந்திரம்கன்னியாகுமரி, திருப்பதிசாரம் முதலிய கோயில் களைக் கொள்ளையிட்டனர். சுசீந்தி ரத்திலும் கன்னியா குமரியிலும் விலைமதிப்பிட முடியாத வைரங் கள் நகைகள் ஏராளமாக உண்டு என்பதைக் கேள்விப் பட்டனர். கன்னியாகுமரியின் மூக்கிலுள்ள மூக்குப் பொட்டும் கிரீடத்திலுள்ள வைரங்களும் கப்பலோட்டிகளுக்கு அபாயத்தைத் தவிர்க்க வைக்கப் படும் கடற்கரை விளக்குபோல் அவ்வளவு பிரகாசமாக இருக்கும் என்பதையும் கேள்விப்பட்டனர்.

பல கோயில்களில் கொள்ளை யிட்டபின், போர்த்துகீஸியர் சுசீந் திரத்திற்கு வந்தனர். இதை முன்ன தாக அறிந்த விஜயநகரப் படை தளபதி, வித்தல் தலைமையில் ஆரல் வாய் மொழிக் கணவாய் வழியாக நாஞ்சில் நாட்டை அடைந்து, சுசீந்திரம் அருகில் காத்திருந்தது. கி. பி. 1543-ம் வருஷம் டிசம்பர் மாதம் போர்த்துகீஸியப்படையை இந்தியப்படை முறியடித்தது.

கடலில் நங்கூர மிட்டிருந்த போர்த்துகீஸியக் கப்பல்களில் செம்படவர்கள் புகுந்து கப்பல் காப்பவர்களைக் கொன்று கப்பலில் இருந்த பொருள்களை (போர்த்து கீசியர் வேறு கோவில்களில் கொள்ளையடித்தது) மீட்ட னர். இந்தப் படுதோல்விக்குப் பிறகு இந்துமதக் கோவில்களில் போர்த்துகீசியர் புகுந்து கொள்ளை படிப்பது அடியோடு நின்று விட்டது.

சுசீந்திரம், குமரி ஆகிய இடங் களிலும் அக்கம் பக்கங்களிலும் பாடப்படும் பாடல்களிலும், விதவி யரின் ஆட்டங்களிலும் அல்லியக் கூத்திலும் விஜயநகர இளவரசர் வித்தலின் வீர நிகழ்ச்சிகள் குறிப் பிடப் படுகின்றன.

நாகர்கோவில்

புதிதாக அமைந்துள்ள குமரி ஜில்லாவிற்கு தலைமை ஸ்தலமாக நாகர்கோவில் ஏற்படுத்தப்பட்டுள் ளது. இங்குள்ள கோயிலில் நாக லிங்கம் தண்ணீருள் தலைகாட்டி நிற்கிறது. இதேபோல் உள்ள மற்ெறாரு இடம் ஜம்புகேஸ்வரம் என்ற திருவானைக்காவல். இங்கு பார்க்கவேண்டியவை விசேஷமாக எதுவும் இல்லை.

இக்கோவில்கள் எல்லா வற்றிலுமே, மேலாடை, ஷர்ட், பனியன், தோல்பெல்ட் எதையுமே போட்டுக்கொண்டு போகக் கூடாது. இந்த நியதி மிகக் கட்டுப் பாடாக அனுஷ்டிக்கப்படுகிறது.

தமிழ் நாட்டுடன் சேர்ந்துள்ள இந்தக் குமரி ஜில்லாவில் அதிக உணவு உற்பத்தி செய்ய வசதியும், மனேஸைட் மணல்களும் ஏராள மாகக் கிடைக்கின்றன.

நியாயம் வழங்கிய நீதிஸ்தலம்

சுசீந்திரம் கோயில் ஒரு காலத்தில் நீதி ஸ்தலமாகவும் விளங்கியிருக்கிறது. ஸ்வாமியின் சன்னிதியில் ஒரு பெரிய தாமிர பாத்திரத்தில் எண்ணெய் கொதிக்கவிடப் படுமாம். குற்றம் சாட்டப்பட்டவன் தன் கையிலுள்ள ஒரு விரலை மும்முறை இந்தக் கொதிக்கும் எண்ணெக்குள் விடவேண்டும். மூன்று நாட்கள் கழித்தும் அந்த விரல் பாதிக்கப்படவில்லை என்றால் அவன் நிரபராதி என்று தீர்மானிக்கப்படுவான். அக்காலத்தில் குற்றம் செய்தவன்தான் தண்டிக்கப்படுவான். நிரபராதியை எப்படியும் கடவுள் தப்புவிப்பார் என்ற எண்ணம் இருந்தது. ஆனால் இன்று அந்த நம்பிக்கை இல்லையே!

ஆலப்புழை, அம்பலப்புழை வழியாக திருவனந்தபுரம் வந்து, அங்கிருந்து குமரி செல்லும்போது அற்புதமான இயற்கைக் காட்சிகளைக் காணலாம். நாகர்கோவிலுக்குப் பிறகு ரஸ்தாக்கள் மேற்குக் கரையோரமாக ஒன்றும் கிழக்கு கரையோரமாக ஒன்றுமாகப் பிரிகின்றன.

சேரர் ஆண்ட இடம்

சுமார் 200 வருஷங்களுக்கு முன் தோவளை, அகஸ்தீஸ்வரம் விளவன்கோடு, நெய்யாற்றங் கரை இவை வைநாடு என்று அழைக்கப்பட்டு வந்தன. சேர மன்னர்களின் சந்ததியர் இதை ஆண்டுவந்தனர். அப்போது தமிழர்கள் முக்கியமான பதவியில் இருந்துவந்தனர் என்பதுடன் இலங்கை, சுமத்ரா, ஜாவா முதலிய நாடுகளுக்கு வை நாட்டு மன்னர் மன்னர்கள் அனுப்பிய தூதர்கள் தமிழரே. நாகர்கோவிலைச்சேர்ந்த கோட்டாறு, சோழநாட்டின் ராணுவப் பாசறையாக இருந்த தென்று சரித்திரத்திலிருந்து தெரிகிறது.

பத்மநாபஸ்வாமி ஆலயம்

எப்படி ஸ்ரீரங்கத்தை யொட்டி சமயபுரம் மாரியம்மன் இருக்கிறாளோ, அதே போல திருவனந்தபுரம் பத்மநாபஸ்வாமிக்கு 50 மைல் தூரத்தில் குமரியம்மன் இருக்கிறாள். ஆகவே அந்த பத்மநாபஸ்வாமி தரிசனமும் செய்யும் வாய்ப்பு கிடைத்தது.

கோயில் மிக பிரும்மாண்டமானது. ஆனால் ஒரு மின்சார விளக்குகூட இல்லை; எண்ணெய் திரி போட்ட விளக்குகள் தான் இங்கொன்றும் அங்கொன்றுமாக மினுக் மினுக்கென்று எரிந்தன. வாசலிலேயே துப்பாக்கி பிடித்த சிப்பாய்கள் பாராக்கொடுக்கிறார்கள். எப்பேர்ப்பட்ட விலையுயர்ந்த பொருள்களையும் வெளியில் விட்டு உள்ளே செல்லலாம்.

திருவனந்தபுரம் கோயிலில் சிற்ப விக்ரகங்களுக்கு குறைவில்லை. ரதி மன்மதன், துர்க்கை, கோபால கிருஷ்ணன் இம்மாதிரி பல சிலைகள் நிற்கின்றன. ஆனால் வெளிச்சம் இல்லாதது காரணமாக, அவை பார்க்க பயங்கரமாக இருந்தனவேயொழிய, சிற்பத்தை ரசித்துப் பார்க்க முடியவில்லை. அப்போது தான் பகலிலேயே இக்கோவிலுக்கு வராமல் போனோமே என்று வருந்த நேரிட்டது.

பத்மநாப ஸ்வாமியின் தலை, உடல், பாதம் இவைகளை மூன்று

வாசல்கள் வழியே தரிசித்தேன் இதற்காக ஏற்பட்ட மண்டபம் ஒரேகல்லினுல் ஆனதாம். கிருஷ்ண னுக்கும் சாஸ்தாவுக்கும் இங்கு தனி சன்னிதிகள் இருக்கின்றன. தேங்காயை உடைத்து, அம்மூடி களில் எண்ணெய் விட்டு விளக் கேற்றி வைக்கிருர்கள் சாஸ்தா வுக்கு இது மிகவும் பிடித்தமான தாம்.

திருவனந்தபுரக்கோயிலில் மிகப் பெரிய கருடன் ஒருபுறம் காட்சி யளிக்கின்ருர். ஹனுமாரிடம் என்ன பயமோ? அவரைச் சுற்றி பலத்த இரும்புக்கூண்டு ஏற்படுத்தி. பெரிய பூட்டு ஒன்று பூட்டியிருக் கிருர்கள். என்னதான் பார்க்க முயன்றும் இருட்டில் ஹனுமார் தெரியவில்லை. அங்கேயே இருப் பவர்கள் என்ருவது ஒருநாள்

குமரிக் கோபுர வாயில்

இந்த ஹனுமாரைத் தரிசிக்கலாம். ஆனல் எவ்வளவோ மைல்களைக் கடந்து வந்திருப்பவர்கள் இவரைப் பார்க்க விரும்பினுல் அதற்கு இந்தத் தடையை ஏற் படுத்தலாமா?

திருவனந்தபுரம் கோயில் கோபுரம் இப்போது பழுது பார்க்கப்பட்டு வருகிறது. மகா ராஜா மார்த்தாண்டவர்மாவினுல் தான் இந்த கோபுரம் 200 வருஷங் களுக்கு முன் உருவாயிற்று.

இக்கோபுரத்தின் கீழுள்ள மண்டபத்தில் மார்த்தாண்டவர் மன் திருவிதாங்கூர் மன்னராக முடி சூட்டப்பட்டார். இந்த மண்ட பத்தில்தான் திருவாங்கூர் மன்ன ரும் கொச்சி மன்னரும் சந்தித்து ஒருவருக்கொருவர் எதிர்த்துப் போர் செய்வதில்லை என்று முடிவு செய்தனர். தஞ்சாவூரின் பிரசித்தி பெற்ற வித்வானை வடிவேலுவை திருவாங்கூர் மனனர் இந்த மண்ட பதில்தான் கௌரவித்துப்பாராட் டினுர். இக்கோபுரக் கதவு சாதாரண நாட்களில் திறக்கப்படு வதில்லை. திருவிழா நாட்களில் மட்டுமே திறந்து வைக்கப்படு வது வழக்கம்.

தமிழகத்துடன் இணைந்துள்ள பகுதியிலுள்ள குமரி இல்லாக் கோவில்களில் சிவ விஷ்ணு பேதம் எதுவும் காண முடியாது. சிவன் கோயிலிலேயே விஷ்ணுவுக்கும் சன்னிதிகள் இருக்கின்றன.

குமரிமுனையைப்பற்றி கடைசி யாக ஒரு வார்த்தை. மூன்று சமுத் திரங்களும் பொங்கி எழுந்தால், ஒரு நொடியில் அங்குள்ள நிலப் பரப்பு கடலில் மூழ்கிவிடும். ஆனல் ஏதோ மாய சக்திக்கு கட்டுப் பட்டுள்ளது போல, மூன்று சமுத் திரங்களும் காட்சி யளிக்கின்றன. இம்மூன்று சமுத்திரங்களையும் கட்டுப்படுத்துவது என்ன? நாஸ் திக வாதிகள் குமரிமுனை சென்று இதைப்பற்றிச் சிந்திக்கட்டும். அவர்கள் அகக் கண்கள் திறந்து, உண்மையை உணருவார்கள். ★



நமது நிருபர்

சுவாமிநாதன்

சமீப காலத்தில் ஜனங்களின் ஆவல் ஒரு விஷயத்தில் வெகு தீவிரமாக ஈடுபட்டிருந்தது. அதை அறியும் பொருட்டு தினசரி பத்திரிகைகளை வெகு ஆவலுடன் புரட்டினார்கள். கடைசியாக ஒரு நாள் எதிர்பார்த்ததை அறிந்து கொண்டார்கள். யார்? — தமிழ்நாட்டு மக்கள் தான்.

என்ன அப்படிப்பட்ட விஷயம் என்று கேட்கிறீர்களல்லவா?

வேறொன்றுமில்லை — தட்சிணப் பிரதேசம் பற்றிய சர்ச்சையும், அதுபற்றி எதிர்பார்த்துக் கொண்டிருந்தவரின் வாக்குமூலமான அபிப்பிராய முடிவும்தான். கனம் பிரதமர் காமராஜ் நாடார் அவர்கள், வெகு நாள் வரை தட்சிணப் பிரதேசம் பற்றிய பேச்சை எடுக்கவேயில்லை. சென்னை நகரில் எவ்வளவோ கூட்டங்கள் நடந்தன. பின்னர் அசெம்பிளிக் கூட்டமும் நடந்தது. அப்போதாவது பிரதமரின் முடிவு என்னவாயிருக்கும் என்று தெரிந்து விடுமென வெகுவான ஜனங்கள் எதிர்பார்த்தார்கள். செய்தி நிருபர்களும் எதிர்பார்த்தார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை.

கடைசியில், காமராஜ் அவர்கள் தட்சிணப் பிரதேசம் பற்றிய தன் கருத்தையும் முடிவையும் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில், சுற்றுப் பிரயாணம் செய்கையில் வெளியிட்டார். அதுவும் ஒரு சிறிய கிராமத்தில்!

அங்கிருந்து புறப்பட்ட செய்தி, பின்னர் தினசரிகளிலும் இதர பத்திரிகைகளிலும் பிரதான இடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்டது. சென்னைப் பிரதமரின் செய்தியறிவிப்பை, மக்களுக்கு எடுத்துச் சொன்னவர், ஒரு தினசரியில் வேலை பார்க்கும் நிருபர்தான். செய்தி முடிவில் வரும் [ந. நி] 'நமது நிருபர்'தான்.

ஆம், இந்தச் செய்தி நிருபர்கள், சில சமயங்களில், செய்தியைச் சேகரித்து தத்தம் பத்திரிகைகளில் முதன் முதலாக வெளியிட வேண்டுமென்று போட்டி போடுவார்கள். அப்படி சில நிருபர்கள் செய்த விசித்திரங்களைப் பாருங்கள். இவ்விபரங்கள் பிரபல ஆங்கில வாரப் பதிப்பில் வெளியானவைதான்.

பிரிட்டிஷார் இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த சமயத்தில், வெகு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அரசியல் நிகழ்ச்சி நடந்தது. 'மகாத்மா காந்தியும், ஜனாப் ஜின்னாவும் சந்திப்பார்கள்' என்ற செய்தி முதன் முதலில் ஒரு பிரபல முதலாளி நடத்தும் பத்திரிகையில் வெளியாயிற்று. சற்றும் எதிர்பாராத இந்தப் புதிய தகவலை

மற்ற இந்திய தினசரிகளும் வெளி யிட்டன. பின்னர் காந்திஜி—ஜின்னு சந்திப்பு ஊர்ஜிதமான செய்திதான் என புதுடில்லி வட்டாரங்கள் ஒப்புக்கொண்டன.

காந்திஜியும் ஜின்னுவும் சந்திக்கப் போகிருர்களென்ற விஷயத்தை, காந்தியும் ஜின்னுவும் பரஸ்பரம் கடிதம் எழுதிக்கொண்டிருக்கையிலேயே கண்டுவிட்ட நிருபர்—அச்சமயம் அவர் ஒரு தொண்டராக பணியாற்றிக் கொண்டிருந்தார் – தான் அறிந்த அதை வெளியிட்டு விட்டார்!

இப்படி முதன் முதல் இரு பெரும் தலைவர்கள் சந்திப்பை வெளியிட்ட நிருபருக்கு என்ன கிடைத்தது தெரியுமா? — 'டிஸ்மிஸ் உத்திரவு! வேலை செய்த பத்திரிகை காரியாலயம், நிர்வாகிகளின் உத்திரவுப்படி அப்படிச் செய்தது!... நிர்வாகிகள் சில 'பெரியவர்களின்' பேச்சைக் கேட்டதே காரணம்!

இதே மாதிரி எல்லைப்புற காந்தியென அழைக்கப்படும். அதற்கு கபார்கான். எல்லை மகாண கிளர்ச்சி நடைபெறுகையில், சிறையிலடைக்கப்பட்டு விட்டார். பட்டாணியர் அதற்காகப் பெருங் கிளர்ச்சி செய்தபோது, ஒரு செய்தி நிருபர், ஒரு தந்திரம் செய்தார். சிறைக்கைதி டாக்டர் மாதிரி தன்னை மாற்றிக்கொண்டு, பட்டாணியர்களின் தலைவரான கபார்கானைக் கண்டு, மக்களுக்கு என்ன செய்தி விடுவிக்கிறீர்கள் என்று கேட்டறிந்தார். ஏற்கனவே பத்திரிகைகளில் அவர் செய்திகள் இருட்டடிப்பு நடத்தப் பட்டிருக்கையில், திடீரென அவர் பத்திரிகைச் செய்தி விடுவித்ததும், அரசியல் வட்டாரங்கள் அதிர்ச்சி பெற்றன.

இவை யெல்லாவற்றையும் விட ஐக்கிய அமெரிக்காவில், சில ருசிகரமான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

நியூயார்க்கிலிருந்து பத்திரிகைப் பிரதிநிதிகளடங்கிய ஒரு ஸ்பெஷல் ரயில் கிளம்பிற்று. முக்கியத்துவம் பெற விருக்கும் வெளிநாட்டின் மந்திரி ஒரு கூட்டம் கூட்டியிருந்தார். கூட்டம் நியூயார்க்கிலிருந்து எழுபத்தைந்து மைல்களுக்கப்பால் நடக்கவிருந்தது.

கூட்டம் முடிந்து, செய்தி நிருபர்கள் விழுந்தடித்துக்கொண்டு ரயிலைப் பிடித்து ஏறிக்கொண்டு விட்டனர். அவ்வளவு பேரும் நியூயார்க் சென்று தங்கள் செய்தி சேகரிப்பைப் பத்திரிகைகளில் வெளியிட்டாகவேண்டும். ஆனல் ஒரு நிருபரின் அவசரத்தைக் கேளுங்கள். ஓடுகிற ரயில் வண்டியிலிருந்தவாறு செய்தியை எழுதி அதை தந்தியடிக்க வேண்டி, போதுமான டாலரையும், மேற்கொண்டும் சில டாலரும் சேர்த்து ஒரு ரயில்வே ஸ்டேஷனில் எறிந்து விட்டார். "இதை எடுத்துப் பார்க்கும் கண்ணியவான், உடனே அருகிலுள்ள தந்தி நிலையத்தில் சேர்த்த பின்னர், மீதியுள்ள டாலரை அவரே எடுத்துக் கொள்ளவும்!" அவ்வளவுதான்! நிருபர்கள் நியூயார்க்கிற்கு திரும்பும்போது, அந்த ஒரு பிரபல தினசரி, மாலைப் பதிப்பில் செய்தியைப் போட்டு, விற்பனைக்கு அனுப்பி விட்டது! நிருபர்கள் தம் கூட்டத்தினருடன் அதற்குள் 'செய்தி வெளியாகி விட்டதா?' என்று சந்தேகமுடன் கூட்டாளிகளைக் கவனித்தனர். காரணமான நபர் முன்னமே நழுவி விட்டிருந்தார்!

இன்னெரு பத்திரிகை நிருபரான ஒரு பெண்மணியின் சாகஸம் நம்மைத் திடுக்கிட வைக்கிறது. ஒரு வெளிநாட்டுப் பிரமுகர் வந்திருந்தார். அவர் செய்தி நிருபர்களைக் கூட்டிப் பேசினர். அம் மகாநாட்டிற்கு தம் பத்திரிகை சார்பாக அந்தப் பெண் நிருபர் வந்திருந்தாள். ஆம், வெளியூரிலிருந்துதான்.

செய்தி நிருபர்கள் மகாநாடு முடிந்து, நிருபர்கள் அவசர அவசரமாக தபால் நிலையங்களை நோக்கி விரைந்தார்கள். செய்திகளைத் தந்தி மூலம் தெரிவித்தார்.

அந்த நிருபர்களுடன் ஒன்ருக வந்த பெண் நிருபர், தந்தி கொடுக்க விரும்பாது, 92 போனில் பத்திரிகையுடன் தொடர்பு கொண்டு செய்தியைத் தெரிவிக்க விரும்பினுள். உடனே டெலிபோன் இருக்கும் பக்கம் வந்தாள்.

வந்த செய்தி நிருபரின் அவசர அறியாத டெலிபோன் குமஸ்தா அவளும் ஒரு பெண்தான் - வேறு ஏதேதோ அலுவலைக் கவனித்துக் கொண்டு, நிருபரை நிற்கவைத்து விட்டாள். கடைசியாக, பெண் பத்திரிகைப் பிரதிநிதி, டெலிபோனில் பேச வேண்டியதை அப்பெண் குமாஸ்தாவிடம் சொல்லிக் கொண்டே, தன் தோல்பையைத் திறந்தாள். டெலிபோன் கட்டணத்திற்கு வழியில்லை! உடனே கோபம் வந்து விட்டது. கோபம் பெண் குமாஸ்தா தன்னைக் காக்க வைத்த காரணத்திற்காகத் திரும்பியது.

வெகு படபடப்புடன் தான் ஒரு பிரபல பத்திரிகை நிருபர் என்றும் செய்தி அவசரமாக அனுப்ப வேண்டுமாதலால், டெலிபோன் பேசவேண்டுமென்று வந்த தன்னை சரியாகக் கவனிக்கவில்லை. ஆதலால் உடனே நடவடிக்கை எடுக்கிறேன் பார்...! என்று கூறியவாறு தந்தி பாரத்தை எடுத்து, அது சம்பந்தப் பட்ட மேலதிகாரிக்கு ஒரு தந்தி எழுதி - அந்தப் பெண்மணியிடம் கொடுத்தாள்.

''என் அன்பரே! உடனே இந்தப் பெண் டெலிபோன் குமாஸ்தாவை டிஸ்மிஸ் செய்யுங்கள். சரியாக நடந்து கொள்ளத் தெரியவில்லை...''

அவ்வளவுதான், அந்தப் பெண் டெலிபோன் குமாஸ்தா அலறி விட்டாள். உடனே பத்திரிகை நிருபர் பெண்மணியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதோடு, அவள் டெலிபோன் பேசியதற்கான கட்டணத்தையும் தானே கட்டினுள்!

ஆனுல் என்னதான் நிருபர்கள் வெகு தந்திரமாகவும் சாமர்த்தியமாகவும் நடந்து கொண்டாலும், சில சமயங்களில் அதிகார பீடத்திலிருப்பவர்கள் பெரிய சூழ்ச்சி செய்து, செய்தி கிடைக்காது செய்து விடுகிருர்கள் அப்படித்தான் சோவியத் ரஷ்யாவில் ஸ்டாலின் மரணமடைந்த செய்தியை அறிவிக்க வெளிநாட்டு நிருபர்கள் என்ன முயன்றும் இலகுவில் வெற்றி கிட்டவில்லை. ஆம், அதிகாரிகள் தபால் நிலையங்களிலிருந்து டெலிபோன் கம்பிகளையும் மற்ற இதர பூமித்தொடர்புகளையும் துண்டித்து விட்டார்கள் என்பது பிற்பாடு தான் தெரிய வந்தது.

சொல்லப்போனுல் இந்தச் செய்தி நிருபர்கள் சமூகத்துக்கு எவ்வளவோ செய்கிருர்கள். ஆனுல் அவர்கள் புகைப்படத்தையோ உருவத்தையோ நீங்கள் எளிதில் பார்க்க முடியாது. அவர்களின் செய்தி முக்கியத்திற்குக் கீழ் இரண்டு எழுத்துக்கள் நிச்சயம் தட்டுப்படும். அவைதான் (ந.நி.) நமது நிருபர். அவர்தான் ஐயா தினசரிகளின் ஜீவநாடி! ★

கண்களுக்கு ஒளி எப்படியோ, நுரையீரலுக்கு காற்று எப்படியோ, இதயத்திற்கு அன்பு எப்படியோ, அப்படித்தான் வளரும் மனித சமுதாயத்திற்கு சுதந்திரம் இன்றியமையாதது.

— இங்கர்சால்.

இடுக்கண்? அது இல்லாத பகுதி உலகத்தில் எங்கே இருக்கிறது? துயரம்-அதனைத் தாண்டிக் குதிக்காமல் வாழ்க்கையில் எந்த வெற்றியைத்தான் பெற இயலும்?

— சாமுவேல் ஸ்மைல்ஸ்.

சிகையின் சிறப்பு

[கலைப்பித்தன்]

தலையங்கத்தைப் பார்த்தவுடன் சிரிப்பு வருகிறதா? ஆம்; உரோமத்தைப் பற்றி ஆங்கிலத்தில் எத்தனையோ 'வால்யூம்' நூல்கள் வெளிவந்துள்ளன என்று திரு. வி. க. சொன்னதை நீங்கள் கேட்டால், சிரிக்கமாட்டீர்கள்.

மனிதனுடைய தலைமயிர் மாதமொன்றுக்குச் சற்றேறக்குறைய அரை அங்குல விகிதம் வளர்கிறது. குளிர் காலத்தைக் காட்டிலும் வெயிற் காலத்தில்தான் அதிகம் வளர்கிறது. ஒரு மயிரினுடைய சராசரி வயது இரண்டு முதல் நான்கு ஆண்டுகளாகும்.

மாதமொன்றுக்கு ஒரு மனிதனுடைய தலையிலிருந்து சராசரி நூற்றிருபத்தைந்து மயிர்கள் உதிர்கின்றன. தலைமயிரை வாரிவிட்டுக் கொள்வதற்காகத் தண்ணீர் தேய்ப்பது மிகவும் கெடுதலான ஒரு பழக்கம். தலை, அகாலத்தில் வழுக்கை விழுவதற்கு அதுவும் ஒரு காரணம் என்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

இரண்டாயிரம் வருடங்கட்கு முன்னே இந்தியாவின் மீது படையெடுத்து வந்த அலக்ஸாண்டர் அரசனுடைய தந்தையார் காலத்திலேயே க்ஷவரஞ் செய்துகொள்கின்ற பழக்கம் இருந்ததாம்! மயிருள்ள மரங்கூட இருக்கிறது. அம்மரத்தில் உரோமங்கள் இருக்கின்றனவாம். அந்த ரோமங்கள் இருபதடி நீளம் இருக்கின்றன. அந்த மரம் உரோமங்கள் வாயிலாகவே ஆகாரத்தை உட்கொள்ளுகிறதாம்!

'தலைமுடி நரைத்ததினாலேயே ஒருவர் பெரியவர் ஆகிவிட முடியாது. அம்மனிதர் வீணாக வளர்ந்தவர். அவ்வளவேதான்!' புத்த பிரானின் பொன்மொழியில் தான் எவ்வளவு உண்மை பொதிந்துள்ளது!

ஒரு சமயம் ஒரு நீதிபதி, ஜின்னாவைப் பார்த்து, 'மிஸ்டர், ஜின்னா, என்னுடைய நரைமயிருக்காக வேண்டியாவது நீங்கள் எனக்கு மரியாதை செய்யக்கூடாதா?' என்று கேட்டார்.

"அவைகளுக்குக் கீழே அறிவு இருந்தாலொழிய, நான் அந்த நரைமயிர்களைக் கௌரவிக்கப் போவதில்லை" என்று சுடசுடப் பதில் கொடுத்தார் ஜின்னா.

எலியின் மயிரிலிருந்து மூதன் மூதலில் ஆடை நெய்தவர்கள், நம் இந்தியர்களே. காஷ்மீர் தேசத்தில் உயர்ந்த சால்வை ஒன்று நெய்ய பத்து கம்பளி ஆடுகளின் உரோமம் தேவைப்படுகிறதாம். 'கடவுளுடைய விருப்பம் இல்லாது ஒரு மயிரும் கீழே விழாது' என்றார் ஏசுநாதர்.

மனிதன், தன் நிலையிலிருந்து தாழ்ந்து விட்டால், அவன் எவ்வளவு கேவலமாக மதிக்கப்படுகிறான்! எதைப் போலவாம்? மயிர் தலையில் உள்ள வரையில் அதற்கு வாசனை எண்ணெய் போட்டுச் சீவிச் சிங்காரிக்கிறோம். ஆனால் அதே மயிர் தலையை விட்டுக் கீழே விழுந்து விட்டால், அதைக் கண்டு எவ்வளவு அருவருப்பு அடைகிறோம் என்பதை,

"தலையின் இழிந்த மயிரனையர்
மாந்தர் நிலையின் இழிந்தக்கடை"

என்ற குறளில் அழகுற எடுத்துக் காட்டுகிறார் வள்ளுவர். 'கவரிமான் ஒரு மயிர் கீழே விழுந்தாலும் - பின்னர் அது உயிர் வாழாது. அதேபோல் மானமுள்ளவர்கள் தங்கள் மானத்துக்கு இழுக்கு வந்தால் பின்னர் உயிர் வாழமாட்டார்கள்' என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. ★

ஹாஸ்ய சம்பவம்

ஹாஸ்ய சம்பவம் எவ்வளவோ உங்கள் வாழ்க்கையில் ஏற்பட டிருக்கும் அவைகளைப்பற்றி 100 வார்த்தைகளுக்குள் எழுதப்பட வேண்டும். பிரசுரிக்கப்படும் எல்லாவற்றிற்கும் சன்மானம் வழங்கப படும்.

ஆசிரியர்: 'திங்கள்' 17. ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

வெட்கமும வேதனையும்

கோவை ஜங்ஷனில் கிளம்ப விருந்த வண்டியில் ஏற வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது. விரைந்து சென்று, பெட்டி படுக்கையை உள்ளே வைத்து இடம் பிடித்துக் கொள்ள முயன்றேன். அங்கு இருவர் தூங்கிக் கொண்டிருந்ததால், அவர்களை சற்று கண்டிப்பான குரலில் பேசி எழுப்பி உட்காரச் சொன்ன பின், இடம் கிடைத்தது. வண்டியிலிருந்தவர்கள் என் செய்கைகளையே உற்றுப் பார்ப்பதை நான் அரைக்கண்ணால் கவனித்து வந்தேன். நிம்மதியாக ஜன்னல் ஓரம் உட்கார்ந்து கொண்டு கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டேன். இதற்குள் பக்கத்திலிருந்த ஒருவர் என்னை நோக்கி, 'மிஸ்டர்! இந்த வண்டி ஈரோட்டிற்கு இரண்டு மணி நேரத்தில் போய்விடுமா?'' என்றார்.

நான் திகைப்புடன், ''ஈரோட்டிற்கா! இது பாலக்காடு போகிற பாதையில் அல்லவா செல்லும்?'' என்றேன். வண்டியிலிருந்த யாவரும் என்னை வஞ்சம் தீர்க்கும் எண்ணத்தில் ஏகக் குரலில் 'கொல்'லென்று சிரித்தனர்.

''ஸார், உங்களுக்கு பாலக்காடு போக வேண்டுமா?'' என்றார் பிரயாணி ஒருவர்.

அசடு வழிய, ''ஆமாம்!'' என்றேன். சற்றுமுன் என்னிடம் காணப்பட்ட கம்பீரம் இப்போது எங்கோ ஒளிந்து கொண்டு விட்டது.

''சீக்கிரம் போய் அதோ அந்த வண்டியில் ஏறிக் கொள்ளுங்கள்! இது ஈரோடு மார்க்கமாக ஜோலார்பேட்டை போகும் வண்டி!'' என்றார் அனுதாபப் பிரயாணி.

குனிந்த தலை நிமிராமல், பெட்டி, படுக்கையைத் தூக்கிக் கொண்டு ஓடினேன்...ஓடினேன்...பாலக்காடு செல்லும் வண்டியை நோக்கி.

விஸ்வா,
கோவை.

ஆங்கில ஆர்வம்

நான் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் போது என்னுடன் படித்த ஒரு மாணவனுக்கு பிறரிடம் ஆங்கிலத்திலேயே பேச வேண்டும் என்ற ஆர்வம் நெடு நாட்களாகவே இருந்து வந்தது. இப்படி இருக்கையிலே, எங்கள் பள்ளி ஆசிரியர்களுக்கு விருந்து நடத்துவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆகையால் எங்களுக்குத் தெரிந்த ஒருவருடைய பங்களா ஏற்ற இடமாக இருக்கும் என்று எண்ணி அனுமதி கேட்க நாங்கள் அவரிடம் சென்றோம். சென்ற இடத்தில் ஆங்கிலத்திலேயே பேச வேண்டும் என்ற ஆர்வமுடைய என் நண்பன், இந்த பங்களா மிகவும் சௌகரியமாக இருக்கிறது இல்லையா, என்னும் பொருள் படும்படி ஆங்கிலத்தில், ''திஸ் பங்களா ஈஸ் வெரி கம்போர்

டேபீள், நோ......?''என தெளிவாகக் கேட்டான். பங்களாவின் உரிமையாளருக்கு ஒன்றும் புரியவில்லை. பின்னர் தெரிந்த உடன் யாவரும் விழுந்து விழுந்து சிரித்தோம். அம்மாணவன் அது முதல் யாரிடமும் ஆங்கிலத்தில் பேசுவது இல்லை.

என். சாமிராமகிருஷ்ணன்,
திருச்சி - 3.

ஸ்டாம்பு எங்கே?

'இந்தியன் ராயல் பார்மஸி, காலனி போஸ்டு, ஈரோடு' என்ற விலாசத்திற்கு, நாலணா ஸ்டாம்பு அனுப்பி வைப்போர்களுக்கு எங்கள் கம்பெனியின் கேட்லாக் அனுப்பி வைக்கப்படும்' — என்று நாங்கள் ஒரு பத்திரிகையில் விளம்பரம் செய்திருந்தோம்.

அதன் பலனாக ஒரு சமயம் ஒரு கடிதம் கிடைத்தது. 'நாலணா ஸ்டாம்பு அனுப்பியிருக்கிறேன். உடனே உங்கள் கேட்லாக்கை தபாலில் அனுப்பி வையுங்கள்' என்று அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. ஆனால், கவருக்குள்ளே ஒரு ஸ்டாம்புகூட காணவில்லை. அது கண்ட எனக்கு போஸ்டாபீஸ் மீதும், அதை நடத்துகின்ற சர்க்கார் மீதும் சொல்லொணா கோபம் உண்டாகியது. 'தோலிருக்க சுளை விழுங்கி' என்பது போல், கவருக்கு உள்ளே வைத்து அனுப்பப் பட்டிருந்த ஸ்டாம்பை எடுத்துக் கொண்டு விட்டார்களே என்பதுதான், என் கோபத்திற்குக் காரணம். ஆனால்...

கொலம்பஸ அமெரிக்காவைக் கண்டு பிடித்தது போல், நாங்களெல்லோரும்சேர்ந்து கடைசியாக அந்த ஸ்டாம்பைக் கண்டு பிடித்தோம். எங்கே தெரியுமா? கவருக்கு வெளியே. அந்த நாலணா ஸ்டாம்பையும் சேர்த்து ஒட்டி அனுப்பியிருந்தான், அந்த மகா புத்திசாலி! இது போன்ற மகா புத்திசாலிகள், மற்றும் இரண்டு மூன்று பேர்கள் கூட இதே முறையைப் பின் பற்றி எங்களுக்கு கடிதம் எழுதியிருந்ததை நினைத்தால், அவர்கள் மீது பரிதாபங் கொள்வதைவிட, அவர்களைப் பரிகாசம் செய்யவேண்டுமென்றே தோன்றுகிறது.

வி. ராஜப்பன்,
ஈரோடு.

யார் ஏமாந்தது?

என் நண்பன் ஒரு பெரிய வாயாடி. அவன், எங்களிடமெல்லாம், தான் ஒரு பெரிய வீரன் என்று புகழ்ந்துகொள்ளுவான். அவனுடைய புகழ்ச்சி ஒரு அளவோடு நிற்கவில்லை. நானும், என் நண்பர்களும் ஒரு நாள் அவனுக்கு நல்லபாடம் கற்பிக்க நினைத்தோம். பத்திரிகைகளில் விளம்பரப் படுத்துகிறார்களே, லைசென்ஸ் இல்லாத துப்பாக்கி, அதை நானும் என் நண்பர்களுமாக வரவழைத்தோம். குண்டுகள் பாயாமலே அதில் தீயும் புகையும் வரும். நான் ஒரு நாள் இரவு முகமூடி அணிந்து, வேற்றுடையில் நண்பனின் அறையில் துப்பாக்கியோடு நுழைந்தேன். என் நண்பர்கள் அறைக்கு வெளியே இருந்தார்கள். அறைப்பக்கத்தில் வேறு ஒருவரும் இல்லை. அந்தத் துப்பாக்கியை அவன் நெஞ்சுக்கு நேராக காட்டி, அவன் கைகால்களைக்கட்டி வாயையும் கைகுட்டையால் கட்டி விட்டேன். இப்படியே விட்டால் நகர்ந்து வெளியில் வந்துவிடுவான் என்று நாற்காலியோடு கட்டிவிட்டேன். அவன் அறையிலிருந்து சில பொருள்களையும் எடுத்துக்கொண்டு வெளியே வந்து விட்டேன் நான்.

நான் வெளியே வந்ததும் கட்டிப் போடப்பட்ட என் நண்பன் என் பெயரைச் சொல்லி, ஒரு கப் காப்பி வாங்கி வரும்படி சொன்னான். என் நண்பர்கள் என்னைப்பார்த்து சிரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். கட்டிப்போடப்பட்ட நண்பனும் அறையிலிருந்து சிரிக்க ஆரம்பித்தான். என் முகத்தில் ஈயாடவில்லை. அவன் சாமர்த்தியத்தை மெச்சாமல் வேறு என்ன செய்ய முடியும் என்னால்?

பொ. லெட்சுமணன்,
நாகர்கோவில்.

சிறந்த பொழுது போக்குப் புத்தகங்கள்

சிரஞ்சீவி எழுதிய பயங்கர நாவல்கள்

மர்மம் நிறைந்த மாயவில்லா	1	0	0
சூனியக்காரி	1	0	0
பேய் வீடு	1	8	0
சூறைக்காற்று	1	8	0
மரணயாத்திரை	1	8	0
நீதிமயக்கம்	1	0	0
காதலன் கொலை வழக்கு	1	4	0
மர்மத்தீவு	1	4	0
கல்நெஞ்சன்	1	8	0
மர்மக்கொலை	1	0	0
ரத்தப் பசி	1	4	0
பயங்கர மனிதன்	2	0	0
பறக்கும் தட்டு	2	0	0
சவப்பெட்டி	1	8	0
ஆகாசக்கோட்டை	2	0	0

மேதாவி எழுதிய துப்பறியும் நாவல்கள்

துப்பறியும் ராஜு	1	0	0
ரகசிய அறை	1	4	0
பச்சை மாளிகை மர்மம்	1	4	0
மாய மனிதர்கள்	1	4	0
சூரக்கோட்டை மர்மம்	1	8	0
மலையாளச்சீட்டு மர்மம்	1	8	0

இளவெனில் எழுதியது

புதுமணத் தம்பதிகளுக்கு	2	4	0

அரு. ராமநாதன் எழுதிய புத்தகங்கள்

கோழிப் பந்தயம்	1	4	0
பழையனூர் நீலி	1	4	0
வேதாளம் சொன்ன கதைகள்	1	4	0

வியாபாரிகளுக்கு 25% கமிஷன் உண்டு. தேவையான பிரதிகளுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும். வி. பி. யில் அனுப்ப இயலாது.

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்,

17, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு, சென்னை-2.

Regd. No. M. 6739 THINGAL November 1956